சொர்க்கவாசல்
திரைக் களஞ்சியம்
முத்து
கதை, வசனம்
அறிஞர்
அண்ணா

திரைக்கலை வெளியீடு

கிடைக்குமிடம் :

பிரேமா பிரசுரம் :: சென்னை-24

விலை ரூ. 0—8—0

கதை, வசனம்
அறிஞர் அண்ணா
பாடல்கள்
உடுமலை நாராயணகவி
டைரக்டர் A. காசிலிங்கம்



வாசலுக்குள் நுழையுமுன்....

எத்தனையோ தலைமுறைகளாக, எத்தனையோ மொழி பேசுபவர்களால், எத்தனையோ விதமாகக் கற்பனை செய்யப்பட்டு வருவது, எவராலும் உருவாக்கிக் காட்டமுடியாமல் இருந்து வருவது— சொர்க்கம்!

எத்தகைய சொர்க்கத்தின் உண்மை நிலையையும் அறிவு முறையிலே ஆராய்ந்து முடிவு காணக்கூடியவர் அறிஞர் அண்ணா! சிந்தனைச் செல்வங்களை அள்ளித் தரும் ஆக்க வழிக் கலைத் துறையாக வெள்ளித் திரையை ஆக்கி வரும் அறிஞர் அண்ணா சொர்க்க வாசலையும், அதிலே இறந்து காட்டத் திட்டமிட்டு, நாட்டிற்குத் தேவையான நல்லதொரு கருத்தோவியமாகத் தீட்டினர் அதனை அற்புதமான திரைப் படமாகத் தயாரித்திருக்கிறார்கள் பரிமளம் பிக்சர்ஸார்.

K. N. சங்கரன்,
இல்ல நூல் நிலையம்,
10/8. முத்து நகர் திருப்பூர்.



ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரின் நாடகங்களை அதியுன்னதத் திரைப் படங்களாகத் தயாரிக்கத் தனிப்பெரும் முயற்சிகள் கையாளப்படுவது போல, பெர்னாட்ஷாவின் 'ஸீஸர் அண்ட் கிளியோபெத்ரா', ஸிஸில் பி. டிமிலியின் 'ஸாம்ஸன் அண்ட் டிலைலா' போல, அறிஞர் அண்ணாவின் சொர்க்கவாசலை ஒப்புயர்வற்ற படமாக்கத் தனிப் பெரும் முயற்சிகள் கையாளப்பட்டிருக்கின்றன. அதற்காகவே, சிறந்த பண்புள்ளம் படைத்தவரான என். கே. காளியப்பா அவர்கள் தனி ஸ்டூடியோ ஒன்றையும் ஏற்றார் எனச் சொல்லுவதுண்டு.

கருத்து நிறைந்த அறிஞர் அண்ணா அவர்களின் வசனம், நெஞ்சைக் கவரும் உடுமலை நாராயணக் கவி அவர்களின் பாடல் கவனம், கலை நுட்பம் செறிந்த காசிலிங்கம் அவர்களின் டைரக்ஷன், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களுக்கேற்ற கதாபாத்திரம், மற்றும் அஞ்சலி, பத்மினி தோன்றுகின்ற 'ஸ்டார் வால்யூ', பல ஆண்டுகளாக, பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் பலரும் பரபரப்புடன் எதிர்பார்க்கும் முறையிலே மாபெரும் திரைப்படமாகத் தயாராகி வந்த விதம்,— கோவை சென்ட்ரல் ஸ்டுடியோ, சென்னை நெப்டியூன் ஸ்டூ

டியோ, ஆகிய இரு பெரும் ஸ்டுடியோக்களிலுமே ஏற்பட்டு வந்த வளர்ச்சி, படத்தயாரிப்பிலே என். கே. காளியப்பா அவர்களின் புது உற்சாகமும், 'கண்ணகி', 'வேலைக்காரி,' 'மனோஹரா' போன்ற வெற்றிப்படங்களைத் தயாரித்த எம். சோமசுந்தரம் அவர்களின் தயாரிப்புத் திறமையும் உண்டு என்பது, புரொடெக்ஷன் மானேஜர் வேல்மணி அவர்களின் பக்கலை நிர்வாகம், இத்தனையும் ஒன்று சேரும்போது, "சொர்க்கவாசல்" நாட்டிற்கே ஓர் புதுமையான அறிவியல் படைப்பாகவும் அற்புதமான படமாகவும் இருக்கும் என அனைவரும் ஒருமுகமாய் எதிர்பார்ப்பதில் அதிசயமில்லை.

சினிமாத் தணிக்கை காரணமாக படம் திரையிடுவதில் சிறிது சுணக்கம் ஏற்பட்டாலும், கதையிலோ, கருத்திலோ, வசனத்திலோ, படத்தின் சிறப்பிற்குரிய எந்த நல்ல அம்சத்திலுமே குறைவுபடாமல் படம் வெளிவந்திருப்பது, சினிமா உலகிற்கு மட்டுமல்ல, நாட்டிற்கே ஓர் நற்பேறு ஆகும்!

'சொர்க்க வாசல்' படத்தைப் பார்த்துவிட்டு வெளியே வரும்போது, ஒரு புதிய உலகில் சஞ்சரிப்பது போன்ற உணர்ச்சி ஏற்படுவதைக் காணலாம். புதுப்புதுக் கருத்துகள் நெஞ்சிலே புகுந்திருப்பது மட்டுமல்ல, புரண்டெழும் அறிவிலே மூளவிட்டு முகிழ்ப்பதையும் காணலாம். பாடத் தெரியாதவர்களின் உதடுகளிலும், திரும்பித் திரும்பிப் பாடும்படியான பாடல்கள் பொங்கி வழிவதையும் காணலாம்.

மொத்தத்தில்—

அறிஞர் அண்ணா தம் எழுத்துத் திறமையால் சொர்க்க வாசலை ஒரு திரை இலக்கியமாக ஆக்கியிருக்கிறார்.

உடுமலை நாராயணக்கவி இதனை ஒரு திரை மகா காவியமாக ஆக்கியிருக்கிறார். ஆர்ட் டைரக்டர் சேகர் இதனை ஒரு திரை ஓவியமாக ஆக்கியிருக்கிறார். சங்கீத டைரக்டர்களான எம். எஸ். விஸ்வநாதன், டி. கே. ராமமூர்த்தி, காலஞ்சென்ற சி. ஆர். சுப்பராமன், இதனை ஓர் இசை உலகமாக ஆக்கியிருக்கிறார்கள். ஒளிப்பதிவாளர்களான ஜி. துரை, வி. ஜி. நாயர், கே. ராமச்சந்திரன் இதனை ஓர் புதிய காமிரா சோணை கலைச்சித்திரமாக்கியிருக்கிறார்கள். டைரக்டர் காசிலிங்கமோ இதனை ஒரு திரைக் களஞ்சியமாகவே ஆக்கிவிட்டார்!

இத்தகையதொரு மாபெரும் படம் நாடெங்கும் திரையிடப்படும் நன்னாளிலே, பூக் கடைக்கு விளம்பரம் தேவையில்லையென்றாலும், படத்தின் சிறப்பான அம்சங்களை எடுத்துக் காட்டவும், என்றென்றும் மாபெரும் இலட்சியப் படமாக மக்கள் மனதிலே நிலை நிற்கவும், திரைக் களஞ்சியமாக இந்தப் புத்தகத்தை வெளியிடுகிறோம்; படத்தின் கண் கவர் காட்சிகள் சிலவற்றையும், சொர்க்கவாசலைச் சிருஷ்டித்தவர்களின் புகைப் படங்களையும் கூடியவரையில் சேகரித்து இணைத்திருக்கிறோம். முத்தமிழும் நிறைந்த புதுமையான படம் என்பதை எடுத்துக்காட்ட, புத்தகத்தில் திரை இயல், திரை இசை, திரை நாடகம் என மூன்று பகுதிகளாகப் பிரித்துக் காட்டியிருக்கிறோம்—இவ்வாறு திரைக் களஞ்சியமாகப் புத்தகத்தைத் தயாரித்து வெளியிடுவதற்கு, உற்சாகமும் ஊக்கமும் உதவியும் தந்த படத் தயாரிப்பாளர்களான எம். சோமசுந்தரம் அவர்களுக்கும், என். கே. காளியப்பா அவர்களுக்கும் (பட உரிமையாளர்), இப் புத்தகத் தயாரிப்பிற்குத் தேவையான சகலவற்றையும் தந்துதவிய பரிமளம் பிக்சர்ஸார் அனைவருக்கும் நன்றி!

பதிப்பகத்தார்

K. N. சங்கரன்,
இல்ல நூல் நிலையம்,
திருப்பூர்.



சொர்க்கம் எங்கே?

(தொகையறா)

அந்தரத்தில் நீர்பாய்ச்சி தருவளர்த்தே
விந்தைமிகும் கனிகொள்வார் வினையப் போலாம்
இந்த உலகம் விட்டிறந்த பின்னே
இன்புறும் சொர்க்க மெனில ஏமாந்து போவீரே!

பாட்டு

எங்கே சொர்க்கம்—எங்கே சொர்க்கம்
எங்கே சொர்க்கம்—எங்கே சொர்க்கம்
என்றே தேடுறீர் ஏமாந்தே ஓடுறீர்
அது அங்கே இல்லை இங்கே உண்டு
அன்பால் நாடுவீர்—ஒன்றாய் கூடுவீர் எல்லோரும் ஒன்றாய்
[கூடுவீர்

தன்னந் தனியே தவம்புரிந்தே சமாதியாகப் போறீரா?
சமுசாரம் பிள்ளை சுற்றத்தோடு வாழ்ந்து கொஞ்ச வாரீரா?
இங்கு வாரீரா?
அங்கு போறீரா? உள்ளம் தேறீரா—? (எங்கே சொர்க்கம்)
பஞ்சம் இல்லா நாடு உயர்
டத்தினி மேவும் வீடு வள
மிஞ்சும் வயலும் தோட்டங்காடு
மேன்மையான சொர்க்கந்தான்.
நெஞ்சில் ஈரம் நேசம் அன்பு
உள்ளார் காண்பது சொர்க்கம்—அது
இல்லார் காண்பது நரகம்
நினைவே மெய்க்கும் நிம்மதியே சொர்க்கம்—அது
நீதியின் பக்கம் இனி (எங்கே சொர்க்கம்)

கோரஸ்

நூலே சொல்லும் சொர்க்கம் மேலோகந்தான்
அறிவின்மேலோர் கண்ட சொர்க்கம் பூலோகந்தான்
வேதாந்தியின் சொர்க்கம் விண்ணாட்டிலே
நல்ல விவசாயிகாண் சொர்க்கம் இந்நாட்டிலே
பரதேசியின் சொர்க்கம் தெரியாது
மெய்ப்பாட்டாளியின் சொர்க்கம் உருவானது
சோம்பேறியின் சொர்க்கம் சுய காரியம்
நல்ல தொழிலாளியின் சொர்க்கம் பிறர் காரியம்
இங்கே உண்டு சொர்க்கம் அங்கேயில்லை உண்மை,
அங்கேயில்லை சொர்க்கம் இங்கே உண்டு
(எங்கே சொர்க்கம்)

நாநாவின் தாய்

எமிலிஜோலா எழுதிய புரட்சிகரமான நாவல். நாகரீக கணிகை நாநாவின் ஆரம்ப அந்தரங்க வாழ்க்கை இதில் விளக்கமாக சித்தரிக்கப்படுகிறது. ரூ 4-0-0

சிந்தனையாளர் பிளேட்டோ
(வரலாறும் நூல் சுருக்கங்களும்—அரு. ராமநாதன்) ரூ 1—4—0

சிந்தனையாளர் டார்வின்
(வரலாறும் நூல் சுருக்கங்களும்—ஜெகசிற்பியன்) ரூ 1—4—0

புதுமணத் தம்பதிகளுக்கு
(மணமான ஒவ்வொரு புதுமணத்தம்பதியும் படித்துப்பயன் பெற வேண்டிய ஆராய்ச்சி நூல்) ரூ. 2 4—0

அடிவானம் (தில்லை வில்லாளன் எழுதிய நாவல்) ரூ 1—4—0

கதாநாயகி (அரு. ராமநாதன்) ரூ 1-4-0

ஆசை வெள்ளம் (சமூக நாவல்) ரூ 0 12 0

உறவு முள் (காதல் நாவல்) ரூ. 0-12 0

ஔவையார் பொன்மொழிகள் ரூ. 0—8 0

பைபிள் பொன்மொழிகள் ரூ. 0-8—0

விவேகசிந்தாமணி பொன்மொழிகள் ரூ 0—8—0

புதுமுறைத் துப்பறியும் நாவல்கள்

மர்மத் தீவு (ரெங்கராஜ்) ரூ 1—4—0

காதலன் கொலை வழக்கு (,,) ரூ 1-4-0

இரட்டைக் கொலை (ஜெகசிற்பியன்) ரூ 1—4 0

மர்மக் கொலை (ரெங்கராஜ்) ரூ 1—0—0

நீதி மயக்கம் (,,) ரூ 1—0—0

(முன் பணம் அனுப்பி தேவையான பிரதிகளை M. O மூலமாகவோ, ஒரு ரூபாய்க்குட்பட்ட தொகைக்கு தபால் தலைகளை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம். வி. பி. பி. யில் வேண்டுவோர், 8 அணா தபால் தலைகளுடன் அனுப்பவும். புத்தக வியாபாரிகள் கமிஷனுக்கு விண்ணப்பிக்கவும்.)

பிரேமா பிரசுரம் :: சென்னை-24

திரை இயல்

K. N. சங்கரன், 10/8. இல்ல நூல் நிலையம், நகர் திருப்பூர்.

(கவிஞன் மதிவாணன் வீட்டுத் தோட்டம். கவிஞனின் தங்கை திலகா ஆட்டுக்குட்டியுடன் உள்ளே நுழைகிறாள். விளையாடி முடிந்ததும், நெஞ்சைக் கவர்ந்தவனை நினைத்துத் திலகா பாடுகிறாள். தங்கையின் பாடலில் மதிவாணனும் கலந்து கொள்கிறான்.)

(பாட்டு) வீரஞ் செறிந்த முகம்சுடர்போல

மதிவாணன் : திலகா...மனதிலே அப்படியே பதிந்து விட்டதோ பாடல்...?

திலகா : வெவ்வெவ்வே......

மதிவாணன் : உம். பாடு, திலகா. நான் கேலி செய்ய மாட்டேன்......பாடு......

(திலகா கூண்டைத் திறந்து கோழிக் குஞ்சுகளுக்கு ஆகாரம் கொடுக்கிறாள்.)

மதி : ம்...பாடு...பாடு...திலகா...

(திலகா பாடிக்கொண்டே பழங்கள் பறித்து, மதிவாணன்மேல் வீசுகிறாள். அவன் தலையைக் குனிந்து கொள்கிறான். அப்போது முத்துமாணிக்கம் அந்தப் பழத்தைப் பிடித்துக் கொள்கிறான். திலகா அதிசயத்தோடு பார்க்கிறாள்; முத்து மாணிக்கம், திலகாவைப் பார்க்கிறான். அவள் நாணப்பட்டு ஓடுகிறாள்.)

மதி : முத்துமாணிக்கம்...

முத்து : கவிராயர் இதைக் கொடுத்தார்!

மதி : இதே ஏட்டிலே உள்ள இரண்டு அடிகளைப்

பற்றித்தான் இங்கே, பலத்த விவாதம்.

முத்து : கேட்டுக் கொண்டுதானிருந்தேன். நண்பா, நான் பாக்கியசாலி. உன் சம்மதம் கிடைத்தால்......

மதி : திலகா சிறு பெண். தோட்டத்திலே ஆடிப்பாடிக் கிடக்கும் இள மங்கை. கள்ளமறியாதவள் !

முத்து : என் உள்ளம் சிலந்தி வலையல்ல, மதிவாணு !

மதி : நான் பரிபூரணமாக உன்னை நம்புகிறேன். வானவில்லைக் கண்டு சொக்கிடும் சிறுவனல்ல நீ. கடமை அறிந்தவன்......

முத்து : வாழ்வின் விளக்காவாள், திலகா !

(மதிவாணனின் தாய் கற்பகம் உள்ளே நுழைகிருள்.)

கற்பகம் : தம்பியா ?...வா...அப்பா! மதிவாணு, வந்தவர்களை உபசரிக்காமல், பேசிக்கொண்டே இருந்து விட்டாயோ ?...திலகா எங்கே ?...திலகா...திலகா ..

(திலகா வெளியேறுகிருள்.)

மதி : திலகா...ஓடி ஒளிந்து கொண்டாள்.

கற்பகம் : திலகாவா ? பயமற்றவள்...?

திம : பயமல்ல அம்மா பயமல்ல......இதோ...இந்த வீராதி வீரனுக்கே வெட்கம் என்ருல்......திலகாவுக்கு எவ்வளவு வெட்கம் இருக்கும் ?

* * *

(தோட்டத்தின் மற்ரேர் இடம். குளத்தங்கரையில் முத்துமாணிக்கமும் திலகாவும் உட்கார்ந்திருக்கிருர்கள்.)

திலகா : என் அண்ணுவை எப்படியோ வசமாக்கிக் கொண்டீரே, மாயக்கார...

முத்து : மாயக்காரனல்ல, திலகா ! மாயக்காரிகள் நிறைந்த இடத்திலே இருந்தவன்......ஆனல் மனதைப் பறி கொடுத்திடாதவன், தெரியுமா ?

திலகா : யார் கண்டார்கள்? ஆடவர்களின் பேச்சிலே நம்பிக்கை வைப்பது, அப்பப்பா...மிகமிக ஆபத்து.

முத்து : இப்படிச் சொல்லிச் சொல்லியே பெண்கள்

ஆடவர்களைப் பித்தராக்கி விடுகிறார்கள்! 'நான் பேதை...... நீரே என் கதி என்று நம்பியிருக்கிறேன்...உம்மைக் காணாத போது என் இரு கண்ணும உறங்காது'—என்றெல்லாம் வீணைகானம் மீட்டி, ஆடவரின் மனதை வாட்டி வதைத்து —அடிமையாககி விடுகிறார்கள்.

திலகா: பொய்...பொய்...முழுப்பொய்.... அண்ணாவைக் கேட்போமே......

முத்து: வா...கேட்போம்.

(இருவரும் வெளியேறுகிறார்கள்.)

ஃ ஃ ஃ

(சோமநாதரின் அரண்மனை. முத்துமாணிக்கத்தின் தந்தையான சோமநாதரும் அவா நணபரும் அமர்ந் திருககிறாகள்.)

சோமநாதர்: விடு...போகப் போக விபரீதம் வளர்ந்து கொண்டே போகுது...நேராகவே போய், அந்த மண்டைக் கர்வி மதிவாணனை மானமிருக்கா, மட்டுமரியாதை இருக்கான்னு கேட்டாததான் என் மனதிலே உள்ள கொதிபபுக் குறையும்.

(சோமநாதர் போகிறார்.)

ஃ ஃ ஃ

(மதிவாணன் வீட்டுத் தோட்டம். சோமநாதர் நுழைகிறார். மநதைக்குப போஷணை செய்துகொண்டிருந்த மதிவாணன், அரவம்கேடடுத திரும்புகிறன.)

மதி: ஏது, இவ்வளவு தூரம...? உட்காருங்கள்!

சோம: மதிவாணா!

மதி: கோபம் ஏன் இவ்வளவு?

சோம: மகா யோக்யன் போல் பேசுகிறாயே! துளியாவது மான ரோஷம் இருந்தால் இப்படியா காரியம் நடைபெறும்?

மதி: ஐயா. அததிரப்படாமல் பேசும் என்ன வேலையாக வந்திருக்கிறீா......அதைச் சொல்லும்!

சோம: மண்டைக் கர்வமடா உனக்கு.....பஞ்சைப் பயலே.....பராரிப் பயலே......

மதி: பெரியவரே!

சோம: 'என் மகனை வலை போட்டுப் பிடிக்க......ஒரு மாயக்காரியை ஏவிவிட்டு விட் , என்னை எதிர்த்தா பேசு கிறாய்? பொடி பொடியாக்கி விடுவேன் உன்னை......

மதி: அளவு அறிந்து பேசும், சோமநாதரே! வயது சென்றவர் என்ற காரணத்தால் உமக்குத் தக்கபாடம் காட்டாமலிருக்கிறேன்!

சோம: போக்கிரிப்பயலே, என்னிடமா துடுக்குத் தனம்?

மதி: ஏ, காட்டுக் குணம் படைத்த கிழவா...கழுத் தைப் பிடித்துத் தள்ளுமுன், நீயாக ஓடிப்போ...போ......

சோம: சீமான் வீட்டுப் பிள்ளையைச் சொக்குப் பொடிப் போட்டுப் பிடிக்கத் தங்கையை ஏவும் வெட்கங் கெட்ட வேலையை செய்பவனை மனுஷ ஜாதியிலே எவனாவது சேர்ப்பானா? ஹா......யார் அங்கே?......

மதி: உனக்கு மகனாகப் பிறந்தானே, அந்த உத்தமன் முத்துமாணிக்கம்...! ஓநாயே, ஓடிவிடு......இந்த இடத்தை விட்டு......

சோம: டே, மதிவாணா ....உன்னை என்ன கதி யாக்குகிறேன், பார்!......வெறி நாயே...பார் வேட்டைக் காரர்களே! முத்து மாணிக்கத்துக்கு வில்வக்காட்டுச் சீமான் தன் ஒரே மகளைத் தரத் தவம் கிடக்கிறார், தெரியுமா......? நானும் சம்மதம் கொடுத்திருக்கிறேன்...அதைக் கெடுத்து நாசமாக்காதே......உன்னைச சும்மா விடமாட்டேன்......

(மதிவாணனை இரண்டு ரௌடிகள் கட்டிப் போடுகிறார்கள்.)

......உன் குடும்ப யோக்கியதை என்ன? என் குடும்ப அந்தஸ்து எப்படிப்பட்டது? என் மகன் அரச சபையிலே பெரிய பதவியில் இருப்பவன்—அவனுக்கு திலகாவா மனைவியாவது...? அரச சபையினர் ஒரு பத்துப்பேர், என் மகனுடைய நண்பர்கள்—வந்தால் ஒருவேளை விருந்தளிக்க, உனக்கு வக்குண்டா, வகையுண்டா......? என்னடா இது, நீலிக் கண்ணீர்!...இதோ பாரடா அறிவற்றவனே...உன் தங்கையின் எடைக்கு எடை தங்கத்தைக் கொடுத்தால் திருமணத்துக்குச் சம்மதிப்பேன்—முடியுமாடா உன்னால்? மூடா, முடியுமா? எடைக்கு எடை தங்கமடா, தங்கம்!

தாமுடியுமா? நிலைமையை அறிந்து நட.

(மதிவாணனைத் தனியே விட்டு மற்றவர்கள் போகிறார்கள்)

ஃ ஃ ஃ

(மதிவாணன் வீட்டினுள்ளே:)

மதி: (அங்கும் இங்கும் நடந்துகொண்டே) எடைக்கு எடை தங்கம்...எடைக்கு எடை தங்கம்...!

தில்கா: (உள்ளே நுழைந்து) அப்பா, அண்ணா ஏன் இப்படி?...

மதி: தில்கா, எங்கே முத்து மாணிக்கம்?

திலகா: மாளிகைக்குச் சென்றார்...

மதி: மாளிகைக்கு...

திலகா: உடனே வந்தாக வேண்டும் என்று அரச ஆணையாம்...அழைத்துப்போக ஆள் வந்திருக்கிறான்.

மதி: யாரை? முத்துமாணிக்கத்தையா? நல்ல வேளை.. சிக்கல் தீர வழி கிடைக்கும் இனி......

திலகா: என்ன அண்ணா! பேசுவது புரியவில்லை.

மதிவா: திலகா, உன் வாழ்வு பரிபளமாக இருக்க வேண்டும் என்பதுதான் என்நோக்கம்......உன் பொருட்டு நான் எத்தகைய கஷ்ட நஷ்டமும் ஏற்கச் சித்தமாக இருப்பவன்!

திலகா: இதென்ன, அண்ணா...நான் திகில் கொள்ளும் விதமாகப் பேசுகிறாய்?

மதி: இல்லை, தேனே! திகிலூட்ட அல்ல. நாம் ஏழைகளல்லவா?

தில்கா: இன்று தானா? நெடுநாளாக.

மதி: முத்துமாணிக்கம் மாளிகை வாசி......உன் மன மாளிகையிலே அவனுக்கு இடம் கொடுத்து விட்டாய். அவனும் உன்னை மனப்பூர்வமாகக் காதலிக்கிறான். ஆனால்......

திலகா: ஆனால்...வந்ததா பேரிடி? அண்ணா! என்ன அண்ணா, அந்த ஆனால்......?

மதி: சோமநாதன் கொக்கரிக்கிறான். பாரசி

மகளாம் நீ. பஞ்சையாம் நான். அந்தச் சீமான் மகனை, திலகா, வலைபோட்டுப் பிடிக்கிறோமாம்......

திலகா : ஐயோ! என் களிப்பு கருகும் காலம் வந்து விட்டதா இவ்வளவு விரைவில்? அம்மா.

மதிவாணன் : பணம் தேடி அலையும் அவனுக்குப் பண்பு என்ன தெரியும்...? காசாசைப் பிடித்தவன்; காட்டுக் குணம் படைத்தவன்; அவன் எப்படி அறிவான் காதலின் மேன்மையை? கண்டபடி ஏசினான் என்னை— கன்னத்திலும் அறைந்தான்...! அங்கு ஒன்றும் இல்லை! திலகா—அங்கு-ஒன்றும் இல்லை. இங்கே இருக்கிறது புண். என்னை வேதனைப்படுத்தும் புண் இங்கே இருக்கிறது! (நெஞ்சைத் தொட்டு) திலகா-இங்கே. என்ன சொன்னான் தெரியுமா. உன் எடைக்கு எடை தங்கம் தரவேண்டுமாம். முத்து மாணிக்கத்தைத் திருமணம் செய்து கொள்ளும் நிலை உனக்கு அப்போதுதான் ஏற்படுமாம்—இந்தப் பொற் கொடி...இந்த முழுமதி போதாதாம்......பொன் வேண்டு மாம் பொன்! உன் எடைக்கு எடை தரமுடியுமாடா மூடா, என்று கேட்டான். மடையன்! உன் எடைக்கு எடை தங்கம் தரமுடியும் என்னால். இவனைப்போல, பல்லைக் காட்டி அல்ல—அடுத்துக் கெடுத்து அல்ல-பாதகம் புரிந்து அல்ல! என் கவிதை எனக்குக் காணிக்கை தரும், வேண்டும் அளவு - இந்தப் பணப்பித்தன் கண்டு மிரளும் அளவு. திலகா! உன் அண்ணனின் மானத்தைக் காக்கத் தயங் காதே. உன் எடைக்கு எடை தங்கம் சேர்த்தாக வேண்டும் முதலில். அது வரையில் திருமணம் இல்லை. முத்து மாணிக்கம் உத்தமனானால், உன் மீது அவன் கொண் டிருப்பது உண்மைக் காதலானால், அவன் பொறுத்திருக்க வேண்டும், திலகா ....என் முடிவு கண்டு மனவேதனை அடைவாய், அம்மா. காதலின் மேன்மை அறியாத கயவ னல்ல, உன் அண்ணன்!

திலகா : போதும், அண்ணா, போதும்! புரிந்து கொண் டேன், நிலைமையை. என் இதயம் இதைத் தாங்க வேண்டுமே...தாங்கிக் கொள்கிறேன், அண்ணா!

(மதிவாணன் போகிறான். படுக்கை அருகில் திலகா வருந்திக் கொண்டிருக்கிறாள்.)

*   *   *

(மதிவாணன் வீட்டின் வெளிப்பக்கம். முத்து மாணிக்கம குதிரையில் வருகிறன்.)

முத்துமாணிக்கம் : உடனே வரவேண்டுமென்று அரசரிடமிருந்து......

மதி : சேதி திலகா மூலம் தெரிந்ததா...சென்று வா, முத்து .

முத்து : திலகா ?

மதி : வெளியே சென்றுள். அவசர வேலை. நீ புறப்படு.

(முத்துமாணிக்கம் வெளியேறுகிறன்)

* * *

(வீட்டுத் திண்ணை. வேழ நாட்டார் வருகிறர்.)

வேழ நாட்டார் : சந்தச் சரபம் சுநதாமூர்த்தி கவிராயர் தாங்கள் தானே ?

கவிராயர் : ஆமப்பா......

வேழ நாட்டார் : கோதானம் கூடாதென்று கவிதை தீட்டியவர்.

கவிராயர் : நானே தான்........என் ? பசுக்களுக்குக் கோபமா ?

வேழ : நல்ல புலமை இருக்கிறது கவிதையைப் பாபத்துக்கு பயன்-படுததுகிறீர் .

மற்றவர்கள் : கோதானம் செய்து புண்ணியம் தேடுவது ஒரு விதமான வியாபாரம் என்கிறர் கவிராயர். தவரு ?

கவிராயர் : வேழ நாட்டாரே ! கோதானம் ஏன் செய்கிறீர்கள் ? காரணம் தெரியுமா ? காரணம் கேட்டிருக்க மாட்டீர். ஆவி பிரிந்ததும் மேலுலகம் செலலுமாம். அங்கே நெருபபு ஆறு, அதன் மீது பயிர்ப்பாலம். ஆவி அதன்மீது செலல அலையுமாம். அதற்காக நீா கோதானம் கொடுத்தால் ஆவி பசுவின் வாலைப் பிடிததுக் கொண்டு அந்தப் பாலததைக் கடக்குமாம். நமது பெரியோாகள் அப்படிச் சொல்லவிலலை. இம்மைச் செயதது மறுமைக்கு ஆம் எனுப அறவிலை வணிகன் ஆய் அல்லன என்பது பழந் தமிழ்ப் பாடல . ஆய தமிழ வளளல வாரி வழஙகினுன் ஆனுல் புண்ணியம் என்னும சரக்கு வாஙக அலல......

வேழ : வருகிறேன்......

கவிராயர் : மதிவாணன் தனது கவிதா சக்தியை மக்களுக்கு புது அறிவுதர பயன்படுத்தவில்லை. எவ்வளவோ சொல்லி வருகிறேன், வேழநாடு செல்லும்படி.

மற்றொருவர் : மதிவாணன் ஒரே விசாரமாகவிருக்கிறான் !

கவிராயர் : ஆம்...ஆனால் அவனை எப்படியும் வேழநாடு அனுப்பவேண்டும்......நான் சென்று மதிவாணனைப் பார்த்துவிட்டு வருகிறேன்.

*   *

[மதிவாணன் வீடு ; உட்புறம்]

கவிராயர் : என்ன மதிவாணா? இன்னமுமா கவலையும் கலக்கமும்? மலை குலைந்தாலும் மனம் குலையாதவன் தமிழன். தமிழ் மறக்குடிப் பிறந்த நீ, இப்படிச் செயல் மறந்து இருப்பது தகுமா?

மதி : என்ன செய்வது ?

கவிராயர் : புறப்படு, நான் சொன்னபடி !

மதி : எங்கு, பெரியவரே ! நரியூரில் இருக்கப் பயந்து கொண்டு புலியூர் புகுவது சரியாகுமா ? சோமநாதன் செல்வச் செருக்கால் என்னை இழிவாகப் பேசினான். அதற்காக, அரச சபையில் இடந்தேடக் கிளம்பினால்—

கவிரா : இடம் கிடைக்காதோ என்ற அச்சமோ ?

மதி : அல்ல, அல்ல, பெரியவரே ! அரச சபை ஆயிரத்தெட்டு கேடுகள் நடமாடும் இடம். அங்கு சென்றால், கலையை அடகு வைத்துவிட்டு, கட்டியங் கூறித்தானே பிழைக்க வேண்டும் ! சரியா, முறையா ?

கவிராயர் : நியாயமான கேள்வி ! ஆனால் உள்ளத்தில் உரம் உண்டு உனக்கு ! அரசனுக்கு அடிமையாகாமலே கலைத் தொண்டு செய்ய முடியும் ! அகமும், புறமும் பாடிய அருந்தமிழ்ப் புலவர்கள், அரசர்களைக் கண்டு அஞ்சினதில்லை. இச்சகம் பேசிப் பிழைத்ததில்லை. தவறி நடந்த மன்னரை இடித்துரைக்கத் தயங்கினதில்லை.

மதி : அந்த உள்ள உரம் வேண்டுமே—எனக்கு உண்டா ?

கவிராயர் : உண்டு ! உண்டு ! நான் அறிவேன் ! உன்

கவிதை மக்களுக்குப் புதிய விருந்தாகப் போகிறது' புறப்படு, புறப்படு.

* * *

(நடுநாடு. மடாலயம் அருளாளர், அருமறையானந்தரும் மற்றவர்களும்.)

அருளா: அருமறையானந்தரே உமது திருத்தொண்டு, நமது மதத்திலே படிந்து போயுள்ள மாசு போக்கி, மக்களை சன்மார்க்கத்திலே சேர்க்கும் விதமாக அமையவேண்டும். எங்கும் புத்த மார்க்கம் பரவி விட்டது. மன்னர் பலர் புதிய மார்க்கத்தை ஆதரிக்க முன் வந்து விட்டனர் வேத மார்க்கம் மங்கிக் கிடக்கிறது. வேழ நாட்டு வேந்தன் வெற்றி வேலன், புராதன மார்க்கத்தை ரட்சிக்க, முன் வந்தது நமது பாக்கியம்!

அருமறை: அருளாளரின் மடத்தில் புகழுக்குக் கேடு வரும்படி நடந்து கொள்ளமாட்டேன்.

அருளா: பரமன் உன் மனதைப் பரிபாலிக்கட்டும்.

(அருமறையானந்தர் விடைபெற்றுக் கொண்டு பல்லக்கில் செல்கிறார்)

(மாசிலாமணியும் மற்றவர்களும் வாழ்த்துகிறார்கள்.)

அருளாளர் வாழ்க. அருளாளர் வாழ்க!

* * *

(வண்டிப்பாதை. கவிஞன் மதிவாணன் பாடிய வண்ணம் வண்டியுடன் வருகிறான்.)

பாட்டு: கன்னித் தமிழ.

* * *

[தெருப்பக்கம்]

குரல்கள்: அருளாளர் வாழ்க. அருளாளர் வாழ்க!

பதில் குரல்கள்: அருளாளர் வாழ்க அருளாளர் வாழ்க.

எல்லோரும்: அருமறையானந்தர் வாழ்க.

* * *

(மதிவாணன் கிராமத்தை நோக்கி வண்டியில் வருகிறான்)

கிராமத்தலைவர்களில் ஒருவன்: (வண்டியை நிறுத்தும்படி கூறுகிறான்): நிறுத்து. நிறுத்து..

மதிவாணன் ' ஏன்? இந்தப் பாதை வழியாகத்தான் போகவேண்டியிருக்கு.

ஒருவன் : அப்படியானு வண்டியை ஏதாவது மரத் தடியிலே நிறுத்திவை மடாதிபதி போனபிறகு போகலாம

வண்டிக்காரன் : யாரு வர்றது?

ஒருவன் : அருமறையானந்தர்.

வண்டிக்காரன் : எங்கே போகிறார்?

ஒருவன் : அவர் வேழ நாட்டு மடாதிபதியாகி இருக்கிறார்.

இன்னொருவன் : அங்கே தான் போகிறார்

மதி : வேழ நாட்டுக்கா? நானும் அங்கேதான் போகிறேன் வேறு வேலையாக

வண்டிக்காரன் : தம்பி பாடுவது கேட்டா மயில் ஆடும்!

ஒருவன் : பாடுவாயா?

மதி : சுமாராகப் பாடுவேன் கவிதையும் எழுதுவதுண்டு.

ஒருவன் : அண்ணேன், அண்ணேன், இங்கே வாங்க, இதோ இந்தத தம்பி - (கூட்டததினர் வருகின்றனர்)...கவி எழுததாம் பாடுமாம்.

மற்றவர்கள் : ஆளைப்பாததா......

ஒருவன் : காதிலே குண்டலம் கழுத்திலே தாவடம்; பட்டாடையில்லையேன்னு யோசனையோ? நெஜமாத்தான் அண்ணேன், அருமையான கவி இநதத் தம்பி, இந்த அண்ணன் சொல்றது கேளேன்.

மற்றவர்கள் : வா தம்பி, வா. ஊருக்கு ஒரு உபசாரம் செய்யவேணும. ஒரு கவிபாடு, வா.

(அருமறையானந்தர் முன்னிலையில் மதி வாணன் பாடுகிறான்)

மதி : (பாட்டு) சமரச நிலையருள் சந்நிதானம்.

அருமறை ' பரமன் உனக்கு அரிய ஞானத்தைத் தந்திருக்கிறன் அவன் புகழ்பாடு. நிரு அருள் நாடு. உன் இசையால் நிச்சயம் இருள் நீங்கும்.

மதி : (பாட்டு) எங்கும் நிறைவான ஜோதியே
கணையிலா இன்பரசமான சேதியே
இகபரம் இரண்டிலும் எங்கும் நிறைவான
ஜோதியே
செம்பொன்னணி தவமணியே செல்வமெனும்
தருவே
க்ஷேம நலம் யாவும் உன் செயலாலே
அன்பர் சூழ் அருளகமாம் ஆதினத்தரசே
ஆண்டகை நீயே. நானே யாகும் துணை
புரியாய் (எங்கு.)

* * *

(மதிவாணன் இல்லம். முத்து மாணிக்கத்தின் படத்தின் முன்னுல திலகா ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருக்கிருள்.)

வீரம் செறிந்த முகம் சுடர்போல
மேவும் இரண்டு விழிமலர் போல.

(மதிவாணன் நுழைவதைக் கண்டதும், அவள் வெளியே ஓடி வருகிருள்.)

திலகா : அண்ணு

மதி : திலகா. என்னதான் சொல்லு. எவ்வளவு தான் அலங்காரம் செய்தாலும் இந்தக் கூடத்திலே ஆடம்பரம் தெரிகிறதே தவிர, ஆனந்தம் ஏற்படவில்லை.

தில : ஆனந்தம் இல்லையா ? என்ன அண்ணு, இது ? நமது மாளிகையைக் கண்டு மகிழாதவர் இல்லை. பாரண்ணு, நான் எப்படி இடத்தை அலங்காரமாக்கி இருக்கிறேன்...

மதி : அழகு, அலங்காரம், ஆடம்பரம், எல்லாம் இருக்கிறது! மணம் இல்லையே, திலகா! மணம் இல்லை. நமது மலர்த் தோட்டத்திலே என்ன மணம், என்ன கவர்ச்சி! இந்த நிம்மதி...அந்த அமைதி...அந்த வனப்பு.

கற்பகம் : மதிவாணு, கேளடாப்பா, போதுமா இவ்வளவு ஆபரணம் என்று? இவள் செய்து கொள்ளுகிற அலங்காரத்தைக் கண்டு வேழ நாட்டுப் பெண்களே பொருமைப்படுவார்கள்!

(திலகா கற்பகத்தை விட்டுவிட்டுப் போகிருள்.)

மதி : என் தங்கைக்கு ஆபரணம் வேண்டுமா, அம்மா? ஆடம்பரக்காரர்கள் வாழும் வேழ நாடு இது! இங்கே இவ்விதம் இருக்கத்தான் வேண்டும்!

கற் : (வெளியே போய்க் கொண்டு) மதிவாணா! இப்படி செல்வமாக வாழாமல் கிராமத்திலே குடிசையிலே இருந்தது திலகாவுக்கு பிடிக்குமாடா...?

திலகா : என் அண்ணா இருக்கிறார். எனக்கு என்ன குறை? எதுவும் கேட்பேன், கிடைக்கும்! அப்படித்தானே, அண்ணா?

மதி : உன் தலை மீதினிலே அழகாய் அணியும் விதமாய் புதுமண மலரால்...!

திலகா : (அவன் வாயை மூடி) அந்தப் பாட்டு வேண்டாம். தெரிகிறதா? அண்ணா...இப்போது...!

கற்பகம் : உன் அண்ணன் பெரிய இசைவாணன!

திலகா : இது என்ன பிரமாதம் என்கிறாய், அம்மா? பாரேன், அண்ணா ஆஸ்தான கவியாகப் போகிறார்......என் அண்ணன் காலடியில் தங்கத்தைக் கொண்டு வந்து கொட்டப் போகிறார்கள்!

மதி : தங்கம்! எடைக்கு எடைத் தங்கம்—

(மதிவாணன் திலகாவைத் தங்கத்தால் எடை போடுகிறான். ஒரு தங்கக் கட்டி எடைக்குக் குறைகிறது- பெட்டிகாலியாக இருக்கிறது.)

(மதிவாணன் துக்கமாக இருக்கிறான். தெருவில் பஜனைக் கோஷ்டி 'எங்கும் நிறைவான ஜோதியே' என்றபாட்டோடுபோகிறார்கள்.)

* *

(திண்ணை இரண்டு பண்டாரங்கள் உரையாடுகிறார்கள்)

ஒருவர் : இப்போதல்லவா வேழ நாடு செழிப்பாக இருக்கிறது? மக்கள் பக்திப்பரவசத்தைப் பருகி ஆனந்தமாக இருக்கிறார்கள்!

இன்னொருவர் : எல்லாம் மதிவாணன் இசை தந்த செல்வமப்பா! மக்களை எல்லாம் பக்திமான்களாக்கிவிட்டார்! கலை என்றால் சாமான்யமா? அதன் சக்தியே சக்தி!

* * *

(வெற்றிவேலரின் அரண்மனை. அரசர் வெற்றி வேலரும் குழந்தை மரகதமணியும்.)

மரகதமணி : டான் !

வெற்றி : சதிகாரர்களின் பேச்சை ஏன் நம்பி நாச மாகிறார்கள் மக்கள் ?

அமைச்சர் : பசி, பட்டினி, இவைகளைக் காட்டித் தூண்டுகிறார்கள் தந்திரக்காரர்கள்......

வெற்றி : கட்டுக் காவலை மீறும் துணிவு பிறந்து விட்டது.

(மடாலயதது மாசிலாமணி முதலியோர் நுழைகிறார்கள்.)

மாசி : யாருக்கு ? மக்களுக்குத்தானே ? ஏன் துணிவு பிறக்காது ? பாப புண்ணியம் பற்றிய பயம் குறைந்து விட்டது !

மரக : அப்பா, நான் அங்கே போகிறேன் ! எனக்கு பயமா இருக்கு, இவனைப் பார்த்தா...

வெற்றி : போ, கண்ணே. (மரகதம் போகிறாள்.) போய் விளையாடு. டே, போ கூட...மான் குட்டி...

அமைச்சர் : புது மார்க்கம் புயல் போலக் கிளம்பி விட்டது. பழைய முறை அழிந்து விடும் போலிருக்கிறது.

மாசி : நாம் காலம் அறிந்து பணி புரியா விட்டால் நிச்சயம் அழியும் !

வெற்றி : கடுமையான சட்டம் இருக்க வேண்டும்...

மாசி : போதாது வேந்தே, போதாது. மக்களின் மன மாசு போகவேண்டும். மடாலயத்திலே புதிய திட்டம் தயாராகிறது.

அமைச்சர் : அருமறையானந்தரின் உழைப்பு பலன் தருகிறது !

மாசி : வேந்தரின் ஆதரவு கிடைத்துவிட்டால் விதண்டா வாதிகளை ஒழித்துவிட முடியும்—சதி தானகச் சாயும்.

வெற்றி : என் ஆதரவு எப்போதும் உண்டு.

மாசி : பிரசாரம் வேண்டும் பழைய மார்க்கத்துக்கு...

அமைச்சர் : பணம் தானே ? தருகிறோம்.

மாசி: கலை மூலம் நமது காரியத்தைச் சுலபத்திலே முடித்துவிடலாம், வேந்தே மதிவாணரின் மதுரகீதம் மக்களைச் சொக்க வைக்கிறது!

வெற்றி: கேள்விப்பட்டேன். அருமையான இசைத் திறமை! அமைச்சரே, மதிவாணனை ஆஸ்தான கவியாக நியமித்தால் என்ன?

மாசி: அதைக் கூறவே வந்தேன்.

வெற்றி: இதிலென்ன கஷ்டம்?

மாசி: மண்டலத்தின் புகழ் பரவும்! மார்க்கம் தழைக்கும்.

(வேலைக்காரன் கொண்டுவந்த கோப்பையை மாசிலாமணி வெறுத்துப் பார்க்கிறான்)

அமைச்சர்: பருகவில்லையா, பழரசம்?

மாசி: இல்லை. பூச்சி விழுந்துவிட்டது!

(அமைச்சரும் மாசிலாமணியும் போகிறார்கள்.)

வேலைக்காரன்: பூச்சி, புழு விழுந்தாததானே நமக்கு கிடைக்குது இந்தப் பானமெல்லாம்! பூச்சி புழுக்களே வாழ்க. வாழ்க!.

* * *

(வெற்றிவேலரின் அரச சபை)

வெற்றி: இன்று முதல் மதிவாணரை நமது ஆஸ்தான கவியாக நியமித்திருக்கிறோம்! இதோ அதற்கான பட்டயம்.

(மதிவாணன் எழுந்து சென்று பட்டயத்தை எடுத்துக் கொள்கிறான். மரகதம் கரகோஷம் செய்கிறாள். எல்லோரும் கைதட்டுகிறார்கள்.)

(அரண்மனைத் தோட்டம். கவிஞன் மதிவாணனும் அரசர் மகள் குழந்தை மரகதமும்)

மதிவாணன்: நீ பாடமாட்டே.

மரகதம்: என்ன பாட்டு மாமா, பாடறது?

மதிவாணன்: உனக்குத் தெரிஞ்ச பாட்டைப் பாடு.

மரகதம்: பாடட்டுமா?

மதிவாணன்: ஊம்......

மரகதம் : சுட்ட சாம்பல் பூசிவிடுவார் சாமியாருமல்ல
சுருதியை விட்டுப் பாடிடுவார் பாகவதருமல்ல
கட்டவிழ்த்து விட்டு விட்டால் கண்டபக்கம் திரிவார்
காகிதமும் தின்'பாரவரைக் கண்டு சொல்லு மாமா ?
இவரு யாருன்னு சொல்லுங்க மாமா, பார்ப்போம்...

மதிவாணன : நீயே சொல்லு .

மரகதம் : ஓ... மாமாவுக்குத் தெரியலே. கழுதை மாமா......கழுதை......

மதிவாணன் : சீ. குறும்புக்காரப் பெண்ணு! உன்னைப் பாட்டுப் பாடச் சொன்னேனா, விடுகவிப் பாடச் சொன்னேனா ?

மரகதம் : மாமா, மாமா, எனக்கு ஒரு நல்லபாட்டு சொல்லிக் கொடுங்க, மாமா.

(இருவரும், நிலவைநோக்கி நடந்து பாடுகிறார்கள்.)

நிலவே நிலவே ஆடவா.
நீயன்புடனே ஓடிவா

[வேறு காட்சி. வெற்றி வேலர் அரண்மனையில்]

அமைச்சர் : வேந்தே . தங்கள் உடலிலே புதிதாக ஒரு மினுமினுப்பு தெரிகிறது !

வெற்றி : பைத்தியக்காரர் !...தைலம் தடவினால் மினுமினுப்பு இராதா ?

அமைச்சர் : அது மட்டுமல்ல, உடற்கட்டும் வளமாகி வருமாம வைத்தியர் சொன்னார் .

வெற்றி . எனக்கும்தான் சொன்னார். இது வீண் வேலே. அடிக்கடி வேட்டையாடினால் போதும் . உடலும் வளமாகும. உள்ளமும் சுறுசுறுப்பாகும.

(அபபோது வேலேக்காரி பழததட்டோடு போகிறாள்.)

அமைச்சர் : கலே விழாவாம், வேந்தே, சோலே நாட்டில்!

வெற்றி : அழைப்பிதழோ ?

அமைச் : ஆமாம, அரசே . வேழ நாட்டு கலேவாணர்களே அவசியம அனுபபவேண்டுமாம் !

வெற்றி : சரி, வேறு முககியமான ஓலேகள் ?

அனுமச்சர் : வேந்தே, இதைவிட முக்கியமானது வேறு என்ன இருக்க முடியும்? நமது மதிவாணன் கலை விழா விலே வெற்றி பெற்றால்......வேழ நாட்டின் புகழ் பரவும்.

வெற்றி : கலை விழாவிலே வெற்றி பெற்றுவிட்டால் போதுமா ?

அமைச் : போதாது. ஆகவேதான் அரசே - தங்கள் திருமணத் திட்டத்தையும் இதே சமயம் நிறைவேற்றிவிட வேண்டும் என்று கூறுகிறேன் சோலை நாட்டில் ஒரு கன்னி, கட்டழகி, குமாரதேவி ஆட்சி தெரியுமே தங்க ளுக்கு - நாடு வளமானது, வேந்தே...வேழ நாட்டைவிடப் பெரிது அளவில்.

வெற்றி : வளமான நாடுதான் ஆனால் அரசி அகம் பாவக் காரியாம. அரசர்கள் பலரை அவமதித்தாளாம்.

அமைச் : வதந்தி, வீணான வதந்தி. எட்டாப்பழம் எட்டிப்பழம் என்பார்களே, அதுபோல.

வெற்றி : நமக்கு மட்டும் குமாரதேவியின் சம்மதம் கிடைக்கும் என்று எப்படி நம்புவது ?

அமைச் : ஏற்பாடு செய்ய முடியும், வேந்தே! கலை விழாவே அதற்குத் துவக்கம்.

வெற்றி : முதலில் குமாரியின் உண்மையான குணம் தெரியவேண்டும எனக்கு...

அமைச். மதிவாணன் அதை அறிந்து கூறுவான். அவனிடம் நான் என் திட்டத்தை விளக்கமாகக் கூறி அனுப்பி வைக்கிறேன்.

[மதிவாணன் வீடு]

திலகா : அண்ணா. அண்ணா. கலைவிழாவுக்குப் போகி றாயாமே... சோலை நாட்டுக்கு? சோலை நாட்டிலே புதுவித மான நகைகள் ஆடைகள் இருக்கும்......

மதிவாணன் : இருக்கும். அதெல்லாம் உனக்கு வேண் டும். அவ்வளவுதானே ?

திலகா : ஆமாம், வேண்டும்—என், கேட்கக் கூடாதா? என் அண்ணனை கேட்காமல் வேறு யாரைக் கேட்பது?

மதி : உன் காதலனை.

திலகா: போங்கண்ணா, கேலிதான் எப்போதும்!

கற்பகம்: (வந்து கொண்டே) மதிவாணா, திலகாவின் திருமணத்தை முடித்துவிட வேண்டுமடா சீக்கிரம்.

மதி: ஆமாம்மா! சோலை நாடு போய்த் திரும்பியதும் முதல் வேலை அதுதான். அவனும் நிரம்பக் கோபித்துக் கொள்கிறானாம்

(மதிவாணன் வெளியேறுகிறான்.)

* * *

[அறநெறிக் கழகம்]

கவிராயர்: என்ன சொல்லித்தான் ஏமாற்றுகிறார்கள் எத்தர்கள்?

பூங்காவனம்: பழங்காலப் பெருமையைக் கூறித்தான்.

கவி: ம்...பழங்காலம்! பழங்காலத்திலே என்ன, பாம்பு கடித்தால் மக்கள் சாகாமலிருந்தார்களா? தேள் கொட்டினால் துடிக்காமலிருந்தார்களா? நல்லதும் கெட்டதும் எந்தக் காலத்திலும் இருக்கத்தானே செய்கிறது? நமது புத்தியில் தெளிவு வேண்டும். அதுதானே முக்கியம்

பூங்கா: ஆமாம். ஆனால் சொக்கி விடுகிறார்கள் இசையில்! சொல்வதையெல்லாம் நம்பிவிடுகிறார்கள......

* * *

[தெருவில் கூட்டம்]

பூங்காவனம்: தெரிகிறதா, ஐயனே...

கவிராயர்: யார் அப்பா, இளவரசன் போல?

பூங்கா: இளவரசனல்ல, இசை அரசன் மதிவாணன்

கவி: அவனா?

பூங்கா: அரசன் அவனுக்குத் தர்பார் உடையணியும் அந்தஸ்து அளித்திருக்கிறார்.

* * *

[சோலை நாட்டு அரண்மனை. அந்நாட்டரசி குமார தேவியும் அவளது தாதி செந்தாமரையும உரையாடு கிறார்கள்.]

குமாரி: செந்தாமரை! இந்த ஆண்டு கலை விழா அதிகச்

சிறப்பாக இருக்கும். இதோ பார்த்தாயா, இது தொண்டை நாட்டுக் கலைவாணர் ஓலை இது அடேட வேழ நாடு. வேழ நாட்டிலே கூடவா கலை....

செந்தா: அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?

குமாரி: வேழ நாட்டு வேநதன் வெற்றிவேலன் மண்ணைசப் பிடிததவன. கலையை எப்படி வளர்க்க முடியும்? என்ன அதிசயமோ தெரியவில்லை, வேழ நாட்டிலிருந்து மதிவாணன் என்ற கலைஞன் வருகிருனம

செந்தா: பலர் ஏற்கனவே வந்து விட்டார்கள் தேவி... கலை விழாவுக்கான ஏறபாடே கண் கொள்ளாக் காட்சியாக இருக்கிறது.

குமாரி: கள்ளி, பார்த்துவிட்டு வந்து விட்டாயா நீ மட்டும்?

செந்தா: ஆமாம், தேவி தாங்கள் பூசனைறயைப் பார்வையிடப் போனீர்களே......

குமாரி: அபபோது தலைவலி என்று சொன்னயே!

செந்தா: வேறு என்ன சொல்வது தேவி?

குமாரி: என்னை ஏயததுவிட்டா போயிருந்தாய்? சரி இரு, இரு, நான் போகப்போகிறேன், கலை விழாக் காட்சிகளைக் காண...இங்கேயே நீ இருக்க வேண்டும்..

செந்தா: தனியாகத்தான்...?

குமாரி: தனியாகததான். ஏன், ஏனடி செந்தாமரை வளை அணிந்த கரமாயிற்றே என்கிருயா?

செந்தா: நான் சொல்வேனு, தேவி? அந்தக் கரம் வாள் ஏந்தி வீரத்தை விளக்கியதைக் கண்டவள் அல்லவா? தேவி இபபோதே புறப்படுவதாகத தீர்மானமோ?

குமாரி: ஆமாமடி, ஆமாம். இப்போதேதான். ஆனல் இப்படி அல்ல.

(வெளியே போகத் திரும்புகிருள்)

*　　　　*

(சோலை நாட்டில் கலைக் கண்காட்சி. மதிவாணன நுழைகிருன்; யுவர்கள் நுழைகிருர்கள். ஆண் ஆடை புனைநது வாலிபன்போல நாட்டரசி குமாரி வருகிருள.)

மதிவாணன் : அழகான ஓவியம்...தீட்டியவர் திறமைசாலி...

ஒருவன் : சாமான்யமான திறமைசாலியல்ல...இது போலத் தீட்டக் கூடியவர்கள் வேறுயாரும் இருக்க முடியாது...

மதி : அப்படிச் சொல்லிவிடக் கூடாது...

வாலிபன் : குறை என்ன காண்கிறாய் இதிலே...?

மதி : நிலவு மேலே...

வாலிபன் : ஆமாம்...பால் வண்ண நிலவு..

மதி : குளம் கீழே.

வாலிபன் : ஆமாம்...நிலவின் ஒளி அதிலே அழகாகத் தெரிகிறது...

மதி : அல்லி மலர்ந்திருக்கிறது...

வாலிபன் : ஏன், அழகாக இல்லையா அல்லி...?

மதி அற்புதமாக இருக்கிறது...தம்பி, அற்புதமாக இருக்கிறது . ஆனால், அதோ தாமரை பார்த்தாயா...?

வாலிபன் : அது மட்டுமென்ன, அழகாக இல்லையோ ?

மதி : கண் படைத்தவன் எவனும் அபபடிக் கூற மாட்டான்...ஆனால் மேலே நிலவு, கீழே குளத்தில் தாமரை கதிரவனைக் கண்டு கமலம் மலரும், நிலவைக் கண்டு அல்லி மலரும்.

வாலிபன் : உண்மைதான்...

மதி : தாமரை மலர்ந்த நிலையில் இருக்கக் கூடாது. குவிந்திருக்க வேண்டும்...

வாலிபன் : மன்னிக்க வேண்டும......தாங்கள் கலை விழாவுக்கு வந்திருக்கிறீரா ?...இசைவாணரா...?

மதி : பாடத் தெரியும், வேழ நாடு...

வாலிபன் : ஓவியத்தை நானும் தான் கூர்ந்து பார்த்தேன்...இந்தக் குறை எனக்குத் தெரியவேயில்லை...

மதி : ஓவியம் அழகாக இருப்பதால குற்றம் சுலபத்தில் தெரியாது...ம்...யார் தம்பி நீ...?

வாலிபன் : யாரா ?...தம்பி தான் ! வருகிறேன்...

(வாலிபன் போல ஆடைதரித்து வந்த அரசி குமாரதேவி மெல்ல கவிஞன் மதிவாணனிட மிருந்து நழுவிச் செல்கிருள்.)

* * *

(மடாலயம். அருமறையானந்தரும் மாசிலாமணியும்)

அரும: சொர்க்கவாசல். பெயரைக் கேட்டதும் மக்கள் சொக்கி விடுவர்...உள்ளே ஒரு புறம் கைலாயம்...

மாசி: ஆஹா...அருமையாக இருக்கும்...

அரும: ஓர்புறம் வைகுந்தம்

மாசி: அரியும் அரனும் வேறு வேறு அல்ல என்ற கோட்பாட்டை விளக்க—

அரும: ஆமாம்...பிரமம லோகம், இந்திர லோகம், எல்லாம் புராண வர்ணனைப்படி அமைக்கவேண்டும். இங்கு கற்பக விருட்சம், இது காமதேனு...பளிங்கால் உருவம்...

மாசி: மக்கள் பரவசமடைவர் குருநாதா...

அரும: செலவு ஏராளமாகுமே...காணிக்கை கிடைக்குமா?......

மாசி: சந்தேகமா? காணிக்கைச் சீட்டுகள் இலட்சக் கணக்கிலே தயாரித்து, நமது உபதேசியார்கள் மூலம் நாடெங்கும் பரப்பினல், காணிக்கை குவியும்

அரும: நல்ல யோசனை காணிக்கைச் சீட்டு...உம், பெயர் அவ்விதம் இருப்பதைவிட, அருள் சீட்டு என்று இருந்தால் நல்லது...

மாசி அருள் சீட்டு. ஹா...ஹா...அருமையான பெயர். வேந்தனிடம் நானே முதல சீட்டு தருகிறேன்.

அரும: நடுநாட்டரசருக்கு நான் இது பற்றி ஓலை அனுப்புகிறேன்.

மாசி: தங்கள் திருமுகம் கண்டதும் நடுநாட்டரசர் தாராளமாகக் காணிக்கை தருவார்.

(அரண்மனை. 'சொர்க்க வாசலின் குறிப்புப் படம் தெரிகிறது மன்னர் வெற்றி வேலரும் மாசிலாமணியும் உரையாடுகிருர்கள்.)

மாசி: இங்கு கைலாயம்...இங்கு வைகுந்தம்,...

வெற்றி : ஆமாம், பிரம்மலோகம்... இந்திர லோகம்... இதெல்லாம் என்ன ?

மாசி : சொர்க்க வாசல்...மன்னா.. மக்கள் கண்முன் சொர்க்கலோக மகிமையைக் காட்ட விரும்புகிறார் அரு மறையானந்தர்...இந்தத் திட்டப்படி.

(மன்னன், சிற்பி, இருவரும் மாசிலாமணி யிடம் வருகிறார்கள்.)

மாசி : ஒரு பிரம்மாண்டமான ஆலயம் அமைத்து. ..

சிற்பி : புதிய ஆலயமா ?...

மாசி : பல கோயில்கள் உள்ளன...ஆனால் இது பத் தோடு பதினொன்று அலல...நமது புராதன மார்க்சப் பாது காவல் கோட்டை கைலாயதை யார் கண்டார்கள்? வைகுந்தம் யார் கண்டது? என்று பேசும் விதண்டா வாதிகளின் வாய்க் கொழுபபை அடக்க, இந்த ஏற்பாடு. முட்டாளே. இதோ பார். இவ்விதம்தான் கைலாயம் இருக்கும் வைகுந்ததின் வசீகரத்தைப் பார் என்று ஏடுகளைக் காட்டுவதைவிட இபபடி ஒரு இடமே அமைத் துக் காட்டினால், பாமர மதியினரும் புரிந்து கொள்வார் களல்லவா ?

வெற்றி : உண்மை தான்

மாசி : உள்ளததிலே உயர்நத எண்ணம் மலரும்.

சிற்பி : புதிதாக இதுபோலக் கட்டத் திட்டமா ?

மாசி : திரு அருளின் துணை கொண்டு அருமறை யானந்தர் இந்தப் புனிதக் காரியத்தைத் துவக்கி விட்டார்.

வெற்றி : அருமையான ஏறபாடு.. நானே பிரபுக் களுக்குச் சொல்கிறேன் சொர்க்க வாசல் மகிமை பற்றி. தாராளமாகக் காணிக்கை தருவர்...

மாசி : அவ்வளவு சிரமம் தாங்களுக்குத் தர வேண்டுமா ?

வெற்றி : சிரமமா? என் கடமை அல்லவா ?

சிற்பி : பிறகு வருகிறேன் மன்னா, வணக்கம்.

மாசி : காணிக்கை தரவேண்டும் என்று...தாங்கள் கூறுவதைவிட......

வெற்றி: *வேறு முறை யிருந்தால் சொல்லுங்கள், செய்வோம்...*

மாசி: *யாரார் காணிக்கை செலுத்தி அருள் சீட்டு பெறுகிறார்களோ, அவர்களுக்கு அரசாங்க மரியாதை, பதவி உயர்வு இவை தரப்படும் என்று ஒரு திட்டம் ஏற் பட்டு விட்டால.*

வெற்றி: *இதிலென்ன சிரமம் ..? அருள் சீட்டுதான் இனி நமது ஆதரவு கோருவோர் காட்டவேண்டிய அனுமதிச் சீட்டு என்று கூறி விடுகிறேன்.*

மாசி: *போதும் வேந்தே, அந்த ஒரு ஏற்பாடு போதும் குருநாதரின் திட்டம் நிறைவேற.*

(*மன்னன் செல்கிறான், மாசிலாமணியை விட்டு*)

வேலையாள்: *ஒரு சிறு சந்தேகங்க...படத்தைப் பார்த்ததிலே...*

மாசி: *மரமண்டே, என்னடா சந்தேகம்?*

வேலையாள்: *யாருக்கும் ஏற்படக் கூடிய சந்தேகந் தாங்க ..*

மாசி: *சொல்லடா, என்ன சந்தேகம்?*

வேலையாள்: *சொர்க்க லோகப் படத்திலே, கைலாயம் வைகுந்தம், அந்த லோகம், இந்த லோகம் எல்லாம்தான் இருக்குது... ஆனா...*

மாசி: *ஆனா...என்னடா, ஆனா...*

வேலையாள்: *சொர்க்க லோகம் எப்படி எப்படி இருக்கும் என்றுதான் படம் காட்டுதே தவிர, அங்கே போகிற பாதை தெரியலிங்களே, படத்திலே......*

மாசி *போடா, போக்கிரி!*

வேலையாள்: *பாதையைக் காட்டாத காரணம் என் னங்க...?*

* * *

[சோலைநாட்டில் கண் காட்சிசாலை. ஒரே ஜனக்கும் பல்; மதிவாணன் நுழைகிறான்: ஒருவன் ஈட்டியை வீசுகி றான். யுவன் (வாலிபன் ஆடையில் குமாரி) நுழைகிறான்.

மதி: *தம்பி, வந்து விட்டாயா? வா... வா...*

வாலிபன்: நான் வருவேனென்று..

மதி: எதிர்பார்த்துக் கொண்டுதானிருக்கிறேன்...

வாலிபன்: ஈட்டி எறியலாமே...

(மதிவாணன் ஈட்டி எறிகிறான் பிறகு வாலிபன் ஈட்டி எறிகிறான். சிலையில் குறிப்பிட்ட புள்ளியில் ஈட்டி பாய்கிறது. கைதட்டல் எதிரொலிக்கிறது...)

மதி: கெட்டிக்காரனடா நீ.

வாலிபன்: என்ன பரிசு எனக்கு...?

மதி: எனக்குக் கலை விழாவில் கிடைப்பதில் பாதி...

வாலிபன்: நிஜமாகவா...

மதி: நிஜமாகத்தான்... வா...

வாலிபன்: ஊஹூம்... நாளை மாலை...

(வாலிபன் நழுவிச் செல்கிறான்)

* * *

[மடம். அருமறையானந்தர் மாசிலாமணி, பிரபுக்கள், வீற்றிருக்கின்றனர் அருள் சீட்டு வழங்கப்படுகிறது.]

கவிராயர்: மோசம் அக்ரமம... அருள்சீட்டு பெறாதீர்! அறிவை இழக்காதீர்... அன்பு, அறம், அஹிம்சை தொண்டு, தூய்மை, இவைகளைத்தான் ஆண்டவன் கேட்கிறான். அருள்சீட்டு அல்ல...மோசாண்டிகளின் பேச்சைக் கேட்டு ஏமாறுதீர்கள்... அருள்சீட்டு வாங்க வேண்டாம்... விழித்தெழுங்கள்... கொளுத்துங்கள்... .

பண்டாரத்தின் குரல்: பைத்தியம்.... கிழப்பைத்தியம்.

கவி: நானா?

பண்டாரம்: நாங்களா? பாருங்கள்... பாருங்கள்... நம்மைப் பைத்தியம் என்கிறான்... துரத்துங்கள்....

(கவிராயரை மக்கள் கூட்டம் துரத்துகிறது)

* * *

[ஆற்றங் கரையில் படகுக்கருகில் மதிவாணனும், யுவன ஆடையில் குமார தேவியும்]

மதிவாணன்: வா விடுதிக்கு...? அடே, இதென்னடா வெட்கம... இளமங்கைபோல...ஆனால் தம்பீ, அந்த அரும்பு மீசை மட்டுமில்லை, நீ இளமங்கைபோலவேதான இருப்பாய் வா... வா...

(இன்ப நிலையத்தில். வாலிபனாக மாறிய குமாரியுடன் தனித்திருக்கும் மதிவாணன் பாடுகிறான்)

(பாட்டு: எங்கும் இன்பமே உலகெல்லாம் இன்பமே)

மதி : (வாலிபன் முதுகில் தட்டிக்கொடுத்து) எப்படி?

வாலிபன் : இசையில் மட்டுமல்ல, உன்பேச்சு, பார்வை எல்லாமே இன்பம் தருவதாகத்தான் இருக்கிறது! இந்த இன்பத்தை நான் அரண்மனையில்...

மதி : அரண்மனை வாசியா?

வாலிபன் : (திடுக்கிட்டுப் பிறகு நிதானித்து) ஆமாம்! அரண்மனைச் சேவகன்!

மதி : ஓஹோ, அதனால்தான் அலங்காரம் இருக்கிறது உன் உடையில். குறும்பு இருக்கிறது உன் பேச்சிலே.

வாலிபன் : சரி நேரமாகிவிட்டது... நான் வருகிறேன்.

மதி : போகவாவது...! தம்பீ, இதோபார் நான் கலை விழாவுக்காக மட்டும் சோலைநாட்டுக்கு வரவில்லை. வேறு காரியம் இருக்கிறது. உன் உதவி வேண்டும்.

வாலிபன் : வேறு காரியமா?

மதி: ஆமாம். எங்கள் வேழநாட்டு மன்னர் திருமணம் விஷயமான வேலை தம்பீ இந்த நாட்டு அரசியை உனக்கு நன்றாகத் தெரியுமே...

வாலிபன் : தெரியும்... அரண்மனைச் சேகவன்தானே நான்?

மதி : ஆம்... அழகியா உங்கள் ராணி?

வாலிபன் : அழகி என்றுதான் எல்லோரும் கூறக் கேட்டிருக்கிறேன்.

மதி : உன் அபிப்பிராயம் என்ன? அதைச் சொல்லடா தம்பீ! நீ நல்ல ரசிகன். அதனால்தான் கேட்கிறேன். அரசி அறிவுள்ளவளா?

வாலிபன் : எங்கள் அரசி அழகுள்ளவள், அறிவுள்ளவள், வீரமுள்ளவள், வெற்றிவேலர்களை விரும்பாதவள்!

மதி : யாரிடமாவது காதல்...?

வாலிபன் : மனதைப் பறிகொடுத்து விட்டாள்!

மதி : யார் அந்தப் பாக்கியசாலி?

வாலிபன் : உன் வயதுதான் இருக்கும்.

மதி: ஏது, என்னைப்போலவே இருப்பான் என்று கூறிவிடுவாய் போலிருக்கிறதே.

(வாலிபன் அங்கிருந்து போக முற்படவே, மதிவாணன் பிடித்திழுக்கிறான்)

வாலிபன் : சரி, சரி...நான் இருக்கிறேன் ! என்னைத் தொல்லை செய்யாதே.

மதி : ஆ......இது நல்ல தம்பிக்கு அழகு. உட்கார், இன்று இரவு இங்கேதான் விருந்து. காலையில்தான் விடுதலை. உனக்கு !

வாலி : ஐயய்யோ, முடியாது! போய்த்தீர வேண்டும்!

மதி : சரி. புறப்படு. உன் வீட்டுக்கே போவோம். எனக்கு அங்கு விருந்து !

வாலி : இதேதடா சங்கடம் ! என்னுடன் வரக் கூடாது !

மதி : (வாலிபன் முதுகில் தட்டிக்கொடுத்து) போக் கிரியடா நீ. நீயும் இங்கே இருக்க மறுக்கிறாய். நானும் உன் வீட்டுக்கு வரக்கூடாது என்கிறாய் !

வாலி : என் நிலையறியாமல் பேசினால், நான் என்ன செய்யமுடியும் ? நான் போய்த்தான் தீரவேண்டும்.

மதி : அதுதான் கூடாது ! சாப்பிடு. உம். நெடு நேரமாகப் பேசிய களைப்பு ! சாப்பிடு !

வாலி : பசியில்லையே ! தொல்லையாகிவிட்டது !! சரி சரி, நானே சாப்பிடுகிறேன் !!!

மதி : அடியாத மாடு படியாது, என்பார்களே. அது சரியாகத்தான் இருக்கிறது. அதோ அந்த மாதுளையை...

வாலி : போதும்......

மதி : பலாச்சுளை ?

வாலி : மூன்று தின்றேனே !

மதி : அண்டப் புளுகன் ! நான் அந்தத் தட்டிலே வைத்ததே மூன்று ! அப்படியே இருக்க......உனக்குத் திருமணம் ஆகிவிட்டதா ?

வாலி : ஏற்பாடாகிவிட்டது. விரைவிலே நடை பெறும் !

மதி: பெண் எந்த நாடு? உம்.....பால் சாப்பிடு... எந்த ஊர்...அழகியா?

வாலி: விவரம் நாளையதினம் கூறுகிறேன். இதோ பார் நேரமாகிவிட்டது...என்ன செய்வதென்றே தெரிய வில்லையே. என்னைப் போகவிடமாட்டீர்கள்.

மதி: ஊஹூம்!

வாலி: என்ன சங்கடம் இது! இதைக் கேளுங்கள் நான்.....நான்.....

மதி: என்ன சொல்லு....

வாலி: ஒன்றுமில்லை! பலரை நான் பரதவிக்கச்செய் திருக்கிறேன். இப்போது நான் சிக்கிக்கொண்டு தவிக் கிறேன். பெண் புத்திதான் பின்புத்தி என்பார்கள். உம்... என் புத்தியுமா அப்படி இருக்க வேண்டும்.?

[வாலிபன் மதிவாணனை விட்டுப் பிரிகிறான். மதிவாணன் கம்பளி எடுத்துக்கொண்டு வாலிபன் படுத்திருக்கும் கதவண்டை வரு கிறான்.]

அரும்பு மீசையுள்ள
ஆணழகா கண்வளராய்
கரும்பு மொழிபேசும்
என் கட்டழகா கண்வளராய்.

(வாலிபன் கண்ணை மூடிக்கொண்டு பாட்டை ரசிக்கிறான்.)

[மதிவாணன் சந்தடியின்றி படுக்கையிலி ருந்து எழுந்து விளக்கை சிறிதாக்கிவிட்டு படுத்திருக்கும் வாலிபனருகில் வந்து குனி கிறான். வாலிபன் கண்விழித்துப் பார்த்துப் பெரும் திகிலுடன் படுக்கையிலிருந்து எழு கிறான்.]

மதி: வீராதி வீரன்போல் பேசுகிறாய், என் திகில்?

வாலி: ஒன்றுமில்லை! போய்ப் படுத்துக்கொள்ளுங் கள்!

மதி: தம்பி! மேலங்கி, தலையணி இவைகளைக் களைந்துவிட்டு படுத்து உறங்கு. கொடு மேலங்கியை!

வாலி: வேண்டாம்!...வேண்டாம்!! தொல்லையாகி

விட்டது உங்கள் போக்கு. இனி நான் வெளியே போய் விடுவேன்!

மதி: வேண்டாம்......வேண்டாம். உன் இஷ்டம் போல் மேலங்கியுடனே படுத்துக்கொள்......பிடிவாதக் காரன்......

[வாலிபன் மெதுவாகக் கட்டிலருகே சாய்கிருன். மதிவாணனும் கட்டிலில் அமர்கிருன்.]

வாலி: திருமணம் ஆகிவிட்டதா?

மதி: எனக்கா? இல்லை. இப்போது கிடையாது!

வாலி: ஏன்?

மதி: என் தங்கை திலகா திருமணம் முதலில்; பிறகு தான் என் திருமணம்.

வாலி: இதுவரையில்—காதல்?

மதி: நேரமே கிடையாதடா, தம்பி!

வாலி: கலைஞன் என்கிறீர்?

மதி: ஆமாம். காமுகன் என்று அதற்குப் பொருள்?

வாலி: அழகிகளைக் கண்டால் உமது மனதிலே அலை மோதுவதே கிடையாதோ?

மதி: முழு நிலவு கண்டால் களிப்புதானே?

வாலி: ஆமாம்.

மதி: நிலவைப் பிடித்துவந்து நமது கூடத்திலே விளக்காக்க வேண்டும் என்று முயல்கிறோம். இல்லையல்லவா? பார்க்கிறோம்; மகிழ்கிறோம்: அதேபோல மகிழ்ச்சி தான் எனக்கு. அழகு மங்கையின் முகவிலாசத்தைக் கண்டால் கருங்குழலிலே கார்மேகத்தைக் காண்கிறேன். இன்பவல்லிகளின் இசையிலே குயிலையும், ஆடலிலே மயிலையும், விழியிலே கெண்டையையும் காண்கிறேன்......

வாலி: காதலைத்தவிர மற்றதெல்லாம் காண்கிறீர்!

மதி: உண்மைதான்!

வாலி: யார் நம்புகிறது இதை? இசை இருக்கிறது இனிமையாக!

மதி: எதற்கு? காதல்கீதம் பொழியத்தானு?

வாலி: இளமை, அரச சபையிலே இடம் என்றாலும் காதல் கணையைக் கண்டதே இல்லை. நம்ப முடியவில்லையே......?

[மதிவயணன் வாலிபனை நெருங்கிவிட்டு நகர்ந்து

கொளகிறான்.]

மதி: நம்ப.. ...?

வாலி: முடியவில்லை

மதி: முடியவில்லையா? ந..ப... முடியவில்லையா! (அருகில் நெருங்குகிறான்.)

வாலி: (பதறி) நம்புகிறேன்! நம்புகிறேன் !

[வாலிபன் போர்வையில் முகத்தை மூடிக்கொள்கிறான். மதிவாணன் தன்னையும் போர்த்திக்கொண்டு படுக்கிறான். வாலிபன் தன் முகத் துணியை நீக்கிப் பார்க்கிறான் மதிவாணன் சட்டென்த் தன்னை மறைத்துக்கொள்கிறான்- வாலிபன் திரும்பவும் படுக்கிறான் அடுத்தத்தரம் மதிவாணன், அவன் மேல போர்வையை தள்ளுகிறான் பெண் எனக் கண்டு கொள்ளுகிறான். வாலிபனுக்கு கூச்சம் மதிவாணனுக்கோ ஆனந்தம்! வாலிபன்—அந்த வேடத்திலிருந்த குமாரி—தன் மீசையை அகற்றிவிடுகிறாள்.]

மதி: கள்ளி

குமாரி: ஓ மெள்ளப் பேசுங்கள

மதி. இன்பமே

குமாரி அன்பரே

மதி ஆருயிரே

குமாரி: என்னை மன்னிப்பீரா? சாகசக்காரி என்று எண்ணுகின்றீர எவ்வளவோ முயன்று பார்த்தேன் என் அரசே, என்மனம் என் வசம் இல்லை.

மதி: எங்கெங்கோ தேடினேன் கலாதேவியை கதிரவனைக் கண்டு களிக்கும் தாமரையில், கார்முகிலைக் கிழித்து எழும் திங்களில், மலர் மணத்தை வாரி வழங்கும் தென்றலில, மலை உச்சியில, சிங்காரச் சிற்றூரில, எங்கெங்கோ தேடினேன் காணவில்லை. இங்கே காண்கிறேன் என் கலாதேவியை

குமாரி: செந்தேன் இது நாள்வரை நான் கேட்டறியாத கீதம்

மதி. இன்பமே! யார் நீ? உன் பெயர் என்ன?

குமாரி. என் பெயரா?. . இசைச் செல்வரே நான்...நான்,..

மதி: தயக்கம், ஏன் தங்கமே?

குமாரி: (சூந்திரமாக) என் பெர் தங்கம்தான்!

மதி: எவ்வளவு பொருத்தமான பெயரிட்டிருக்கிறார்கள்; உன் பெற்றோர் .!

குமாரி: அரண்மனைத் தாதி

மதி: வேடமிட்டு வந்த காரணம்?

குமாரி: குமாரதேவியின் கட்டளைப்படி நான் மாறுவேடம் அணிந்து ஊரார் போக்கை அறிவது வழக்கம் இன்று தங்களைக் கண்டேன் கடமையை மறந்தேன் காதலில் கட்டுண்டேன் என் செயலைக் கண்டு—செல்வமே, சீரழிவான குணம் எனக்கு என்று எண்ணி விடுவீரா? என்னை நம்பவேண்டும் மணியே நான் மாசற்றவள்

மதி தங்கம் என வாழ்வின் விளக்கே மன்னன் திருமண விஷயமாக வந்தேன காதல மண்டி எனக்குக் கிடைத்துவிட்டது கனியே, உன் பெற்றோரைக் கண்டு பேசி. .

குமாரி சம்மதம் பெறுவது சுலபம் கண்ணாளா. ஆனால் இந்தக் கலைவிழா முடிந்த பிறகுதான திருமணப் பேச்சு. விளக்கம் கேட்கவேண்டாம நான இனி உமது பொருள். என் வாழ்க் கைக்கு நீரே இனி வழிகாட்டி என் காதலைக் காணிக்கையாக்கி விட்டேன் நான் யாராக இருப்பினும் செல்வமே, என்னால் தங்களுக்கு என்ன விதமான இன்னல் வந்தாலும் என்னை ஏற்றுக் கொள்ளும் உறுதியிருக்குமா?

மதி: ஆழ்கடலில், அலை நிரம்பிய கடலில, சுறுவுக்கும் சுழ லுக்கும் இடையேயுள்ள முத்து எடுக்கும் தமிழ இனம் நான், தங் கமே, உன உள்ளத்திலே எனக்கு இடமுண்டு எனக் கூறியான பிறகு, உத்தமி, படைபலவரினும், தடை பல நேரிடினும், கலங்கு வேனா? உன்னை என்னிடமிருந்து பிரிக்கும் வலிமை கொண்டவர் எவரும் இருக்க முடியாது, என கரத்தில் வாளும் கருத்தில் நீயும் இருக்கும வரையில

குமாரி என்னைக் களிப்புக் கடலில் தள்ளாதீர், கண்ணாளா.

மதி: கலாதேவி இனி நான் செய்யவேண்டியது என்ன? கட்டளையிடு

குமாரி: கட்டளையா? நானா? நான் தங்களைக் கேட்டுக்கொள் ளுவது ஒன்றே ஒன்றுதான். என்னை நானாகக் கூறுமுன் யார் என்று அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டாம், சில நாட்கள்...

மதி. என் இன்பம் நீ வேறு நான் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன இருக்கிறது? என் தங்கம் நீ! வேறு விளக்கம் நீயாகக் கூறினாலொழிய எனக்கு ஏன்?

குமாரி: இன்று இரவு முழுவதும் இப்படி இருக்கத்தான் தோன்றுகிறது. ஆனால் கடமை கட்டளையிடுகிறது.

மதி· கட்டிக் கரும்பே. காதலும் ஒரு கடமைதானே? வீரலி பர்கள் மீறக்கூடாத கடமை

குமாரி ஆமாம் ஆனால் கருத்துக் குருடர்கள் இதை அறிவ திலலை

மதி: எனக்கென்னமோ அச்சமாகவே இருக்கிறது.

குமாரி: அச்சமா, ஏன்?

மதி: எனக்கா இப்படிப்பட்ட பரிசு என்று எண்ணும்போது அச்சம்தான் உண்டாகிறது.

குமாரி: பரிசு பெற்றவள், நான் குணாளா!

மதி: இல்லே, இல்லே. பரிசு எனக்குத்தான். கலைவிழாவிலே பரிசுபெற வந்தேன். விழாவுக்கு முன்பே பரிசு...

குமாரி: இதோ...இந்தப் பரிசு போதுமா... அன்பரே.

மதி. இதைவிட மேலான பரிசு, ஏது, குயிலே? இனிதான் என் கலை கனியப்போகிறது, என் வாழ்வே கலையாகப்போகிறது!

[மணியோசை கேட்டு இருவரும் பிரிகின்றனர்.

குமாரி: நேரமாகிவிட்டது கண்ணாளா, தாதிகள் தேடுவர்... என்னோடு வேலைசெய்யும் தாதிகள்!

மதி: அரசிக்குக் காவலோ?

குமாரி: ஆமாம். பணிவிடை செய்பவள். சதா அரசியுடனேயே இருப்பேன், வேடிக்கையாகக் கேலிகூடச் செய்வார்கள். தங்கத்துக்கு என்ன பயம்மா? தங்கமேதான் குமாரதேவி, குமார தேவிதான் தங்கம், என்றெல்லாம்...

மதி: இன்பமே, என்கலைத்திறனைக் கண்டு அரசி பரிசுதர வருகிறபொழுது...

குமாரி: வருகிற பொழுது?

மதி: குமாரதேவியாரே நான் கேட்கும் பரிசு தரவேண்டும் எனக் கூறுவேன்.

குமாரி: கேள், கொடுக்கப்படும், ஆனல் முறையும் நெறியும் அறிந்து கேள், என்று எங்கள் அரசி கூறுவார்கள். ஏனென்ருல் சில விஷமக்காரர்கள் ராஜ்யத்தில் பாதியும் அரச குமாரியும் வேண்டும் என்றுகூடக் கேட்டுவிடுவார்களல்லவா?

மதி: எனக்கு ஏன் புதிதாக ஒரு ராஜ்யம்—என் காதல் ராஜ்யத்துக்கு ராணியாக இருக்கும்படியாக தங்கத்தைத்தர வேண்டும் – நான் விரும்பும் பரிசு அதுதான்...என்று கூறுவேன்.

குமாரி: நான் வெட்கத்தால் தலைகுனிந்துகொண்டு நிற்பேன்.

மதி: வெற்றி வீரனை நான், நான் விரும்பும் பரிசுபெற்று வீடு செல்வேன்.

குமாரி: வீடு சென்று திலகாவிடம் என்னைத் தருவீர்கள்.

மதி: அம்மா உன்னைக்கண்டதும்...

குமாரி: என்னைக்கண்டதும்.

மதி: வாடி, என்கண்ணே என்று அன்புடன் கூறி...அணைத்துக்கொண்டு, உச்சி மோந்து முத்தமிடுவார்கள்.

குமாரி: அந்த நாள்தான் திருநாள்!

மதி: வாழ்விலோர் திருநாள்

குமாரி: இனியும் இருப்பது முறையல்ல...

மதி: போகத்தான்வேண்டுமா, தங்கம்?

குமாரி: கடமை. தவிர்க்கமுடியாத கடமை!

மதி: சரி. பணியத்தான்வேண்டும்.

[குமாரி கதவு நோக்கி போகிறாள்.]

மதி: பாகு மொழியாளே. நாளை மாலை.

குமாரி: நாளை மாலையும். இன்னும் நாலு நாட்களும் நான் இந்த இன்பத்தைப்பெற முடியாது. அரண்மனையிலே வேலை.

மதி: நாலு நாட்கள்!! நான் எப்படிச் சகிப்பேன்?

குமாரி: நாலு நாட்கள் கண்ணாளா? ஒன்று, இரண்டு, மூன்று, நாலு. நாலே நாலு நாட்கள், பிறகு...

மதி: பிறகு...?

[மதிவாணன் அன்போடு பார்க்கிறான். பின் தொடருகிறான். ஆனால் தங்கம் (குமாரி) நெஞ்சில் நிறை இன்பத்துடன் நழுவிச் செல்கிறாள்.)

ஃ ஃ ஃ

[சோலைநாட்டில் சங்கீதவிழா.]

மதி: நன்றி, பெரியவர்களே, மிக்க நன்றி! இந்தப் பெருமை வேழநாட்டுக்குரியது. என்னை இவ்வாண்டு கலைவிழாவிலே கலை மன்னனாக்கிய உங்கள் பெருந்தன்மைக்கு என் நன்றி.

ஒருவன்: என்ன பணிவு... என்ன பணிவு... கலைமன்னவா......

* * *

[சோலை நாட்டில் அரசி குமாரதேவியின் அரண்மனை. அதன் அரசவைக்கு மதிவாணன் வருகிறான். அரியணையில் அமர்ந்துள்ள குமாரி அவனை ஆசையோடு நோக்குகிறாள். அவன் அவளை நெருங்குகிறான். தலைவணங்கி நிமிரும் பொழுது வாலிபன் உருவில் வந்து தாதி தங்கம் எனக்கூறியவளே அரசியாய் இருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைகிறான். குமாரி புன்முறுவல்செய்கிறாள். மதிவாணன் வியப்பும் திகைப்புமுற்றவனாய் மலைத்து நிற்கிறான்.]

குமாரி: மதிவாணரே, அரசிகளைக் கண்டதே கிடையாதோ இதற்குமுன்பு எப்போதும்?

மதி: கண்டதில்லை! தங்கள் போன்ற தங்கக்குணம் படைத்த அரசிகளைக் கண்டதில்லை!

குமாரி: கலாவாணரே! உமது கலைத்திறமை கண்டு, இந்நாடு களிப்படைகிறது!

மதிவாணன்: புது மனிதனானேன், பாராட்டும்பரிசும் பெற்றதால்......

குமாரி: எமது விருந்தினராகச் சிலநாட்கள் இருக்க...

மதி: உத்திரவு, மகாராணி!

குமாரி: அன்பழைப்பை மறுக்கமாட்டீர்!

மதி: முடியுமா, அரசியாரே!

(அரசவை கலைகிறது.)

ஃ ஃ ஃ

[அரண்மனையில் குமாரியின் அந்தப்புரத்தில் தனி அறை]

குமாரி: இதென்ன வேடிக்கை? கொலுமண்டபத்தில் காதலைப் பொழிகிறீர்—இங்கு தனி அறையில் தர்பார் பொம்மை போலாகிறீர்!

மதி: குமாரதேவியாரே...

குமாரி: இப்படி அழைத்திருக்கவேண்டும் அங்கு. இங்கு குமாரி அல்லவா வந்திருக்கிறாள். அரசி அல்ல.—குமாரி தன் மணாளனிடம்...

மதி: தங்கமே, தணலில் அல்லவா இருக்கிறாய்—இன்பமே, என்னை ஏன் சந்தித்தாய்? என் வாழ்வின் விளக்காகப் போவதாகக் கூறி என்னைப் பித்தனாக்கிவிட்டாயே...

குமாரி: கண்ணாளா! என்ன கலக்கம்...? நான் தான் அரசி என்று கூறாததால் கோபமா? என் நிலைமை அப்படி! துரையே—, நான் என்ன செய்வேன்?

மதி: நிலைமை! ஆமாம் தங்கமே, நாட்டை ஆளும் மகாராணி நீ—! ஏட்டைத் தூக்கும் ஏமாளி நான்!!

குமாரி: மகாகவி! மண்டலாதிபதிகள் போற்றிப் புகழத்தக்க, மகாகவி!

மதி: தங்கம்?

குமாரி: என்ன கண்ணாளா?

மதி: இன்னமும் ஏன் அந்த இன்னமுது கொடுத்துக் கொல்கிறாய்—? தங்கம், எனக்கு விடைகொடு.

குமாரி: விடைகொடுப்பதா?

மதி: காதலே விஷமாகிவிடுமுன்பு எனக்கு விடைகொடு, தேவி! பாவி ஏன் வந்தேன் இந்த விழாவுக்கு? தங்கம்... குமாரதேவி... என் அன்பே... அரசாளும் ஆரணங்கே...

குமாரி: இதென்ன குழப்பம் கண்ணாளா...? அரசியாக

இருப்பதா தவறு?

மதி: தவறு அல்ல! பெரு நெருப்பு!! நம்மைப் பிரித்து விடும் பெரு நெருப்பல்லவா? தங்கத்தை நான் பெற முடியும்!, குமார தேவியாரை......?

குமாரி: குமாரதேவி நாட்டவருக்கு! மற்றவர்க்கு......தங்க ளுக்கு நான் என்றும் தங்கம்தானே!!

மதி: பாடிப் பிழைப்பவன் நான்! நாட்டுக்கரசி நீ!!

குமாரி: அந்தக் குற்றத்தை மன்னித்துவிடு, குணாளா! நான் அரசி! ஆயினுமென்ன? ஒரு பெண்ணல்லவா?

மதி: வேந்தன் வெற்றிவேலன், என்னைச் சூதுக்காரன் துரோகி என்று தூற்றுவான். உன் நாட்டுத் தலைவர்களோ ஊர் பேர் அறியாதவன் எப்படியோ அரசியின் மனதை மயக்கி விட் டான் என்று ஏசுவார்கள் தங்கம்!

குமாரி: என் திருமணத்திற்கு தடைபோட யாருக்கும் அதி காரம் கிடையாது!

குமாரி: சட்டத்தைவிட சம்பிரதாயம் பலம் பொருந்தியது, தங்கமே.

* * *

[சோலை நாட்டின் சுற்றுப்புறங்களில்'மாவோடு தவழும் மலர் கொடிபோல' என்னும் பாடலுடன் அரசி குமாரதேவியும் கவிஞன் மதிவாணனும் களித்திருக்கிறார்கள். காதல் வச மாகி வயல் வரப்புகளிலும் உல்லாசமாகப் பொழுதுபோக்கு கிறார்கள்.]

ஃ ஃ ஃ

[குமாரதேவியின் தனி அறை,]

செந்தாமரை: (குறும்பாகப் பார்த்துக்கொண்டே) எப்படி தேவி இருக்கிறது ஊர்?

குமாரி: திருவிழாக் கோலமடி, செந்தாமரை! எங்கும் அழகும் அன்பும் தாண்டவமாகிறது!

செந்தா: ஆடாமல் என்ன?

குமாரி: கேலியா செந்தாமரை? மனதிலே மகிழ்ச்சி துள்ளி விளையாடும்போது, உலகம் உல்லாச கூடமாகத்தான் மாறி விடுகிறது!

பணிப்பெண்: (உள்ளே ஓடிவந்து) அமைச்சரும்—படைத் தலைவரும்.........

குமாரி: வருகிறார்களா? இங்கா?

பணிப்பெண்: அனுமதிகோரி நிற்கிறார்கள் அங்கு!

குமாரி: வரச்சொல் செந்தாமரை, புயல் கிளம்புகிறது......

* * *

[குமாரதேவின் த படைத் தலைவருடனும் அமைச்சருடனும் காணப்படுகிருள்.]

குமாரி: கவலையுடன் இருக்கக் காரணம்?.........படைத் தலைவர் முகம் பயங்கரமாக இருக்கிறது. ஏதாவது பகை மூண்டு விட்டதா ?

படைத்தலைவர்: மூண்டுவிடும் என்ற பயம்தான் அரசி யாரே! கூறும் அமைச்சரே!

அமைச்சர்: தேவி! கோபம் கொள்ளாமல் இருக்கவேண் டும், நாங்கள் கூறப்போவது கேட்டு! அம்மணி, மதிவாணன் கலைச்செல்வன், எனினும் அவனிடம் தாங்கள் இவ்வளவு பாசம் காட்டுவதும்.........

படைத்: ஊர் பார்க்கும்படி அவனுடன் உலவச் செல்வதும் பேசி மகிழ்வதும் துளியும் சரியில்லை.

குமாரி: உங்கள் அரசி சரசக்காரி என்று பழி சுமத்துவார் கள் ஊரார் என்று பயப்படுகிறீர்?

அமை: பொறுப்பான பதவியில் உள்ளவர்களுக்கு அந்தப் பயம்தானே பொன்னுபரணம்.

குமாரி: பயப்படவேண்டாம்! ஊரார் உள்ளம் மகிழும் வண் ணம் நடந்து கொள்ளத் தீர்மானித்து விட்டேன்! அமைச்சரே, மதிவாணரைத் திருமணம் செய்து கொள்வது என்று தீர்மானித்து விட்டேன்!

அமைச்: (திடுக்கிட்டு ஓரடி எடுத்து வைத்து) ஆபத்தான தீர்மானம், அரசியாரே! அசட்டுத்தனமான முடிவு!

குமாரி: அமைச்சரே! படைத்தலைவரே! வீண் வாதங்கள் வேண்டாம்! மிரட்டலுக்கு அஞ்சுபவளல்ல நான். அதேபோல் மிரட்டி உங்களைப் பணிய வைக்கவும் விரும்பமாட்டேன். திரும ணம் என் சொந்த விஷயம். என் வாழ்க்கைக்கு ஒளிதேடும் உரிமை எனக்கு உண்டு. இதிலே குறுக்கிடும் அதிகாரம் உங்களில் யாருக்கும் கிடையாது!

படை: இந்த நாட்டின் நலத்திலே நாட்டங்கொண்டவர்கள் நாங்கள்! தங்கள் திருமண விஷயமாகக்கூட யோசனை கூற உரிமை கொண்டவர்கள்தான், அரசியாரே!!

குமாரி: ஊம்! என்ன செய்வதென்று தெரியாமல் குழப்பம் மனதிலே இருக்கும்போது, படைத்தலைவரே, நிச்சயமாகத் தங் கள் மேலானயோசனைகளைக் கேட்பேன்! இந்த விஷயமாக, தெளி வாக திட்டமாக, முடிவுக்கு வந்தாகி விட்டது! நான் கூறவேண்

டியது அவ்வளவுதான்!

[என்று சொல்லிக்கொண்டே எழுந்திருக்கிறார்கள். படைத்தலைவர்கள் கோபமாக வெளியேறுகிறார்கள்.]

*   *   *

[வேழ நாட்டில் வெற்றிவேலர் அரண்மனை. வேலைக்காரப் பெண்கள் பழத் தட்டுகளோடு நுழைவதைப் பார்த்து வேலைக்காரன் தடுத்து நிறுத்துகிறான். நீராழி மண்டபத்தில் அரசர் வெற்றிவேலர் ஜலக்கிரீடை செய்து கொண்டிருக்கிறார்.]

வெற்றி: (தண்ணீரில் இருந்தபடியே) புத்தி துளிக்கூடக் கிடையாது! போய் இன்றைய ஓலைகளைக் கொண்டுவரச் சொல்லுடா, அமைச்சரை! அறிவிலி! பலகாரம் கொண்டுவருகிறானாம் பலகாரம்!

[பணியாள் தட்டை எடுத்துவந்தவன் திரும்பும்போது பலகாரத்தட்டிலிருந்துஒன்றைத் திருட்டுத்தனமாக எடுத்துத் தன் வாய்க்குள்ளே போட முயல்கிறான்.]

வெற்றி: டேய்! கொண்டு வாடா தட்டை! (பணியாள் தட்டைக் கொண்டு வருகிறான்) என்னடா இருக்கு பலகாரம்? நீட்டடா இப்படி! (தின்று ருசித்துக்கொண்டே) ஹூம், போதும்! ஓடு! அழைத்துவா அமைச்சரை!

[வேலைக்காரன் அமைச்சரோடு வருகிறான்.]

அமை: வேந்தே! சோலை நாட்டிலிருந்து ஓலை......

வெற்றி: வந்ததா ஓலை? மதிவாணன் இசையிலே மட்டுமல்ல, ராஜதந்திரத்திலும் கெட்டிக்காரன்! அப்போதே தெரியும் எனக்கு!

அமை: அரசே!

வெற்றி: ஏன், என்னய்யா அழுகுரல்! ஓலையிலே என்ன எழுதியிருக்கிறான். குமாரதேவியைக் காணவே முடியவில்லையாமா?

அமை: கண்டிருக்கிறான் வேந்தே!

வெற்றி: ஹா! கண்டு!

அமை: காதகன்!

வெற்றி: காதகனா, யார்? என்ன இது இழுப்புப்பேச்சு? என்ன சேதி சொல்லும். நீரடவியிலிருந்து வந்து ஓலையைப் பார்க்கிறான்) துரோகி! அடுத்துக் கெடுக்கும் அற்பன்! எவ்வளவு நெஞ்சழுத்தம்? சித்திரவதை செய்கிறேன், சிறுமதியாளனே! ஊர் திரும்பட்டும்! திருமணமாம்...! அவன் அறிவுச் சூனியம்

அரசியாம் அரசி. கலை வலையில் விழுந்துவிட்டால, கருததுத் தெளிவற்றவள்! மலரைப் பறிதது வரசசொல்லி மநதியை அனுப்பினேன்! நான் ஒரு மடையன. யாரஙகே!...?

[பணியாடகள வருகிறார்கள]

வெறறி: டேய், இழுதது வாருஙகள மதிவாணன் தாயை யும் தஙகையும்.

அமை: வேண்டாம வேநதே இபபோது அவனை தண்டித தால் இழிவாக, ஏளனமாகப் பேசுவா விவரமறியாத பாவிகள! நமது மண்டலததில மட்டுமல்ல பல நாடுகளிலும்! பாடகனும் ஒருவன, படடததரசி ஒருவளாக காதலிததானும், பொறுமைக் கொண்ட வேநதன பாடகனைப் படுகொலை செய்துவிட்டானும் என்று பரிகாசமாகப் பேசுவர்!

வெறறி: உண்மைதான பெரிய தியாகி ஆவான்.

அமை: மேலும் தஙகள கர்தல திடடததை பாடிடும பராரி ஒருவன் தகாததுவிட்டான் என்று வெளியே தருவது நலலதா? அலடசியமாக இருநதுவிடும அரசே ஆகரவுகூடாத தருவதாகக கூறும் அசடன்தானே பூரிததுப் போவான் பொனனான சமயம் வருகிறபொழுது துரோகிகளைத தொலைதது விடலாம்!

* * *

[மதிவாணன் வீடு திலகா ஓர் ஓலையைப் படிததுககொண்டு இருக்கிறாள் தாய் கறபகம் வருகிறாள]

கற். என்னடி அமமா மகிழசசியில மூழகிவிட்டிருககிறாய்?

தில: போம்மா

கற்: ஓஹோ. வருகிறானா முதது!.. ...எப்போ வருகிறானாம்?

தில: புறப்படடு விட்டாராம!

* * *

[திலகததின் காதலன் முததுமாணிககததின். வீடு அவனும் அவனது தந்தை சோமநாதரும் காணப்படுகிறார்கள]

முத்து (சோமநாதரை நோககி) திருமண ஏறபாடு எனக்கு சமமதமிலலையப்பா! விலவககாட்டார மகளை நான் மணம் செய்துகொள்ள முடியாது!

சோம: வில்வக்காட்டார் மகளா—என்ன—என்ன—முதது, என்னை இப்படிப் பார்ததுப்பேசு!

முதது: அப்பா—நான் திலகவதியை திருமணம் செய்து கொளளத தீாமானிதது விட்டேன்!

சோம: முடடாள தனமாகப் பேசாதே. பதில் பேசாதே! ஓராயிரம் காரணம் காட்டினாலும் என காதிலே ஏறாது!

முத்து: முடியாதப்பா! நான் திலகாவுககு வாக்கு கொடுதது

விட்டேன்!

சோம: யாரைக் கேட்டு......?

முத்து: அப்பா, வற்புறுத்திப் பயன் இல்லை. நான் திலகாவைத் தவிர வேறோர் பெண்ணை தீண்டமாட்டேன்!

சோம: விபரீதம் ஏற்படும், முத்து!

[முத்துமாணிக்கம் வெளியேறி விடுகிறான். அவன் போவதையே பார்த்துக் கொண்டிருக்கிறார் சோமநாதர்.]

*   *   *

[பூங்காவில்]

வில்வக்காட்டார்: சோமநாதரே, என்ன திருமண விஷயமாக இன்னும் ஓர் முடிவுக்கு வராமலிருக்கிறீர்?

சோம: முயற்சித்தப்படிதான் இருக்கிறேன்! முத்து பிடிவாதமாக.........

வில்: என் மகளை மணம் செய்துகொள்ள மறுக்கிறான் அல்லவா?

சோம: நான் புத்திமதிகூறி.....

வில்: நீர் என்னய்யா புத்தி கூறுவது? எனக்குத் தெரியும் புத்தி புகட்ட!

சோம: வாலிபன்......விபரமறியாதவன்!

வில்: யாராக இருந்தால் என்ன? என்னை அவமானப் படுத்துபவன் வாழமுடியாது! நிச்சயமாக முடியாது! பார் அவன் கதியை!

*   *   *

(காட்டு வழியில் குதிரையில் வரும் முத்துமாணிக்கத்தை—வில்வக்காட்டாரால் ஏவப்பட்ட முரடர்கள் தாக்கி அடித்து நொறுக்கிவிட்டுப் போகிறார்கள். முத்து தள்ளாடியவாறு எழுந்து செல்கிறான். அதற்குப் பிறகு அவன் காய கட்டுகளுடன் வீட்டில் இருக்கிறான்.)

ஃ   ஃ   ஃ

(சோலை நாட்டில் ஓர் தனி வழியில் அரசி குமாரதேவியும் கவிஞனை மதிவாணனும் காணப்படுகிறார்கள். மதிவாணன் குதிரையை நிறுத்திவிட்டு குமாரியிடம் வருகிறான்.]

மதி: குமாரி! வெற்றிவேலர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார்!

குமாரி; வாழ்த்துச் செய்தியா? வேந்தன் பெருங்குணம் படைத்தவராகத்தான் இருக்கிறார்!

மதி: நான் ஊர் சென்று......

குமாரி: ஏன், இதற்குள்......

மதி: மன்னனிடம் நேரில் கூற வேண்டாமா? தாய், திலகா இவர்களிடம் பேசி மகிழ வேண்டாமா?

குமாரி: மகிழ்ச்சியில் மூழ்கி என்னை மறந்துவிடப் போகிறீர்!

மதி: எப்படி முடியும் இன்பமே?

குமாரி [மதிவாணனை காதல கனிய நோககுகிருள். பிறகு திடுக்கென்று) மறநதுபோனேன்! இன்று ஆயுதக் கிடங்கை பார்வை யிடவேண்டும. -அமைச்சா காததுக கொண்டிருப்பார்......!

[இருவரும் பிரிந்து செல்கிருர்கள்.]

ஃ ஃ ஃ

(முத்துவின் தந்தை சோமநாதர் வீடு. அடிப்பட்ட காயங்களினுல் விகாரமான முகத்துடன் ஆண்மையிழந்த வனுக முத்து மாணிக்கம் காணப்படுகிருன்.)

முத்து: (வைத்தியரை நோக்கி) ஐயோ, நான் சாவதை ஏன் தடுத்தீர்கள்? இந்த வாழ்வும் ஒரு வாழ்வா?

வைத்: உன்னைக் காப்பாற்ற நாங்கள்பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல, முத்து. அதில் இவருடைய உதவிக்கு ஈடாக எதையும் சொல்ல முடியாது!

(முத்து மாணிக்கத்தின் நண்பன் வருகிருன்.

வைத்: என் சாமர்த்தியம் முழுவதும் உபயோகித்திருக்கிறேன்.

முத்து: சாமர்த்தியம்! செத்திருக்க வேண்டிய என்னைப் பேசும் பிணமாகச் செய்து விட்டிருககிறீர்!

நண்பன்: உன் மனதிலே தான் முத்து இப்படிபட்ட குழப்பம், பயம் சந்தேகம் இருக்கும்! முத்து மாணிக்கம் பழைய முத்து மாணிக்கமேதான். உலகிலே எவருக்கும் ஏன் உன் திலகாவுக்கும் கூட!

முத்து. ஐயோ! ஐயோ அவள் பெயரைச் சொல்லவேண்டாம்! என் கனவு! அந்தக் காதல்! அந்தப் பூங்கொடி, புழுத்துப்போன எனககா! வேண்டாம், வேண்டாம் இனியொரு முறை சொல்லவேண்டாம்!

* * *

[மதிவாணன் வீடு.]

கற்பகம்: திலகா, ஓலையைச் சரியாகத்தான் படித்தாயா? முத்துவைக் காணுேமே இன்னும்!

திலகா. நான் என்ன செய்ய!

கற்: முத்து புறப்பட்டு வராத காரணம்?

திலகா: ஆடவரின் அசட்டைக்குக் காரணம் கூட வேண்டுமா அம்மா?

கற்: சீச்சி! முத்து அப்படிப்பட்டவன் அல்ல! ஆமாம், திலகா, வல்லியூரில் வசந்தாவின் திருமணம், போகவேண்டுமென்று சொன்னுயே!

திலகா. போய்வரவா, அம்மா?

கற்: செய்யடி கண்ணே! முத்துகூட ஒருவேளை வல்லியூரில் இருககலாம்!

திலகா: இருககட்டும். இருந்தால் என்ன நான் போய்ப பார்ககவா போகிறேன் (எழுந்து புறப்படுகிருள்.)

* * *

[வெற்றிவேலர் அரண்மனை குழந்தை மரகதம் நுழைகிருள். தூரத்தே கவிஞன் மதிவாணனைக் கண்டதும் ஆவலோடு கூப்படுகிருள்.]

மரகதம் மாமா. மாமா!

மதி மரகதம்... (எடுத்து அணைத்து முத்தமிடுகிருன்.]

மரக: மாமி கருப்பா சிகப்பா?

மதி: தங்கநிறம் கண்ணு!

மரக: அய்யய்யோ, மஞ்ச நிறமா?

மதி. இல்லே, கண்ணு! அவ ராஜா மகாராணி. புது ரோஜா மலர்மேனி!

(ராஜா மகள்—ராணி என்று பாடுகிருன்.)

* * *

[சோமநாதரின் மாளிகைத் தோட்டம். தோட்டத்திலே திலகா, அவன் வருகைக்காக ஆவலுடன்காத்துக் கொண்டிருக்கிருள். அவனைப் பார்த்ததும் முத்து ஆவலுடன் கூப்பிடுகிருன்.]

முத்து. திலகா..! திலகா...!

திலகா. (அவனருகில் ஓடிவந்து கரங்களைப் பற்றிக் கொண்டு) ஆருயிரே! என்னை மறந்து விட்டீரா?

முத்து. நானு? உன்னை மறப்பதா? திடீரென்று அப்பா இறந்து விட்டதால் இங்கே பல தொல்லை......

திலகா. என்ன...என்ன...அப்பா இறந்து விட்டாரா? அதனுல்தான் என்னைக் காண வரவில்லை? ஆனுல் சேதி அனுப்பக கூடவா முடியவில்லை...?

முத்து: என்னை மறந்து விடு திலகா! என்னை மறந்துவிடமுடியுமா, திலகா...

திலகா: என்ன சொல்லுகிறீர் இன்னுயிரே. என்ன சொல்லுகிறீர்....

முத்து: வேடிக்கைக்குக் கேட்டேன், கண்ணே இவ்வளவு நாளாகி விட்டதே என்று கேட்டேன்...

திலகா: கேட்கத் துணிந்ததே உமக்கு...

(ஏதோ கூச்சல் கேட்டு இருவரும் திடுக்கிட்டு அப்பக்கம் பார்க்கிருர்கள். இளம் பெண்ணெருத்தியைத் துரத்திப் பிடிப்பவள் போல அவளுடைய தாய்க்காரி ஓடி வருகிருள்.)

தாய்க்காரி கண்ணே, வேண்டாண்டி......இதோ பாரம்மா.

திலகா (அவர்களிடையே குறுககிட்டு) என்னம்மா? என்ன...?

தாய்க் குழந்தை என் யக! உயிரைப் போககிக் கொள்ளப் போரேன்னு ஓடிவருது...

திலகா. ஏன்? சாகத் துணிந்த காரணம்?

தாய்க். என்ன தகராறு கிளம்பும்? கல்யாண விஷயமாகத்தான்!

இளநங்கை. (ஆத்திரமாக) கல்யாணமாம்! கல்யாணம்! என்னைப் படுகுழியிலே தள்ள ஏற்பாடு செய்துவிட்டுப் பசப்பிப் பேசறியா? அவலட்சணமாம்மா நான், என்னை ஒரு நொண்டிக்கு கல்யாணம் செய்து கொடுகக....

திலகா (திடுக்கிட்டு) நொண்டிக்கா? (ஆத்திரமாக) எப்படி அம்மா மனம் இடம் கொடுத்தது ஒரு நொண்டிக்கு இவளைக் கல்யாணம் செய்துதர...

தாய்க்: சொத்துக் கொஞ்சம் இருக்குது! கால்

நொண்டியானாலும் மனுஷரு தங்கமானவர், குணசாலி......

திலகா (கோபமாக) குணசாலி! நாமோ நொண்டி, நமக்கு ஏன் கல்யாணம், நம்மைக் கல்யாணம் செய்து கொண்டா எந்தப் பொண்ணுக்குத்தான் நிம்மதியாக இருக்கும்? அவ புருஷன் நொண்டி .. ஒரு கால் கிடையாது, இப்படித்தானே பலபேர் ஏளனமாகப் பேசுவாங்க...... நம்மாலேயா ஒரு பெண்ணுக்கு இழியும் பழியுமா கிடைக்க வேணும்? சேச்சே...கல்யாணமே வேண்டாம்னு தீர்மானம் செய்திருந்தா அந்த ஆள் தங்கமானவர், குணசாலி! புத்தியில்லாத காரியம் செய்தாயே! குருடு, முடம், நொண்டி, ஊமை இதுகளுக்கெல்லாம் கல்யாணம் வேறயா?

(திலகாவின் வாயில் இதைக் கேட்டதும் முத்துமாணிக்கம், உருக்குறைந்தவனை தானும் திலகாவை மணப்பது சரியா என நினைத்து மனம் குழம்பியவனாய் அந்த இடத்தை விட்டுமெல்ல நழுவிச் சென்றான்.)

தாய். (தன் பெண்ணை நோக்கி) வாடி கண்ணு வா! சத்தியமா அந்த நொண்டிக்கு நான் உன்னைத்தரமாட்டேன்......

திலகா. (அந்தப் பெண்ணை நோக்கி) அப்படி ஏதாவது மறுபடியும் இந்த அம்மா ஏற்பாடு செய்தா, இதோ இவர் இருக்கிறாரே...(என்று தன் அருகிலுள்ள முத்து மாணிக்கத்தைச் சுட்டிக் காட்ட நினைத்தவள், அவன் அங்கு, இல்லாததைக் கண்டதும்) சரி போய்வாம்மா. (என்று அனுப்பிவிட்டு முத்து மாணிக்கத்தை தேடுகிறாள்.)

[தோட்டத்தின் ஒருபுறம் மனங்குலைந்தவனாய் முத்து மாணிக்கம் நிற்கிறான். அவனிடம் திலகா ஓடி வந்து அவன் கரத்தைப் பிடித்துக் கொள்கிறாள்.]

திலகா இதென்ன கள்ளன் போல......

(முத்து மாணிக்கம் கண்ணீர் வடித்தபடி இருக்கக் கண்டு, கண்ணாளா. என்ன இது?

முத்து: ஒன்றுமில்லை, திலகா! நம் திருமணத்தைக் காண அப்பா இல்லையே என்ற விசாரம்...

திலகா: இல்லை. கண்ணாளா ..எதையோ மறைக்கிறீர்.

முத்து: ஒன்றுமில்லை, திலகா! இன்னும் பத்து நாளில் வந்து சேருகிறேன், புறப்படு கண்ணே. நேரமாகிறது. ஹா, துணைக்கு யார்...?

திலகா: தும்பை வந்திருக்கிறாள்...ஹா பத்து நாட்களில்...

முத்து ஆமாம், திலகா!...போய் வா திலகா...

(திலகா செல்கிறாள்.)

ஃ ஃ ஃ

[அரண்மனையில் நாடகமேடை]

('மாசில்லா தமாமணி மனோன்மணி வந்தனம்' என்ற பாடலுடன் நாடகம் நடைபெறுகிறது. ராணியொருத்தி வேட்டையாடச் சென்றபோது, காட்டில் கோணங்கிக் காரனொருவனைக் காண்கிறாள்; அவனைத்தன் ஆசைக்குப் பலியாக்க நினைத்து அவனை மயக்குகிறாள். அரண்மனைக்கு அழைத்து வருகிறாள். சில நாட்களானதும் அவன் காதலில் சலிப்புற்று அந்த நாடோடியைக் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி கழுதைமேல் ஏற்றி விரட்டி விடும்படி உத்தர விடுகிறாள். ராணி அற்பனொருவனைக் காதலிக்கும் காதல் அற்பநேரமே இருக்கும் என்பதை எடுத்துக காட்டும் கதை. அந்நாடகத்தை மதிவாணன் காண்கிறான்.)

மதி: புரிகிறது அமைச்சரே! நன்றாகப் புரிகிறது. நாடகம், அதன் நோக்கம், எல்லாம்.

அமைச்சர் மதிவாணரே, என்ன ஒரு புது மாதிரியாகப் பேசுகிறீர்!

மதி: சித்திரவதை செய்யப்படுகிறேன்! என்னால் தாங்க முடியாது இவ்வளவு இழிவை—ஏளனத்தை!

அமைச்: (குறும்பாக) எனக்கொன்றும் விளங்கவில்லை. வேதனை ஏன் உமக்கு?

மதி: பட்டத்தரசியைப் பாவி மணம் புரிந்துகொண்டால் சித்திரவதைதான் கிடைக்கும் பரிசு...

(வேதனையுடன் மதிவாணன் வெளியே ஓடுகிறான். வேந்தன் வெற்றி வேலன் முதலி

யோர் சிரிக்கின்றனர்.)

* * *

[சோலை நாட்டில் குமார தேவியின் அரண்மனையின் உட்புறம்.]

குமாரி நான் ஒரு குடிமகனை மணம் செய்து கொள்வது நாட்டுககு அவமானம் என்கிறீர்!

அமைச்; நாங்கள் கூறுவதல்ல, தேவீ...

படைத்தலைவன் மக்களின் மனப்போக்கைககவனித்தோம்! மக்களின் சார்பாகப் பேசுகிறோம்!

குமாரி தெளிவும் தைரியம் கொண்ட எந்தப் பெண்ணும் தூயகாதலுக்குக்கட்டுப்பட முன்வரலாம்! அரசியாக அமர்ந்திருக்கும் ஒரே காரணத்துக்காக, நான் அந்த உரிமையை இழக்க வேண்டுமா? என் எதிர்காலம் பாலைவனமானால்தான் நாடு சோலைவனமாகுமா? இதுவா நியாயம்? என் வேதனையைக் கிளறுகிறீர்! அவரை அன்றி நான் வேறொருவரை மணம் செய்து கொள்ள முடியாது. .

அமைச் மனம் கரைகிறது தேவி! எனினும் மண்டலத்தின் நலன் ஆபத்து உண்டாகக்கூடாதே என்ற அச்சம் என் மனதைக் கல்லாக்கி விடுகிறது!

குமாரி. சரி, என் முடிவான கருத்தைக் கூறி விட்டேன்!

அமைச் எங்கள் வேண்டுகோளை நிராகரிகக...

படைத். துணிவு, தேவியாருக்கு இருக்கிறது அமைச்சரே! துளியும் உமக்குத்தான் இல்லை! இந்தத் திருமணம் நிச்சயம் என்றால் நான் படைத்தலைவனாக இருந்து பணியாற்ற முடியாது. தங்கள் திருமணத்திற்கு நான் அனுப்பக்கூடிய பரிசு அதுதான்!

அமைச்: தேவி......நான் மட்டும் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்க முடியுமா?

குமாரி. உள்ளத்தின் போக்கை உணர முடியாத உம்மிடம் வாதிடுவது வீண் வேலை! படைத் தலைவரே, போரிலே நீர் புலி. மதிக்கிறேன்! உமது சேவை நாட்டுககு நிச்சயமாகத் தேவை, உணர்கிறேன்!! அமைச்சரின் கூரிய மதியும் உமது கூர்மையான வாளின் துணையும் தாய்

நாட்டுக்குத் தேவை! நிச்சயமாகத் தேவை! நாடு இழக்கக் கூடாது! இழக்கச் சம்மதியேன் துளியும்!...ஆனால் என் தூயகாதலை அழித்துக் கொள்ளவும் சம்மதிக்க முடியாது!!

இருவரும் : ஆகையால்?

குமாரி . நாட்டை உங்களிடம் ஒப்படைக்க இருேறன்......

இரு : (திடுககிட்டு) நாட்டை....

குமாரி நான் முடிதுறக்கத் தீர்மானித்து விட்டேன்! அமைச்சரே, இந்த நாட்டின் எதிர்காலம் உங்கள் வசம் இருக்கிறது. மக்கள் தக்க திட்டம் தீட்டிக் கொள்ளட்டும். தலையிலே முடியும் நெஞ்சிலே பெருநெருப்பும், தாங்கித் தவித்திட முடியாது என்றால்! ஆகவே பொதுச் சபை கூடட்டும்! நான் முடிதுறந்து விடுகிறேன்.

குமாரி : (இருவரும் மௌனமாய் நிற்க) போகலாம்! (அமைச்சர், படைத்தலைவர் இருவரும் போகி கிறார்கள்.)

*　　　*　　　*

[வேழநாட்டில் மதிவாணன் வீடு.]

மதி . திலகா, திலகா, கேட்டாயா சேதியை...?

திலகா : என்ன அண்ணா, அரசி வருகிறாரா?

மதி : உன் அண்ணி ஒரு நாட்டின் அரசி! ஆகவே அவளிடம் நாம் அடங்கிடப்போம், என்று பேசுகிறார் களல்லவா, சில பித்தர்கள்...

திலகா : பொறாமையினால் பேசுகிறார்கள்.

மதி : நிலைமையும் அதுதானே, திலகா? ஆனால் இனி அந்தக் களங்கமும் இல்லை என் காதலிக்கு! திலகா, உன் அண்ணி என் பொருட்டு அரசிப் பதவியை வேண்டா மென்று கூறிவிட்டாள்!

திலகா : ஹா!

மதி : முடிதுறந்துவிடத் தீர்மானித்து விட்டாள்! வா, திலகா! உன்னை இனியும் இங்கே இருக்கவிடப் போவதில்லை!

திலகா : என்ன அண்ணா இது?

மதி: கள்வி! ஒன்றுமே தெரியாது உனக்கு? இரு மணம்... முதலில் உன் திருமணம். பிறகு எனக்கு! வா...வா (தராசின் அருகிலே சென்று அதிலுள்ள ஒரு தட்டை சுட்டிக்காட்டி) உம் நில் இப்படி.

திலகா: இது ஒரு வேடிக்கை அண்ணு உனக்கு!

மதி: வேடிக்கையா? எடைக்கு எடை தங்கம் என்ருல் தரமுடியாது என்றல்லவா எண்ணிஞன் சோம நாதன். இதோ எடைக்கு எடை தங்கம்!

[திலகாவை திராசின் ஒரு தட்டில் நிறுத்தி மற்ருெரு தட்டில் தங்கக் கட்டிகளை வைத்து நிறுக்கிருன்.]

மதி: இதோ எடைக்கு எடை தங்கம்! எடைக்கு மேலும் தங்கம்! என் சபதம் நிறைவேறிவிட்டது! ஓலை அனுப்புகிறேன், திருமண நாள் குறித்து இதோ இப் போதே...

* * *

[வேழநாட்டரசன் வெற்றி வேலன் அரண்மனை]

வெற்றி: நம்பமுடிய வில்லையே! இந்தப் பராரிக்காகப் பட்டத்தை விட்டு விடச் சம்மதிக்கிருளா? ஹூம்...எவ்வளவு பைத்தியக்காரத்தனம்!

ஒற்றன்: பலர் இது போலத்தான் வேந்தே கேலி பேசுகிருர்கள்! குமாரதேவி எதையும் பொருட்படுத்த வில்லை.

வெற்றி: பிடிவாதக்காரி! அதோ அவன்தான்... சரி, நீ போகலாம்...வா, மதிவாணு! கேள்விப் பட்டேன்! களித்தேன். காதலின் சக்தியே சக்தி...!

மதி: வேந்தே, குமாரதேவியின் தியாகம் மகத்தானது! நான் துளியும் எதிர்பார்க்க வில்லை, என் பொருட்டு ஒரு பெரும் அரசை இழக்க மனம் வருவதென்ருல் ஆச்சர்யந்தான்....

வெற்றி: ஹூம் ஹூம்; இசை அரசனல்லவா நீ! பிறகு பேசுவோம். ஒரு அவசரமான வேலை...

மதி: வணக்கம். (மதிவாணன் போகிருன்)

வெற்றி: மடையன்! நான் வேறு புகழவேண்டும் என்று எதிர்பார்க்கிருன்! மண்டைக் கர்வியாகி விடுவான்.

மட்டந் தட்டியாக வேண்டும்! குமாரியும்...இன்னும் இங்கு குதூகலமாக வாழ்வது, அதை நான் காண்பது? வெட்கம், வேலாகக் குத்துகிறது என் நெஞ்சை! வேந்தனக இருக்கிறேன் இந்த லட்சணத்தில்...!

ஃ ஃ ஃ

[திலகாவின் காதலன் முத்து மாணிக்கத்தின் வீடு]

உடல் குலைந்த ஒருவனைப் பருவமங்கை யொருத்தி மணந்தால் அவன் வாழ்வு பாழென நினைத்த முத்து மாணிக்கம், திலகாவை மறுப்பவனாய் மதிவாணன் ஓலையைக் கண்டு குமுறுகிறான்.]

முத்து: என்ன இது? ஏமாளி என்று எண்ணிக் கொண்டானா என்னை? திருமணமாம்—திருமணம்!

(ஓலை கொண்டு வந்த தும்பை கவலை கொள்கிறாள்.)

முத்து: எவ்வளவு ஆணவம்! முத்துமாணிக்கம் முட்டாளல்ல. ஊர் பேரில்லா திலகாவைத் திருமணம் செய்து கொள்ள...

(தும்பை கோபம் அடைகிறாள்)

முத்து: ஆடிப்பாடிப் பேசினாள், நானும் மன மகிழ்ச்சிக்காக விளையாடினேன். கலியாணம் செய்து கொள்வதாமே...ஊம், பெரியபிரபு குடும்பமல்லவா? பாடிப் பிழைக்கும் பராரிக்கு எவ்வளவு பேராசை! போ...போ. போய்ச் சொல், திலகாவிடமும். அவனிடமும் சொல்லு. திருமணம் என்ற எண்ணத்தை மறந்துவிடச் சொல்! என் அந்தஸ்து என்ன? குடும்ப கௌரவம் என்ன? எப்படி அடுக்கும் இந்த சம்பந்தம் என்று கேள்! போ! ஓலையை எடுத்துச் செல்! கொண்டுபோய் வீசு அவன் முகத்தில்! நான் திலகாவைத் திருமணம் செய்து கொள்வதாம்! (தும்பை போனதும்) திலகா...திலகா, நான் என்ன செய்வேன்? ஐயோ! எவ்வளவு கொடுமை! எப்படித் தாங்குவாய், கண்ணே, எப்படித் தாங்குவாய்!...

* * *

(மதிவாணன் வீட்டில் திலகா குமுறுகிறாள்)

திலகா: எப்படித் தாங்குவேன்? எப்படி தாங்குவேன்? உயிரினும் மேலாக மதித்து வந்தேனே, அவரா திருமணம்

கிடையாது என்றார். ஏசினரா? என்னையா? சோலையிலே சாலையிலே விளையாடிய என் சுந்தரன்?

தும்பை: அக்ரமக்காரனம்மா அந்த முத்து மாணிக்கம்! வீசி எறிந்தான் ஓலையை! ஏசினன் கண்டபடியெல்லாம்! என் கழுத்திலே கட்டாரி இருந்தால் குத்திக் கொன்று விட்டிருப்பேன் அந்தக் கொடியவனை.

மதி: தும்பை... என்ன... முத்துமாணிக்கமா இப்படிச் சொன்னான்? அவனா மோசம் செய்கிறான்? நம்ப முடியவில்லையே...

ஃ ஃ ஃ

[சோலை நாட்டில் குமாரி தேவியின் அரசவை]

மாபெரும் பொது மக்கள் சபைக்குக் குமாரதேவி தன் அந்தரங்கத் தாதி செந்தாமரையுடன் வருகிறாள்.]

குமாரி: பொதுச் சபையினரே! நம்நாட்டு சம்பிர தாயமும், அதைக் கட்டிக் காத்திட உறுதி கொண்டவர்களும், நான் ஒரு குடிமகனைத் திருமணம் செய்து கொள்வது கூடாது என்று தெரிவிப்பதால், நான் என் காதலைத் தடை செய்யும் இந்த அரச பதவியிலிருந்து விலகிக் கொள்வதென முடிவு செய்து விட்டேன்!

இது ஒரு அறப்புப் பிரகடனம். கடமைக்காக காதலைக் கைவிடவேண்டும் என்று வாதாடினர் பெரியவர்கள். காதலும் ஒரு கடமைதான்! அந்தக் கடமையை நான்கு மதிக்கிறேன்! அரசியாக இருப்பதினால் காதல் உரிமையை இழக்கவேண்டும் என்று கூறினர் பெரியவர்கள்...அவர்களின் அறிவாற்றல் இந்த நாட்டுக்குத் தேவை! இவர்களை இழக்க நான் இசையவில்லை...எனவே நாட்டைப் பொதுச் சபையிடம் ஒப்படைத்து விட்டு நான் முடிதுறந்துவிடத் தீர்மானித்துவிட்டேன்! நான் விடை பெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

[அரியணையிலிருந்து இறங்கி, அரசிக்குரிய சின்னங்களை யெல்லாம் களைந்துவிட்டு பொது மக்கள் சபைக்குவணக்கம் செலுத்தி அவைக்களத்தை விட்டு வெளியேற முயல்கிறாள். அப்போது அவசரமாக ஒருதூதன் செய்தியுடன் குமாரியின் முன் வந்து நிற்கிறான்.)

தூதன்: ஆபத்து! அரசியாரே—பேராபத்து! நடு நாட்டரசன் போர் தொடுத்து விட்டான். நம் நாட்டின் மீது...

குமாரி: போர் தொடுத்து விட்டானா?

தூதன்: புயலென ஓடிவந்தேன் அதைக் கூற—

குமாரி: பிரகடனத்தைக் கிழித்தெறியும், அமைச்சரே. நான் முடிதுறக்கப் போவதில்லை. அரசி குமாரதேவியின் படைகள் தயாராகட்டும்! நடுநாட்டின் மீது படையெடுக்கத் தீர்மானித்து விட்டேன்.

*   *   *

[தோட்டம். திலகாவை நினைத்து முத்துமாணிக்கம் உணர்ச்சி வசமாகிறான்.]

முத்து: திலகா! திலகா! என்ன பாடு பாடுகிறாயோ என்னால்? திருமணம் இல்லை என்ற உடனே வேதனை வெள்ளம் போலாகியிருக்கும்! யார் நம்புவார்கள் முத்து மாணிக்கம் திலகாவுக்குத் துரோகம் செய்வான் என்று? யாருக்குப் புரிகிறது என் துரோகத்துக்குக் காரணம் என்ன என்று? எப்படிப் புரிய வைப்பேன்?......

*   *   *

[மதிவாணன் வீடு. நாட்டின் தற்காப்பிற்காகத்தானன்றி, அரசி குமாரதேவி தன் காதலுக்கு முடிதுறக்கவில்லை யென்பதை உணராது மதிவாணன் குமுறுகிறான்]

மதி: என்ன, என்ன...முடிதுறக்கவில்லையா? முடியவில்லையா? விளக்கம் கூறுவதற்கு முடியாதா? முழு மூடனானேன்—மோசம் போனேன்.

ஓலை கொண்டுவந்தவன்: ஓலையைச் சரியாகப் பார்த்து விட்டுப் பேசும் மதிவாணரே......

மதி: ஓலை...? என் களிப்புக்கு மரண ஓலை இது...!

*   *   *

[மடம். அருமறையானந்தரும் மாசிலாமணியும் உரையாடுகிறார்கள்.]

மாசிலாமணி: இந்த மாளிகை, தங்கள் தங்கை மகனுக்குக் கட்டிக் கொடுத்ததை விட அழகாக இருக்கிறது...

இது......

அருமறை: அயோத்யா...அண்ணன் மகன் தொல்லை பொறுக்க முடியவில்லை......இதைக் கட்டிக்கொடுக்க வேண்டும். அதற்குப் பணம் கைவசம்......

மாசி: நேற்று ஆயிரம் அருள் சீட்டு விற்ற பணம் என்னிடம் இருக்கிறது......

அரு: மகரகண்டி வாங்கினோமே...அதற்குப் பணம் தந்தாகிவிட்டதோ......?

மாசி: மாணிக்கப் பூபதியிடம் அருள் சீட்டுத் தொகையை அதற்கே செலவிட்டேன்......

அரு; ஆறு கிராமங்கள் வாங்கிவிட்டு அவசரப் படுகிறாய்......

மாசி: அருமையான கிராமங்கள்...விட மனமில்லை...

அரு: பணம் தேவையாகியிருக்கிறது, பல காரியங்களுக்கு......இந்த ஆண்டிகளோ......

மாசி: அதோ வருகிறான்.

அரு: தடித்தாண்டவராயன்களே! அருள் சீட்டு விற்கக் கூடத் திறமை இல்லை என்றால் எப்படி நீங்கள் தனி மடாலயங்களைக் கட்டி ஆளப்போகிறீர்கள்?

பண்டாரம்: இம்முறை அதிகச் சீட்டுகள் விற்பனையாகும்.

அரு: வணிகர்களைத் தேடிப்பிடி. வயோதிகச் சீமான்களை விடாதே......குழந்தை யில்லாக் குடும்பங்கள் கணக்கைத் தயாரித்துக்கொண்டு, வேலையில் இறங்கு. இது தானே நான் வகுத்த முறை.

பண்: சொர்க்கவாசல் துவக்கவிழா நடத்திவிட்டால் பணம் மளமளவென்று குவிந்துவிடும் என்று கூறுகிறார்கள்.

அரு: யார் இல்லை என்கிறார்கள்? இது தெரியும் எனக்கும்! ஆனால் துவக்க விழாவுக்குப் பணம் வேண்டாமா? துதி பாடிவிட்டால் விழா நடந்து விடுமா? பணம் திரட்டுமய்யா பணம்!

பண்: சென்று வருகிறோம்......

அரு: சென்று கூறும்! சொர்க்கவாசல் துவக்கவிழா

விலே மதுரகவி, அரசியைக் காணிக்கையாய்ப் பெற்ற அமரகவி......மதிவாணன் இசைவிருந்து உண்டு என்று.....

புண்: இசைவிருந்து! சொன்னால் போதுமே......சீட்டுக்கள் சீட்டுபோல் பறக்கும்......

ஃ ஃ ஃ

[வனத்தில். மதிவாணனும் கவிராயரும்.]

மதி: ஐயனே...ஐயனே...

கவிராயர்: மகனே! இது என்ன மருட்சி?

மதி: என் தலை சுற்றுகிறது! மனம் எரிமலையாகி விட்டது!

கவி: எதனால்......? உண்மையைக் கண்டதாலா?

மதி: உத்தமன் என்று ஊரெல்லாம் புகழ்கிறது! அந்த உலுத்தனை......

கவி: நீயும் புதுப்பாடல்களைப் பாடினாயே, அவனைப் புகழ்ந்து......

மதி: காட்டு ராஜாப்போல் பேசுகிறான் ஆண்டிக் கோலத்தில் உள்ள அக்ரமக்காரன், பூசுவது திருநீறு—ஐயோ. நாடு எப்படிச் சகித்துக் கொண்டிருக்கிறது, இந்த நயவஞ்சகத்தை? ஐயனே சொர்க்க வாசல் கட்டுகிறானாம், அந்த சோற்றுத் துருத்தி!

கவி: பொருள் திரட்ட புதுவழி......

மதி: துவக்க விழாவாம்! அதில் என் இசை விருந்தாம்!!

கவி: சொன்னானா......?

மதி: நான் அவனைக்காணவில்லையே! முடியவில்லை!! அக்ரமக்காரன் ஆண்டிகளிடம் பேசினது கேட்டு ஓடோடி வந்துவிட்டேன், உம்மிடம் கூற......

கவி: சொர்க்க வாசல்!!! சொர்க்கவாசலா கட்டப் போகிறான்? அதன் மகிமையை மதுர கீதம் பாடி மக்களுக்குத் தெரிவிக்கச் சொல்லுகிறான் உன்னை......

மதி: அந்த அக்ரம விழாவிலே நான் ஈடு படேன்!

கவி: சொர்க்க வாசல்! இங்கே நரகமிருக்கிறது, நாற்றமடித்துக்கொண்டு......ஏமாளிகளைக் கொள்ளை அடித்துச் சொர்க்க வாசல் கட்டுகிறானாம், சொர்க்க வாசல்! மகனே! நரகத்தைப் பார்த்ததுண்டா...? நேரம் இருந்தி

டாது உனக்கு...உல்லாசபுரியிலே உலவியவனல்லவா? உன் கண்களிலே நரகம் தெரிந்திராது...வேந்தன் வெற்றிவேலனால் ஏற்பட்ட இந்த வேதனை தரும் காட்சியைப் பார். மன்னன் நமக்கென்ன என்று இருந்துவிட்டதால் மக்கள் படும் அவதியைப் பார்...நல்லறிவு பெற்றவர்கள் நமக்கென்ன என்று இருந்துவிட்டதால், ஏற்பட்டுவிட்ட நரகத்தைப் போய் பார்க்கலாம் வா......வா, மகனே, வா...... மதிவாணா! இந்த நரகத்தை மறைக்க சொர்க்க வாசல் கட்டுகிறார் மத அதிபர்—முறையா? இவர்களுக்கு இதம் செய்யப் பணத்தைச் செலவிடச் சொல் மகனே. சொர்க்க வாசலுக்கு அல்ல......

ஃ ஃ ஃ

[மடம். அருமறையானந்தர் முன் மாசிலாமணியால் மதிவாணன் அழைத்துவரப்படுகிறான்.]

மாசி: கண்டு பிடிப்பதே கஷ்டமாகிவிட்டது. வீட்டிலே தங்குவது கிடையாதாம்.

அரு: விசாரம் மதிவாணனுக்கு! குமாரதேவியின் யோகம் மனதை உடைத்து விட்டிருக்கும்! கவலைப் படாதே, மதிவாணா! எங்கே போயிருந்தாய் பல நாட்களாக......

மதி: நரகத்துக்கு......

அரு: நரகத்துக்கா? மதிவாணா! என்ன மனக் குழப்பம் இவ்வளவு? காதல் கைகூடா விட்டால் கஷ்டம்தான்! ஆனால் அதற்காக உலகை வெறுத்துவிடுவதா?

மதி: (ஆத்திரத்துடன்) காதல் சம்பந்தமாக விளக்கம் வேண்டாம்!

மாசி: கோபம் இப்படிவரக்கூடாது! அதுவும் இந்த இடத்தில்!

மதி: அழைத்த காரணம்?

அரு: சொர்க்க வாசல் விழாவுக்கு நாள் குறித்து விட்டேன்! விழாவிலே உன் இசைவிருந்து! பல நாட்டு மன்னர்கள், பிரபுக்கள், கலாரசிகர்கள், பக்த கோடிகள், இவர்கள் முன்னிலையில் உன் இசை விருந்து......

மாசி: இதுவரை அப்படிப்பட்ட திருச்சபையை நீ கண்டிருக்கமாட்டாய்! இனிக் காணவும் முடியாது!

மதி: இப்போது கூட அந்தத் திருச்சபையைக்

காணப்போவதில்லை நான்!

அரு: (கோபத்துடன்) மதிவாணு......!

மதி: நான் விழாவிலே பாடமுடியாது! விழா அல்ல அது; வீண் கொண்டாட்டம்!

அரு கலந்துகொள்ள...? மதிவாணு என்ன சொல்கிருய்?

மாசி கலந்து கொள்ள மாட்டாராம் இந்த ராஜாதி ராஜன்!

அரு. மதிவாணு! என் கோபத்தைக் கிளருதே!!

மதி: பாபத்துக்கு நான் உடந்தையாக இருக்க முடியாது! வேண்டாம் இந்த வீண் விழா! நாட்டிலே நரகம் இருக்கிறது நாற்றமடித்துக் கொண்டு...அதை ஒழிக்காமல் சொர்க்க வாசல் கட்டுவது படுமோசம், நயவஞ்சகம்!

அரு துரோகி! நான் அழைக்கிறேனடா, இந்த நாட்டு மதத்துக்கு அதிபராக உள்ள நான் அழைக்கிறேன்!

மதி: நான் மறுக்கிறேன்!!

அரு எங்கோ கிடந்த உன்னை இவ்வளவு நல்ல நிலைக்கு கொண்டு வந்தேன்! என் மனதைப் புண்ணுக்காதே, மதிவாணு! சொர்க்க வாசல் விழா புனிதமானது! புண்ணிய காரியம்!

மதி அருமறையானந்தரே!

(மதிவாணன் அழைக்கும் முறை கண்டு அருமறையானந்தர் அதிர்ச்சியுறுகிருர்.)

மாசி: மடையா! அவ்வளவு ஆணவமா? குருதேவா என்று கூருமல் பெயரிட்டா அழைக்கிருய்?

மதி. குரு எனக்குக் கிடைத்துவிட்டார்கள்! ஐயா கண் திறந்து விட்டார்கள்!

அரு. வேண்டாமடா, மதிவாணு! வேகவைக்காதே நெஞ்சை!

மதி: நான் அந்த விழாவிலே பங்கு கொள்ள முடியாது!

அரு. நான் கட்டளையிடுகிறேன். விழாவில் பாடத்தான் வேண்டும்!

மதி: நான் மறுககிறேன்!

அரு: பிணமாவாய்!

மதி. பிணம்—பாடாது......!!

மாசி: இவனுடைய மண்டைக் கர்வததை மனனனி

டம் கூறு......

அரு போ நாயே, வெளியே போக்கிடமின்றி இருந்த உன்னைப் போக போக்கியத்திலே புரளச் செய்தேனே! நன்றி கெட்ட நாய்க்குட்டியே, போ இந்த இடத்தை விட்டு.....

(மாசிலாமணி தள்ள, மதிவாணன் வெளியேறுகிருன்.)

* * *

(வெற்றிவேலர் அரண்மனை—ஓர் கூடம் அரசனும், அருமறையானந்தர் மடத்தவரான மாசிலாமணியும் அமைச்சருடன்.)

அமைச்சர்: மதிவாணனைத தீர்த்துக்கட்ட இதுதான் சமயம்—மக்கள் பாய்வர் அவன்மீது—மண்டலம் நமது பக்கம் திறகும்.

வெற்றி: விளங்கவில்லையே......?

அமைச்சர்: மதிவாணன் நாத்திகன். புனித விழாவிலே பாட மறுத்தான் நாம் குற்றம் சாட்டுகிருேம். விசாரணை—தண்டனை......

வெற்றி: அருமையான திட்டம், அமைச்சரே! நாத்திகன். நாடு சீறும் அந்தச் சொல் கேட்டு! தொலையட்டும் துரோகி—விசாரணைக்கு ஏற்பாடு செய்யம்!

* * *

(வெற்றிவேலர் அரசவை கூடியிருக்கிறது. அருமறையானந்தர், மாசிலாமணி முதலியவர்கள் வீற்றிருக்கின்றனர். மதிவாணன் குற்றவாளியாக் இரு போர் வீரர்களின் நடுவிலே நிறுத்தப்பட்டிருக்கிருன்.)

வெற்றிவேலன்: (கோபமாக) மதிவாணா! நான் கட்டளை இடுகிறேன். விழாவிலே நீ பாடத்தான் வேண்டும்

மதி: (உறுதியாக) முடியாது வேந்தே! மான் இரத தம குடிக்காது—வேங்கைபோல......

வெற்றி: புனித விழாவிலே கலந்துகொள்ள மறுப்பது, எந்த விதமான குற்றம் தெரியுமா?

மதி: கூறுங்கள் வேந்தே!

வெற்றி: நீ ஓர் நாத்திகன்!

மதி: ஆ......நான் நாத்திகனல்ல, வேந்தே! நாத்திக னல்ல. பாபம் புரியும்படி தூண்டவில்லை. சத்தியம் வேண்டாமென்று சொல்லவில்லை. சன்மார்க்கம் ஏன் என்று கேட்கவில்லை.—சாந்தம், ஒழுக்கம், அன்பு, தயை, நீதி, நேர்மை எதையும் மறுக்கவில்லை......

வெற்றி: சொர்க்கவாசல் விழாவிலே கலந்துகொள்ள மறுக்கிறாய்!

மதி: ஆமாம், அரசே! விழா கூடாது என்கிறேன். மக்கள் வாடுகிறார்கள். வாழ்விலே சுகம் கிடைக்காமல்— நாட்டிலே நரகம் இருக்கிறது. நானே கண்டேன். எனவே தான் விழா கூடாது என்கிறேன்! கடவுளை வேண்டாம் என்று கூறவில்லை......

வெற்றி: போதும், உன் புது ஞானம்! இன்று விழா வேண்டாம் என்கிறாய். பிறகு துறவி வேண்டாம், குரு மார் வேண்டாம் என்று பேசுவாய். பித்தம் வேகமாக வளரும்......

மதி: மக்களின் மனமாசு போக்க, ஒழுக்கத்தை வளர்க்க, துறவிகள் தேவை என்றால் புத்தர்போல் போதிக் கட்டும் பற்றற்று. பசித்தால் புசித்து வியர்த்தால் குளித்து, நிழல் கண்டால் படுத்து, செம்பொன்னும் ஓடும் ஒன்றெனக் கண்டுள்ளவர்களே துறவியென்று ஆன்றோரும் சான்றோ ரும் கூறியுள்ளனர். இவர் முறை இவ்விதமா இருக்கிறது...?

அருமறை: வேதனை எப்படியிருப்பினும் தேவ காரியத்துக்கு என்று கேட்டால், தட்டாமல் தயங்காமல் காணிக்கை தருகிறார்களே மக்கள். கருத்தற்றவனே, இதன் பொருள் என்ன, காணிக்கை குவிந்திருக்கிறது குன்று போல.

மதி: காணிக்கை குவிந்ததே! எதற்குச் செலவிட் டார்? சன்மார்க்க போதனைக்கா?

அருமறை: அஞ்ஞானிகள் கொட்டத்தை அடக்க. கள்ளி காளான்களை களைந்தெறியா முன்னம் செந்நெல்லைத் தூவுவரோ அறிவுடையோர்?

மதி: ஞான பூமியிலே ஏனய்யா கள்ளி காளான் முளைத்தது?

அரு: உன்போன்ற பாபாத்மாக்களின் செயலால் தான்.

மதி : முளைத்துவிட்ட கள்ளிகாளான்களைக் காட்டு கிறேன். வயல் உம்மிடம் இருந்தது. உபதேசம் என்ற ஏர் கொண்டு உழுதீர். மக்களின் உழைப்பு என்னும் நீர் பாய்ச்சினீர். முளைக்கக்கிடப்பதோ கள்ளிக்காளான். தினை விதைத்தால்தானே தினை கிடைக்கும்!

வெற்றி : இவனிடம ஏன் விவாதம்? வீண்வேலை—கேள்வி—பதில்—தீர்ப்பு—இதுதான் முறை—மதிவாணா...... சொர்க்கவாசல் விழாவை கண்டிக்கிறாய் இப்போதும்?

மதி : ஆமாம், அரசே! தேவகாரியம் அல்ல அது; தேவையான காரியமும் அல்ல அது, என்று கண்டித்தேன்!

வெற்றி : உபதேசம் செய்தாயோ நீ?

மதி : இல்லையே. அது அவருடைய உரிமையல்லவா! உண்மையை உரைத்தேன். உபதேசம் செய்யவில்லை. கடமையைச் செய்தேன்.

வெற்றி : கடவுளின் காரியத்தைக் கெடுப்பதுதான் கடமையா?

மதி : கடவுளின் காரியத்தைக் கெடுப்பவனல்லவே நான்! கடவுளின் பெயர் கூறிக்கொண்டு கயவர்கள் வெட்டும் படுகுழியில் விழமறுத்தேன். குன்றுபோலக் குவித்த தாமே காணிக்கை. ஏழைக்கு இதம் தரும் ஏற்பாட்டுக்குச் செலவிடக்கூடாதா என்று கேட்டேன். அறம் அது தானே?......என்று கேட்டேன்.

வெற்றி ; பேசக் கற்றுக்கொண்டான்—பிரமாதமாக...

அரு : மயக்கமொழி பேசுகிறான் மக்களை வசப்படுத்த.

மதி ; மக்களை மரக்கட்டைகள் என்று எண்ணாதீரய்யா. யார் எதைச் சொன்னாலும் நம்பிவிடும் நிலையில் மக்கள் இன்று இல்லை!

அரு : பொய்யை மெய்ப்போலப் பேசும் வித்தை தெரிந்திருக்கிறது உனக்கு.

மதி : அந்தப் பெரும் வித்தை தங்களுடையஏகபோக பாத்தியதை அல்லவா?

வெற்றி : விசாரணை முடிந்தது! வீணனே கேள், உன் மீதுள்ள குற்றங்களை புனிதவிழாவிலே கலந்துகொள்ள மறுத்தது, விழாவைக் கேவலமாகப் பேசியது, பூஜ்யர் அருமறையானந்தரை அவமதித்தது, அரச மார்க்கத்தை

இகழ்ந்தது ஆகிய இவ்வளவு குற்றங்களைச் செய்திருக்கிறாய்.

மதி: இவைகளில் ஒன்றைக்கூட நான் மறுக்கவில்லை ஆனால் இவைகளைக் கூட்டிப்பார்த்து நான்நாத்திகன் என்று கூறுகிறீர்களே, அந்தத் தப்புக் கணக்கைத்தான் மறுக்கிறேன்.

வெற்றி: குறுக்கே பேசாதே. இவைகளைச் செய்ததால் உன்னை நாத்திகன் என்று நாம் குற்றம் சாட்டுகிறோம்.

பிரபுக்கள்: நாத்திகன்தான் இவன். நாத்திகன்தான் இவன்!! நாத்திகன்தான் இவன்..!

மதி: அதை நான் மறுக்கிறேன்.!.. மீண்டும் நல்லறிவை நாத்திகம் என்கிறீர், வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் வித்தியாசம் தெரியாத குருடனைப்போல......அல்ல நாதன் அருளைப்பெறும் வழி என்று கூறுவதா நாத்திகம்? அன்பும் அறமும் அறிந்து உண்மையை உணர்ந்து தன்னலத்தைத் தகர்த்தெறிந்திட பொதுநலத்துக்குப் பாடுபட்டு, நாட்டைப் பொன்னாடு ஆக்கினால், மக்களை வாழ வைத்தால் இறைவன் அருளைப் பெறலாம் என்று எடுத்துக் கூறுவதா நாத்திகம்? எது நாத்திகம்? அன்பையும் அருளையும் செழித்திடச் செய்வதற்காக ஏற்பட்ட இடங்களிலே அக்ரமம் தலைவிரித்து ஆடினால், அறம் அறிந்தோர் கண்டிக்காமலிருக்க முடியுமா? கண்டிப்பதா நாத்திகம்?

வெற்றி: மண்டைப்புழு இவனுக்கு! மகான்களை ஏசும் உன்னைக் காண்பதும் மகா பாபம். இந்த நாடு இப்படிப்பட்ட மகாபாபிகளைத் தாங்கிக்கொண்டிருக்கச் சம்மதிக்காது. இனி நாத்திகனே; உன்னை நாம் நாடு கடத்துகிறோம். இந்த வினாடிமுதல்.........

மதி: (உருக்கததுடன்) ஒரு குற்றமும் செயயாத எனக்கா இக் கடுந்தண்டனை.........? மக்கள் இதையா நீதி என்று எண்ணுவார்கள்......?

வெற்றி: நாத்திகன் இரததம இந்தப் புனித பூமியில் படுவதும் பாபம். எனவே கொல்லாது விட்டோம்—ஓடு இந்த நாட்டைவிட்டு!

மதி: (உருக்கத்துடன்) உண்மைக்காகப் பரிந்துபேச ஒருவரும் இல்லையா? ஏழை பங்காளர் பூண்டே இல்லையா?

வெற்றி: காசகாலனே...நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட பிறகு போய் அழைத்துவா உன் வீரர்களை, எங்கிருந்தாவது, புது ஞானபோதகனே போ! போய்க் கூட்டிவா உன் படைகளை—ஞான குருவை நிந்தனை செய்துவிட்டு வேழ நாட்டிலே வாழ முடியுமா? உம்...இவனுடைய விருதுகள் சின்னங்கள் எல்லாவற்றையும் களைத்தெரியுங்கள்.

மதி: ஆத்திரமாகப் பேசுகிறேன் என்று எண்ணுவீர் அறிவுடையோரே, அருமறையானந்தர் போக்கு என் மனதை எரிமலையாக்கிவிட்டது. கனல் கக்கினேன். அருள்சீட்டு வாங்குவீர், அய்யன் அருளைப் பெருவீர் என்று மக்களிடம் கூறினார். பொருளைத் திரட்டினார். மாளிகைக்கும் மகர கண்டிகைககும், ஆறு கிராமங்கள் வாங்குவதற்கும் செலவிட்டார். சுயநலத்திற்கும் செலவிட்டார். விட்டார்...பஞ்சவர்ணக்கிளி கொஞ்சிப் பேசும் என்று அருகில் செல்லும்போது, அது கண்ணைக் குத்தினால் கடும் கோபம் வாராதா? சன்மார்க்கம் தழைத்திட பணிபுரிவார் என்று நம்பினோம். இவரோ சுயநலம் பிடித்து ஆடுகிறார். அக்ரமம் செய்கிறார்!

வெற்றி: யார்முன் பேசுகிறோம் என்பதை மறந்தாய். மதியிலி சாலையோரத்திலே கிடக்கும் வேலையற்றதுகளிடம் பேசிப் பழக்கமோ?

மதி: சாலையோரத்திலே வேலையற்றதுகள் இருப்பதுதான் அரசே ஆபத்து—படையும் அழிக்க முடியாத புயல் அரசே. அந்த வேலையற்றதுகள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டன. அவர்களின் முகம் கேள்விக் குறியாகிவிட்டது. அவர்களிடம் நான் பேசுகிறேன், என்றீரே! உண்மை. என் பேச்சும் அவர்களுக்கு புரிந்தும்விட்டது. பொருள் தெரிகிறதா, வேந்தே? சாலையோரத்திலே வேலையற்றதுகள்—வேலையற்றதுகள் மனதிலே விபரீத எண்ணங்கள். வேந்தே இதுதான் காலக்குறி!

அருமறை: பிதற்றுகிறான்—மனக்குழப்பம்.

வெற்றி: மிரட்டுகிறான் நம்மை யாரென்று அறியாமல்...

மதி: நாட்டைத் தமது களி நடனக்காடாக்கிக் கொண்டு, அரண்மனைகளைத் தமது சிற்றின்பக் கூடமாக்கிக்கொண்டு, அடுத்து கெடுப்போர் யார்? அறநெறி அறிந்தோர் யார்? என்ற விளக்கமும் அறியாது, துடியிடைக்கும் கொவ்வை அதரத்துக்கும், தேன் மொழிக்கும், தேக காந்திக்கும் அடிமைப்பட்டு, மக்களின் மனம் ஓர் எரிமலை, அதை ராஜபக்தி என்னும் சல்லாத் துணிகொண்டு மறைத்துவிட முடியாது என்ற சாதாரண உண்மையையும் மறந்து, வயல்கள் வெடித்துக் கிடந்தாலும் ஆறுகள் வரண்டு போயினும் மாடு கன்றுகள் செத்து, மக்கள் எலும்பும் தோலுமாகிப் போகினும், தமக்கு மகிழ்ச்சிதர மங்கையும், மதுவும் தமது கொலு மண்டபத்திலே கோணங்கிகளும் கொடிபிடிப் போரும் இருக்க வேண்டும், ஊருக்கோர் உல்லாசக் கூடம் இருந்தாக வேண்டும், வீரமில்லாவிட்டாலும் விருதுகள் வேண்டும், என்று இறுமாந்துகிடக்கும் வேந்தர்களிடம்—கைகட்டிக் கட்டியங்கூறி, கவிபாடி காலந் தள்ளிவந்த கபோதிக்கு, அறிவுக்கண் திறந்திடவும் அன்புநெறி தெரிந்திடவும் செய்த ஐயனின் அருளால்...ஆபத்துக்களைத் துரும்பாக எண்ணும் துணிவையும், உயிரையும் இழக்க நேரிட்டாலும் உள்ளத்திலேற்பட்ட உண்மையை உரைக்க அஞ்சலாகாது என்ற ஆற்றலையும், பெற்றேன்

அரசே, தங்கக் கூண்டிலே அடைபட்டுக் கிடக்கும் கிளியல்ல. வானத்திலே வட்டமிடும் வானம்பாடி—மக்களின் கவி, மண்டலங்களை ஆக்கவும் அழிக்கவும் வலிமைபெற்ற மக்களின் கவி, மணிமுடிகளைத் தரவும் பறிக்கவும் உரிமை பெற்ற மக்களின் கவி, மக்களின் கவி பேசுகிறேன், மன்னா! மக்களின் கோபத்தை கிளராதீர் என்று எச்சரிக்கிறேன்!

வெற்றி: இழுத்துச் செல்லுங்கள், நாயை…உம்…துரத்துங்கள் நாட்டைவிட்டு வெளியே! நாத்திகன் மதிவாணன் ஒழிக.

பிரபுக்கள்: ஒழிக!…ஒழிக…!!

(மதிவாணன் வீரர்களால் இழுத்துச் செல்லப்படுகிறான்.)

★

(தெருவில் சிப்பாயின் அறிவிப்பு)

சிப்: நாத்திக மதிவாணன் நாடு கடத்தப்பட்டான். அவனுக்குத் தங்க இடம் கொடுத்தால் தண்டனை…உணவு கொடுத்தால் தணடனை.

(அதைக்கேட்ட கவிராயர் துடிக்கிறார்.)

கவிரா: மதிவாணன் நாடு கடத்தப்பட்டான். வெற்றி, வெற்றி! கவிதைக்கு வெற்றி. இனி அறிவுப் புரட்சி ஆரம்பமாகிவிடும். மதிவாணன் மகத்தான பரிசு பெற்றுவிட்டான்…மதிவாணா, மதிவாணா!

(வீதியில் மக்கள் செல்வதைக் கண்டு கற்பகத்தம்மையும் திலகாவும் பதறிச் சென்று ஒருவனிடம் கேட்கிறார்கள்.)

கற்ப: ஐயா, விசாரணை முடிந்ததா? என் மகனுக்கு ஆபத்து ஒன்றும் இல்லையே?

திலகா: தீர்ப்பு அளித்தாகிவிட்டதா?

ஒருவன்: என்னம்மா செய்யலாம்—நாடு கடத்திவிட்டாங்க, உங்க மகனை.

திலகா: நாடு கடத்திவிட்டார்களா?

கற்ப: ஏதோ அந்த மட்டோடு போச்சே. ஆண்டவனே என் மகன் உயிருக்கு ஆபத்து இல்லை! நாடு கடத்தினாலென்ன. வேழ நாட்டிலே இருக்கக் கூடாது. அவ்வளவுதானே!

(மக்களை விரட்டியபடி படைவீரர் சிலர் வருகிறார்கள். மதிவாணன் வீட்டிற்குள் நுழைய முயல்கிறார்கள். திலகா வாயிற்படியில் கையை விரித்துத் தடுக்க முயல்கிறாள்.)

படை வீரர்களில் ஒருவன்: அவனுக்கு இவ, தங்கச்சி!

திலகா: இவ, அக்ரமம். என்ன தடுக்குத்தனமான பேச்சு!

(திலகாவின் கையைப் பிடித்துத் தள்ளி அவளைப் பம்பரம் போலச் சுழற்றிவிடுகிறான் இன்னொரு வீரன்.)

வீரன்: சீசீ, வாயாடி!

கற்ப: ஆ…

வீரன்: அண்ணன் ஆஸ்தான வித்வானாச்சே என்கிற கர்வமா? அது மலை ஏறிப் போச்சு!

கற்ப: அப்பா, அப்பா, அவ சிறுபெண். கோபிக்காதே!

(கற்பகம் பதறிச் சென்று தன் மகள் திலகாவின் வாயை மூட முயல்கிறாள். அவளோ தாயின் கையைத் தள்ளிவிடுகிறாள்.)

திலகா: விடம்மா! என்ன தலையா போய்விடும்? அண்ணனையே காடு கடத்திவிட்டார்களாம்! இந்த நாட்டிலே நியாயமா கிடைக்கும்? (இதற்குள் சில பகை வீரர்கள் உள்ளே நுழைய) பாரம்மா, பாரம்மா உள்ளே போவதை. ஏ சிப்பாய், ஏய்!

(வேறு சில படை வீரர்கள் திலகாவின் கரத்தைப் பற்றிக் கொள்கிறார்கள்.)

ஏ···சீ···விடு.

கற்பக: அப்பா இது என்னப்பா, ஏனப்பா—இம்சை?

சிப்பாய்: அட யாரம்மா விவரம் தெரியாமே பேசறே, இந்த வீட்டை பறிமுதல் செய்ய உத்தரவு!

இன்னொருவன்: உங்க இரண்டுபேரையும் அரசாங்க விடுதிக்கு அழைத்துவரச் சொல்லியும் உத்தரவு இருக்கு!

திலகா: சிறையா எங்களுக்கு?

கற்ப: ஐயோ, ஏம்பா? என் மகனோடு நானும் திலகாவும் இந்த நாட்டைவிட்டுப் போய்விடறோம்பா!

சிப்: உம்·· உம்·· நடங்க···உம்.

(படை வீரர் சிலர் வீட்டை இழுத்துப் பூட்டிவிடுகிறார்கள். இருவர் வீட்டின் எதிரே காவலுக்கு நிற்கிறார்கள். திலகாவை யும் கற்பகத்தையும் வேறு சில வீரர் இழுத்துச் செல்கின்ற னர்.)

(மதிவாணனின் தாய் கற்பகமும் திலகாவும் சிறையில் தள் ளப்படுகின்றனர்.)

*

(வீதி: கவிராயரும் மதிவாணனும் இருவரும் ஒருவரை நோக்கி ஒருவர் உணர்ச்சி வசமாக ஓடி வருகிறார்கள்.)

கவிராயர்: மதிவாணா···மதிவாணா···

மதிவாணன்: ஐயனே, ஐயனே, ஐயனே···!

கவி: மகனே···

சிப்: வாயாடி. வா இங்கே.

மதி: ஏன் எதற்காக? அடப்பாவிகளா 'ஏனடா இந்தப் பெரிய வரைத் தாக்குகிறீர்கள்·· ஐயோ···அக்ரமத்துக்கு ஒரு அழிவே கிடை யாதா. அரசன் அளிக்கும் கூலிக்காக கொலை பாதகர்களாகலாமா, கொடியவர்களே? சாந்தம் தவழும் இந்த முகத்தைச் சற்றுப் பாருங் களடா. அருள் ஒழுகும் கண் களைப் பாருங்கள்—உங்களுக்காக உழைக்கும் உத்தமரடா—பேரறிவாளரடா—பெரியவரடா இவர்—பாவிகளே...ஐயோ! என் ஐயனை இனி ஒருவன் அடித்தால்...ஆ.., (மதிவாணன் தாக்கப்படு கிறான்)

கவி: மக்கள் கவிஞனே. மதிவாணா! வெற்றியடா இதுதான் நம் வெற்றி! வீரனே மதிவாணா, நிமிர்ந்து நில். ஏறு நடைபோடு, வெற்றி! வெற்றி!!

(வீரர்களால் தாக்கப்பட்ட கவிராயர் மயக்கமுற்று சாய்கிறார் இரத்தம் ஒழுக, ஒழுக, அவர் ஒருபுறமாகவும் மதிவாணன் ஒருபுறமாகவும் இழுத்துச் செல்லப்படுகின்றனர்.)

சிப்: வாயாடிக் கிழவன் செத்துத் தொலைந்தான்!

★

(ஊரின் வெளியே பூங்காவனம் வருகிறார்.)

பூங்கா: மதிவாணரே ..மதிவாணரே!

மதி: ஐயா, நான் எங்கே இருக்கிறேன்—என்னைக் காப்பாற்றிய நீங்கள் யார்?

பூங்: வேழநாட்டில் இல்லை மதிவாணரே! ஆஸ்தான கவியாக எந்த வேழநாட்டில் கொலுவீற்றிருந்தீரோ அந்த வேழநாடு அல்ல இது. இது ஏழைகள் நாடு—அடுத்து இருப்பது காடு.

மதி: சரியான தண்டனை எனக்கு. கவிராயர் கதி என்ன ஆயிற்றோ? ஐயா. உன் பெயர் என்ன? யார் நீ?

பூங்: என பெயர் பூங்காவனம்.

மதி: பூங்காவனமா? எங்கோ எப்போதோ கேள்விப்பட்ட பெயராக இருக்கிறது.

பூங்: கவிராயருக்கு நான் நண்பன்.

மதி: கவிராயர் நண்பனா? அவர்கதி என்ன அப்பா?

பங்: எவ்வளவு முயற்சித்தும் காப்பாற்ற முடியவில்லை!

மதி: பாவிகள் அவரைப் பலமாகத் தாக்கிவிட்டார்களே. எனக்கு அறிவளித்த அண்ணலைக் காப்பாற்றும் ஆற்றல் இல்லையே எனக்கு. முயற்சித்தேன், நானும். முடியவில்லை!

பூங்கா: மதிவாணரே!, களைப்பு நீங்கியதும் பேசலாம்!

★

(வேழ நாட்டில் சொர்க்க வாசல் விழா—ஊர்வலம் நாட்டிற்கு வெளிப்புறம், மதிவாணனும் பூங்காவனமும் உரையாடுகிறார்கள்)

பூங்: மதிவாணரே, அறப்போர் தொடுக்க அருமையான சமயம். போம் ஊருக்குள்ளே. விழாப்பந்தலுக்கு வேண்டாம். வேறோர் பக்கம். (சிலரைக் காண்பித்து) இவர்கள் வருவார்கள் உம்முடன். சென்று எது உண்மையான சொர்க்கவாசல் என்பதைப் பாடும். மக்கள் கேட்கட்டும்!

மதி: சரி, பூங்காவனம்.

ஒருவன்: இது சரியான காரியம். புறப்படுங்கள்.

மதி: இங்கே!

(அந்தரத்தில் நீர்ப்பாய்ச்சி என்ற பாட்டு)

(சொர்கக வாசல் விழா)

அருமறையானந்தர்: மெய்யன்பர்காள்! திரு அருளைப்பெற மார்க்கம் எது என்பதை திருமறைகள் தெளிவாகக் கூறிவிட்டன! மெய்யன்பர்காள். இந்திரியங்களென்னும் துஷ்டக் குதிரைகளுக்கு அறிவெனும்

கடிவாளமிட்டு, அடக்கித் தன்னெறி என்னும் பாதையிலே செலுத்து கிருனே, அவனே இறைவனடி எனும் திருத்தலத்தை அடைவான்.

(வேருெருபுறம் மதிவாணன் பாடுகிருன்)

எல்லோரும்: அருமறையானந்தர் வாழ்க! அருமறையானந்தர் வாழ்க!

(வேருெருபுறம் மதிவாணன் பாட்டு கேட்கிறது. மக்கள் கூட்டம் அவன்முன் அதிகரிக்கிறது. அருமறையானந்தன் பேச்சைக் கேளாதவராய் பெரும் பாலானவர் எழுந்து மதிவாணனிடம் செல்கின்றனர். அது கண்டு வெற்றிவேலரின் ஏவலால் படைவீரர்கள் மதிவாணன் பாடும் கூட்டத்தில் புகுந்து கலக்கிருர்கள்)

(மலைவாசிகளின் துணையினுல் மதிவாணன் அங்கு கொண்டு போகப்படுகிருன். அங்கு பூங்காவனம் காத்திருக்கிருன்)

மதிவாணன்: (பூங்காவனத்திடம்) வெற்றி···மகத்தான வெற்றி!

மலைவாசி: விழா பாழ்···

மதி: மக்கள் கடல்போல் கூடினர். நான் பாடுவதைக் கேட்க.

மலைவாசி: விழாவிலே, வேஷதாரிகள் மட்டுந்தான்! மக்கள் நமது பக்கம்.

பூங்கா: மதிவாணரே, உமது இசைத் திறமை எனக்குத் தெரியுமே நன்ருக! பாடலின் கருத்து என்ன?

மதி: எது உண்மையான சொர்க்கவாசல் என்பது பற்றித்தான்!

மலைவா: இனி, நான்கூடப் பாடப்போகிறேன்.

இரண்டாவது மலைவா: நான்கூடத்தான்!

பூங்கா: மக்களில் பலர் இன்னும் உன்னை நாத்திகன் என்றுதான் எண்ணிக்கொண்டு இருப்பார்கள். ஆகையால் எது ஆஸ்திகம்—எது நாஸ்திகம் என்று பாடல் தயாரித்து இவர்கள் மூலம் நாட்டிலே பரப்பு!

மலைவாசி: அண்ணேன். எனக்கும் பாடத் தெரியும்.

மற்ருெருவன்: நம்ம சாரீரம் அண்ணேன் ஜிலுஜிலுன்னு இருக்கும், நம்மை மறந்துவிடாதே.

★

(மடம்)அருமறை யானந்தரும் மாசிலாமணியும் அமர்ந்திருக்கிருர்கள்

அருமறை: பாவி கெடுத்துவிட்டானே! அவமானமாகிவிட்டது!

மாசி! பிறமுகர்கள் யாரும் வெளியே போய்விடவில்லை! ஜனக் கூட்டம் வெளியே போய்விட்டது!

அரும: வெழிநாட்டிலிருந்து வந்திருந்த சீமான்கள் என்ன எண்ணியிருப்பார்கள்?

மாசி: ஆனல் காணிக்கை எதிர் பார்த்ததைவிட அதிகம்!

அரும: அதிகம்! மாசிலாமணி. அந்த மதிவானன் மட்டும் விழாவைக் கெடுக்காமலிருந்தால் அதைவிட அதிகம் குவிந்திருக்கும் தெரியுமா?

★

(மதிவாணன் ' ஆகும் நெறியெது? ஆகா நெறியெது? என்னும் பாட்டு இயற்றுகிருன். நாடெங்குப் அந்தப் பாடல் பரவுகிறது.)

பண்டாரம்: (ஒரு வீட்டில்) பால்காவடி தர்மம் – பால்காவடி தர்மம்!

மாது: போயிட்டு வாங்க!

பண்: பால்காவடி தருமம்;

மாது: தருமம் செய்தாகிவிட்டது!

பண்: எந்த சன்னிதானத்துக்கு?

மாது: பாலாபிஷேகத்துக்கு இல்லீங்க, ஏழை எளியவங்க வீட்டு குழந்தைகளுக்கு பால் கொடுத்துவிட்டோம்.

பண்: பாலாபிஷேகம்?

மாது: கிடையாதுங்க!

முதல் பண்டாரம்: ஆசாமி கொடாக்கண்டனாயிருக்கிறான். நாலு நாளாய் நடையாய் நடக்கிறோம்.

இரண்டாவதுபண்டாரம்: ஆசாமி சம்மதிக்கவில்லையே!

முதல்: நஞ்சை நிலம் அருமையானது அம்பலம்?

இர: தோட்டமும் சிலாக்கியம்தான்

முதல்: எல்லாம் மடத்துக்குத்தானே தானமாக எழுதிவைக்கிறதாகச் சொன்னான்?

இர: என்ன கச்சி முடிஞ்சிதா?

மற்றொரு: ஆஹா! முடிஞ்சுது, ஆள் போயிருக்கு, தாரை தப்பட்டைக்கு!

இர: ஆசாமி போய்விட்டானா! தான விஷயம்?

மற்: தானம் எழுதிவிட்டுத்தான் செத்தான். பூரா சொத்தையும் பள்ளிக்கூடத்துக்கு எழுதிவைத்துவிட்டான்!

முதல்: படுபாவிப்பய! அடியோடு கெட்டுப்போச்சு. வாங்க, வாங்க. மடாலயம் போவோம்!

★

(வெற்றிவேலன் அரண்மனை; வேந்தன், அமைச்சர், பணியாள் முதலியோர்)

பணியாள்: ஆணவக்காரனை அடித்து விரட்டினோம். ஆனால் ஊராரின் மனதை அவன் மயக்கிவிட்டிருக்கிறான்!

வெற்றிவேலன்: எப்படி?

பணி: மதிவாணனின் கவிதைகள் மக்களிடம் பரவி…

வெற்றி: கவிதைகள்…ஹம் கவிதைகள். அவன் பாடுகிறானும் அதுகேட்டு இவர்கள் ஆடுகிறார்களாம்…சரி. நாத்திக மதிவாணனின் பாடல்களை நமது மண்டலத்திலே இன்று முதல் யாரும் பாடக்கூடாது.—பாடினால் சிறை—தடை விதிக்கிறோம்!

★

வேறோரிடம்:

மலைவாசி-1: தடை போட்டுவிட்டானே தன்னலக்காரன்!

மலைவாசி-2: அரசன் அதிகாரமிருக்கிறது!

ம-1: மண்பொம்மைகளல்ல நாம் மதிவாணரே, தடையை மீறியாக வேண்டும்!

ம-2: தடையை மீறினால் தண்டனை கடுமையாகும்.

பூங்காவனம் : தூக்குமேடையிலும் பாடிக்கொண்டே இறக்கச் சித்தமாயிருக்கிறேன் !

மதிவாணன் : வீரனே ! அறைக்க அறைக்கத்தான் சந்தனம் மணக்கும். தடையினுல் என் கவிதையின் சக்தியை வளர்த்துவிடும்....

ம-1 : மதிவாணரே, தடையை மீறப்போகிறேன் நான் !

ம-2 : நானும்தான்...

ம-3 : நான் மட்டுமென்ன...

எல்லோ : நாங்கள் தயார். தடையை மீறுவோம்.

மதி : இப்படைத்தோற்கின் எப்படை ஜெயிக்கும் ? மீறுவோம் தடையை...

எல்லோ : பாடுவோம் கவிதையை !

(ஆகும் நெறியெது, ஆகா வெறியெது எனும் கவிதையைப் பாடிச் செல்கின்றனர்)

சிப்பாய் : தடை ! பாடாதே ! பாடாதே !! தடை !! உத்திரவு தெரியாதா ?

மலைவாசி : தெரியும் ! மன்னனுக்குத்தடை விதிக்கத்தெரியும் ! மாவீரருக்கு அதை மீறத்தெரியும் !!

சிப்-1 : போசகிரி !

சிப்-2 : முட்டாள் !!

சிப்-3 : இழுத்து வாருங்கள்....

சிப்-4 : கலைந்து செல்லுங்கள். ஹா, கூட்டம் ஏன் ? என்ன கூட்டம்.?

(ஒரு கூட்டத்தினர் பாடி வருகின்றனர்)

மலைவாசி : தடையா விதிக்கிறீர்கள், தடை ! கேள், பாடலை... அதோ ?...

மலைவாசி : எங்கும் கேட்கும் அந்த இன்பக்கவிதை...புல்லர்கள் கொட்டம் அழியும் வரையில். புரட்சிக்கவிதை இருந்தே தீரும். தடையாம் தடை...அதோ தடை உடைபடுகிறது...

(பாடியவன் தலையிலே தடியடி விழுகிறது. ரத்தம் ஒழுக ஒழுக அவன் பாடுகிருன் சிறைக்கு இழுத்துச் செல்லப்படுகிருன்)

★

அரண்மனை : வெற்றிவேலன் உப்பரிகையில் உலாவிக்கொண்டிருக்கிருன்.

வெற்றி : (கோபமாக) தடையை மீறிவிட்டார்களா ? தரித்திரப் பயல்களுக்கு அவ்வளவு துணிவு...சிறையிலே கிடக்கட்டும் நாய்கள். கஞ்சிக்கலயமும் இரும்புக்காப்பும்தான் பரிசு இதுகளுக்கு. ஹூம். கவிதை பாடுதுகளாம் கவிதை...பார் அங்கே ? தயவு தாட்சண்யம் கூடாது. தம்பி. அண்ணன், தாய் மக்கள், மனைவி தகப்பன், எந்த உறவுமுறை இருந்தாலும் பாடினுல் பிடித்துத் தள்ளவேண்டும் சிறையிலே!

...யாள் : தள்ளிக்கொண்டுதானிருக்கிருர்கள்...

...வற் : இன்னமுமா ?

பணி: ஆமாம். அரசே, பாடுபவர் ஓயவில்லையே.......
வெற்றி: அடித்து நொறுக்குங்கள் ஆணவக்காரரை. தடியர்கள்.

★

(கிழவி பொருத்தி ஏதோ பேசுகிருள். மக்கள் சூழ்ந்து கொண்டுவிடுகிருர்கள்.)

சிலர்: பாடுவாயா பாட்டி, பாடவா வந்திருக்கிறே.

கிழவி: பொக்கைவாய்க் கிழவி நானு...நானு என்னத்தைப்பாட!

சிப்பாய்: பாடினயா?

கிழ: யாரு நானு? பாட்டா? என்ன பாட்டு?

சிப்: என்னப்பாட்டா? உங்க பாட்டன் பாடினது...ஹாஹா... போங்க..

(சிப்பாய் செல்கிருன். கிழவியும் சிறுபெண்ணும் உரையாடு கிருர்கள்.)

கிழ: கொழந்தே, என்னம்மா அமளீ. என்ன பாட்டு அது?

பெண்: பாட்டி, உனக்குத் தெரியாதா? மதிவாணன் பாட்டு. நம்ம ராஜா தடை செய்திட்டாரு...

கிழ: பாட்டையா? என்னடி இது பைத்தியக்கார ராஜாங்கம்! பாட்டுப்பாடிஞ என்னவாம்...

பெண்: இந்தப்பாட்டு மட்டுந்தான் பாடக்கூடாதுன்னு சட்டம், பாட்டி...

கிழவி: தெரியுமாடி கண்ணு உனக்கு?

பெண்: ஓ, தெரியுமே. ஆனு பாடமாட்டேன். அடிப்பாங்க தடியாலே தலேமேலே.

கிழவி: அவன் யார்டி கொழந்தையை அடிக்கிறவன். அடிப்பானு மில்ல....நீ பாடு கொழந்தே. எவனுச்சும் வந்தா நான் பாத்துக்கறேன்

(சிறுபெண் பாடுகிருள்.) அரசர் தம்மை உருப்போட்டு (பாட்டு)

கிழவி: நல்லாத்தான் இருக்குது பாட்டு. இதை தடை செய் யருங்க...

(சிறுமியின் பாடல் ஒலி கேட்டு ஓடி வருகிருன் ஒரு சிப்பாய்)

சிப்: ஹூம், ஹூம். போங்க ஏன் கூட்டம்! பாடாதே. ச்சீ... பாடாதே!

கிழவி: யாரடா அவன்? அறிவுகெட்டவனுயிருக்கிறே. கொழந்தே எவ்வளவு அழகாப்பாடுது, அடிக்கிறியே! புள்ளேகுட்டி இல்லே உனக்கு?

சிப்: உனக்கு புத்தி கித்தி இருக்கா? இந்த பாட்டு பாடக்கூடாது தடை உத்திரவு தெரியுமா?

கிழவி: புத்திகெட்டவன் – புத்திகெட்டவன்.

சிப்: உனக்குக் கேட்குது பூஜை-மரியாதையா போகமாட்டே?

கிழவி: போக முடியாது. என்னு செய்துவிடுவே? நாலு பேரப் பிள்ளேக இருக்கிருங்க எனக்கு—உன்னுடைய எலும்பை நொறுக்கிவிடு வாங்க...

சிப்: என்னடா தொல்லே இது? பாட்டியம்மா, ஊர் இருக்கிற இருப்பு தெரியாமே பேசாதே. போ வீட்டுக்கு.

கிழவி: ஊர் இருக்கிற லட்சணம்தான் தெரியுதே. பாடக்கூடா தாம். பாடினு அடியாமில்லே. என் இஷ்டம் நான் பாடுவேன். உனக்கென்ன?

(பாட்டி தன் நடுக்கும் குரலில் பாடுகிறுள். கூட்டம் அதிகரிக்கிறது. சிப்பாய் அவளையும் இழுத்துச் செல்கிறுன்.)

★

(இன்னொருபுறம் மதிவாணன் அவனுடைய சகாக்கள் பாடிக்கொண்டிருக்கிறுர்கள்) 'ஆஸ்தியை சேர்க்கும்' பாட்டு.
(சிறைக்கூடம் கைதிகளும், மலேவாசிகளும்)

கைதி: அண்ணேன் என்ன புதுப்புது ஆசாமிகளா கொண்டு வந்து தள்ளிக்கிட்டே இருக்கிறுங்க. பெரிய கொள்ளைக்கூட்டம் போலிருக்கு!

மற்றவன்: ஆசாமிகளைப் பார்த்தா அப்படித் தெரியலேயே...

முதல்: தம்பி, என்ன கொள்ளையா? கொலையா?

மலே: அதெல்லாம் இல்லையப்பா.. பாட்டுப் பாடினேன்.

முதல்: பாட்டுப்பாடினு?

மலே: பாடாதேன்னு ஆரசாங்கம் தடைபோட்டது.

மற்: பாடக்கூடாதுன்னு தடை?

மலே: எல்லாப் பாட்டுக்கும் தடையில்லே. மதிவாணன் பாட்டுக்கு மட்டும் தடை.

முதல்: அது என்ன பாட்டு தம்பி? ராஜாங்கத்துக்குப் பிடிக்காத பாட்டு.

மற்: களவு எப்படி செய்யறது-கொலை எப்படிச் செய்யறதுன்னு புதுப் புதுவழி சொல்லிக்கொடுக்கிற பாட்டுப்போல இருக்கு.

மலே: அதெல்லாம் இல்லையப்பா, ஜாதிகூடாது. பேதம் கூடாது. கடவுள் பேரைச் சொல்லி ஏழைகளை ஏமாற்றக் கூடாது. இப்படிப்பட்ட விஷயமிருக்கு அந்தப் பாட்டிலே,

முத: நல்ல விஷயந்தானே?

மற்: இது பாடக்கூடாதுன்னு தடை?

மலே: ஆமாம்.

முத: நல்ல ராஜாங்கமாயிருக்கே.

மற்: தம்பி, அந்தப் பாட்டைப்பாடு...

மலே: தடையை மீறிப்பாடினு இங்கேயும் தண்டிப்பாங்களே!

மற்: கிடக்கட்டும் தம்பி, தலையா போய்விடும்?

முத: கொலே, கொள்ளேபோல அக்ரமம் செய்து தண்டனே அனுபவிக்கிறதைவிட இந்த தம்பி மாதிரி நல்ல காரியம் செய்து தண்டனை பெத்தா பெருமைதானே? பாடு தம்பி. ஒரு ராஜ்யமே கிடுகிடுன்னு நடுங்குது இந்தப் பாட்டைக் கேட்டுன்னு மனுஷனுய்ப் பிறந்தவன் அந்தப் பாட்டைக் கேட்காமே இருக்கலாமா? பாடு...

மற்: ஆமாம் பாடு – பாடினே உள்ளே தள்ளினுங்க! இங்கே பாடு- வெளியே தள்ளராங்களான்னு பார்ப்போம்.

(பாடுகிறுன்) ,சம்சாரம்விடுத்து....

முத: படுபாவிப்பயலுக. இதுக்கா தடைபோட்டானுங்க!

மற்: அண்ணேன். இது ரொம்ப அக்ரமம் இந்த ராஜாங்கம்.

முதல்: பைத்தியம் பிடிச்சுப்போச்சிப்போல இருக்கு.

மற்: அண்ணேன், தடையை நாமும் உடைக்க வேண்டியதுதான். தம்பீ அந்தப் பாட்டை எங்களுக்கு சொல்லிக்கொடு...

முதல்: ஆமாம் தம்பி.

★

(சிறையின் வேறு அறையில் திலகாவும் பிற பெண்களும் இருக்கிறார்கள். திலகாவின் முகத்தில் சோர்விருக்கிறது; ஆனால் அச்சமில்லை. ஆடவர் பகுதியில் மன்னன் பார்வையிட வருவதை அறிகிறார்கள்.)

பெண்: என்னப்பா கூச்சல்?

காவலாளி: அரசர் இங்குகூட வருகிறார்.

பெண்: அரசரைக்கூடவா சிறையிலே போடுகிறாங்க?

காவ: அம்மா, புண்யவதிகளே. கொஞ்ச நேரம் அவர் வந்து போகிறவரையிலே வாயை மூடிக்கிட்டு இருங்களேன். பெரிய தொல்லை யாப் போச்சி உங்களாலே...

பெண்: திறந்து விட்டுவிடு. உனக்கு ஏன் தொல்லை? நாங்க பேசாமே வீட்டுக்குப் போயிடறோம்.

சிப்: சரிதான், என் தலை...

திலகா: பாவம் அந்த ஆளோடே ஏன் வம்பு?

சிப்: என் பிழைப்பிலே மண்ணைப் போடாதீங்க. மகராசிகளே, நான் புள்ளேகுட்டிக்காரன்.

திலகா: அங்கே என்னப்பா அமளி...

சிப்: அமளியா? அமளி இருந்தாத்தான் வேலை சுலபமாயிடுமே... அடித்து நொறுக்கிவிட்டிருப்பாங்களே. சிறையிலே இருக்கிறவங்க எல்லாம் அரசர் வருகிறபோது அந்தப் பாட்டைக் கும்பலா கூடிக்கிட்டுப் பாடறாங்க...

பெண்: எந்தப் பாட்டை?

சிப்: எல்லாம், இவங்க அண்ணன் பாட்டைத்தான்!

மற்றொருத்தி: உனக்குத் தெரியாதா அந்தப் பாட்டு......

சிப்: சரி. எனக்கே தீம்பு வைக்க ஆரம்பமா? துணிஞ்ச பேர் வழிங்க—எனக்கு பாட்டும் தெரியாது, கூத்தும் தெரியாது......

மற்றொருத்தி: புளுகு! தெரியும். ஒரு நாள் பாடினதை நானே கேட்டிருக்கிறேனே.

சிப்: யார், நான் பாடினேனா? அந்தப் பாட்டையா?

மற்றொருத்தி: உரக்க இல்லை. மெதுவாக. ஆனா, திலகா இவருடைய குரல் ரொம்ப நல்லாயிருக்கு.

சிப்: வம்புக்காரப் பொம்பளேங்க—போங்க போங்க! வரப்போறாரு மன்னரு......

பெண் : அவர் வருவதற்குள்ளே பாடிடு. ஒரே ஒரு தடவை...... பாடமாட்டாயா......இரு......இரு......நாங்க பாடறோம் பாரு......... இப்போ.

பெண் : வாங்கடி பாடலாம்.

திலகா : அந்தப் பாட்டு வேண்டாம். நேற்று ஒரு பாட்டு கட்டினமே?

மற் : எந்தப் பாட்டு ? ஓகோ ? ஏமாந்த மாப்பிள்ளை—பாட்டா ?

திலகா : ஆமாம்......அதை

மற் : பாடுவோமா ?

திலகா : அரசன் வருகிறபோது......

பெண் : ஆமாம் ; அதுதான் சரி !

★

(சிறையில் பெண்கள் பகுதி. திலகாவும் வேறு சிலமாதர்களும் 'ராஜாதிராஜன் நம்ம ராஜா' என்ற பாட்டு பாடுகிறார்கள்.)

வெற்றி வேலர் : (வந்து) இங்கேதானே அந்த மண்டைக்கர்வியின் தங்கை திலகா இருக்கிறாள்?

சிப்பாய் : ஆமாங்க......

திலகா : (கேலியாக) ஓ ராசா. என்னையா தேடறீங்க. ஏன் ?

பெண் : புதுசா, ஏதாவது தடை உத்திரவு போடுவாரு......

மற்றொருத்தி : ஒருவேளை, பெண்களெல்லாம் இனி என் நாட்டிலே ஜடை போட்டுக் கொள்ளக் கூடாதுன்னு உத்திரவு பிறக்குமோ என்னவோ ?

வெற்றி : இழுத்துவாருங்கள், அந்த நாயை: சிறை விசாரணைக் கூடத்துக்கு......

திலகா : ஐயா, வீராதி வீரரே.

கற்பகம் : திலகா பேசாதிருக்கமாட்டே ?

திலகா : நீ சும்மா இரம்மா! அடே, மனுஷன் போலவேதான் இருக்கிறார் ராஜா.

வெற்றி : அவன் எவ்வளவோ அடக்கமானவன்—இது ஒரு அடங்காப்பிடாரி ! ஏய் வாயாடி. பெண்ணாயிற்றே என்பதாலே சவுக்கடி இன்னமும் விழாமலிருக்கிறது......

திலகா : ஹா. சவுக்காலடிப்பீர்களா? ஹூம். அது உடலைத்தான் புண்ணாக்கும் ! உலுத்தனே. மனதையே புண்ணாக்கிவிட்டு மாமிச பிண்டமே—தடை போட்டாயே—தடை பாடலுக்கு—மூடி தாங்கியே, பார்த்தாயா உன் தடை தவிடுபொடியாவதை? வெட்கம் இருக்க வேண்டாமா உனக்கு. நீயும் ஒரு அரசனா? நாட்டை ஆளுகிறானாம் நாட்டை! காட்டிலே இருந்து என் அண்ணா கட்டளையிடுகிறார். உன் தடை உடைபடுகிறது. பூட்டி வைத்துவிட்டு வீரம் பேசுகிறாய் எங்களிடம். உருட்டு விழி என்னை ஒன்றும் செய்துவிடாது. நாட்டுக்கு நீ அரசன்—ஆனால் என் அண்ணனிடம் தோற்றுப்போன உன்னை நான், அரசன் என்று மதிப்பேன்—கொலுப் பொம்மை, கொக்கரிக்கும் கொலுப் பொம்மை !

பெண்கள்: கொக்கரிக்கும் கொழுப்பேர்ம்மை!

திலகா: மதம் கெட்டுவிடும் என்று இந்தப் பரம பக்தருக்கு தாங்க முடியாத பயம். அதனுலே என் அண்ணனை நாடு கடத்தினர். உண்மைக் காரணம் எனக்குத் தெரியும்......

வெற்றி: என்னடி உளறுகிருய் பேதையே!

திலகா: மன்னன் நீ—உன்னை மணம் செய்துகொள்ள மறுத்தாள் குமாரதேவி—உன்னைத் துச்சமென்று கருதி. இசை அரசனை என் அண்ணனிடம் காதல் கொண்டாள். பொருமை உனக்கு. வெட்கம் உனக்கு. ஊரும்......சமயம் பார்த்துச் சாகசமாக என் அண்ணனைப் பழிதீர்த்துக் கொண்டாய்......

வெற்றி: ச்சீ, போக்கிரிப் பெண்ணே!

திலகா: மறுக்க முடியாது உன்னுல். இந்த மண்டலம் அறிந்த ரகசியம் இது. போகிறதைப்பார். அதிகாரத்தை நிலைநாட்ட முடியாத இவனுக்கு அரசன் என்று பட்டம்!

வெற்றி: துரோகி! மதிவாணன் தங்கை திலகவதியை, தவனக் காட்டுக் கோட்டைக்கு இழுத்துக்கொண்டு வா, இன்றிரவு—துணைக்கு நாலு போர்வீரர்களை அழைத்துச் செல். அதுதான் சரி, அவமானம் அவளை அணுஅணுவாகச் சிதைக்கட்டும். என் சட்டத்தை உடைத்தான் ......சிறையிலே அந்தச் சிறுக்கி என்னை எவ்வளவு கேவலமாகப் பேசினள்......அவளை......

(மன்னன் வெட்கி வெளியேறுகிருன்)

சிப்: எங்கே அந்த வாயாடி......

திலகா: பாபிகளே பெண்களிடமா இப்படி முரட்டுத்தனம்? வேண்டாம்......அக்ரமம் கூடாதய்யா,

சிப்: வாயாடி. கிளம்பு.

கற்பகம்: என்னப்பா இது? திலகா, நெருப்புடன் விளையாடாதே என்றுல் கேட்டாயா?

(திலகத்தைச் சேவகன் இழுத்துச் செல்லுகிருன்)

திலகா: அம்மா......அம்மா......

கற்: அய்யா, இதென்ன அக்ரமம்

சிப்: இது அரசன் ஆணை.

திலகா: அபலைகளை இம்சிக்கச் சொல்வதா? இதுவா அரசன் ஆணை?

சிப்: என்னிடம் வாதாடாதே, விடு.

கற்: விடமாட்டேன்.

[தவனக்காட்டுக் கோட்டை, திலகா அரசனுல் கற்பழிக்கப் படுகிருள். பிறகு அவள் விடுவிக்கப்படுகிருள். திலகா அலங்கோலமான நிலையில் எங்கும் சுற்றித் திரிகிருள்.]

★

(வெற்றிவேலன் அரண்மனை)

மந்திரி: நல்லசேதி அரசே. நல்ல சேதி!

வெற்றிவேலர்: என்ன சேதி? மதிவாணன் மாண்டாளு?

மந்திரி: அதைவிட நல்ல சேதி. அரசே! அந்தக் குமாரதேவியை அழிக்க ஓர் அருமையான சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது!

வெற்றி: விளக்கமாகப் பேசும் ஐயா.

மந்திரி: நடுநாட்டரசன் போர்தொடுத்துவிட்டான் – குமாரிக்குப் பேராபத்து···படைகளைச் சுற்றி வளைத்துக்கொண்டுவிட்டான்.

வெற்றி: படைகள் புறப்படத் தயாராகட்டும். நடுநாட்டரசன் படைகளை நமது படைகள் தாக்கட்டும். பின்புறமிருந்து···

(கோட்டையின் மேல் தளத்தில் நின்றவாறு வெற்றிவேலன், நடுநாட்டரசனின் படை பிளக்கப்படுவதைக் காண்கிறான்)

வெற்றி: ஆமாம். குமாரியை மீட்டாகவேண்டும். வெட்கப்படட்டும். எந்த வெற்றி வேலனை அவள் அலட்சியப்படுத்தினாளோ அவனுடைய வாள்பலத்தால் காப்பாற்றப்பட்டாள் என்ற சொல்போதும் அவள் வாழ்வை சுட்டெரிக்க.

★

(குமாரதேவியின் அரண்மனை)

ஒற்றன்: நடுநாட்டரசன் படைகளை வெற்றிவேலன் படைகள் பிளந்துவிட்டன. கடும்போர்–நடுநாட்டரசனின் படை வரிசை குலைந்து விட்டது.

குமாரி: இதுதான் தக்க சமயம் தாக்க...

★

(போரில்)

குமாரி: இந்தப் பேருதவியை என்றும் மறக்கமுடியாது என் நாடு அடிமைச்சாவடியாகியிருக்கும் தங்கள் உதவி கிடைத்திராவிட்டால்···

வெற்றிவேலன்: குமாரதேவியாரே. என் கடமையைச் செய்தேன்!

குமாரி: தங்கள் வீரவாளை என்நாடு என்றென்றும் போற்றிப் புகழும்······

வெற்றி: நாடா···? சரி போகலாம்!

குமாரி: நானுந்தான் தங்கள் வீரவாளைப் போற்றுகிறேன்.

வெற்றி: வாளையா?

குமாரி: தங்கள் வீரவாளை அனைவருமே போற்றத்தான் செய்வர்...

வெற்றி:—போகலாம்!

(குழல் ஊதப்படுகிறது· குமாரி ராணுவ உடையைச் சரிப்படுத்திக்கொண்டு குதிரையில் ஏறுகிறாள். படைகள் புறப்படுகின்றன.)

★

(காட்டில்—திலகா பைத்தியம் பிடித்தவளாய் 'ராஜாதி ராஜன் நம்மராஜன்' என்னும் பாட்டுடன் அலைகிறாள்.)

(வெற்றிவேலன் அரண்மனை)

(உப்பரிகையில் அவன் மகள் குழந்தை மரகதமணி விளையாடுகிறாள். பிறகு, தடை விதிக்கப்பட்ட பாட்டைப் பாடுகிறாள் பணியாள் அவள் வாயைப் பொத்துகிறான்

மரகதம்: நான் பாடுவேன் நீ யார் தடுக்க? (பாடுகிறாள்)

பணியா: அப்பா உத்தரவம்மா ···பாடக்கூடாது···

(குழந்தை மரகதமணி; பணியாளனின் கையைக் கடித்து விட்டு, அவன் துடிப்பது கண்டு சிரித்தபடி மேலும் பாடுகிறது. பணியாள் குழந்தையைப் பிடிக்க ஓடுகிறான் குழந்தை தவறி மாடியிலிருந்து கீழே விழுகிறது)

★

(யுத்தகளத்தில் குமார தேவியின் கூடாரத்தில் வெற்றிவேலனும் குமாரதேவியும் களத்துப் படத்தைப் பார்த்தபடி இருக்கிறார்கள்)

சிப்பாய்: (ஓடிவந்து) இளவரசிக்குப் பேராபத்து. மருத்துவர் உடனே தங்களை வரச்சொன்னார்.

குமாரி: இளவரசிக்கா?

வெற்றிவேலர்: என் குழந்தை மரகதமணிக்கு? என்னடா ஆபத்து?

சிப்பாய்: "கடுமையான ஜுரம்-பலமான அடி-ஆபத்தான நிலைமை,

குமாரி: போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்-தயங்கவேண்டாம். நிலைமை இங்கு பரவாயில்லை. புறப்படுங்கள்.

★

வெற்றிவேலன் அரண்மனை)

(குழந்தை மரகதமணி படுக்கையில் படுத்திருக்கிறாள். மருத்துவர். பணியாட்கள் சேடிகள் திகிலுடன் நிற்கிறார்கள்.)

வெற்றி வேலன்: (பதறியவனாக) அடாடா—மரகதம் இவ்வளவு நிலைமை மோசமாகிறவரையிலா பார்த்துக்கொண்டிருந்தீர்கள். மருத்துவரே என்ன இது?

மருத்துவர்: கடுமையான ஜுரம் குழந்தைமாடியிலிருந்து விழுந்துவிட்டது,

வெற்றி: பலமான அடி மடபயல் பணியாள் தூங்கிவிட்டானா? எப்படி விழுந்தது மரகதம்···

மரகதம்: பாடு. மாமா ஒரே ஒரு பாட்டு பாடு மாமா·

மருத்துவர்: எனக்குத் தெரிந்த மூலிகை எல்லாம் கொடுத்தாகி விட்டது. குழந்தையின் மனம் ஒரே விஷயத்திலே பதிந்துவிட்டது··· இப்படியே இருந்தால் பேராபத்துத்தான்...

வெற்றி: உளராதே. என்ன விஷயத்திலே மனம் பறந்துவிட்டது?

மரு: குழந்தை கீழே விழுகிறபோது மதிவாணன் பாட்டைப் பாடிக்கொண்டிருந்தது. தடுத்தான் காவலாளி—தவறி விழுந்துவிட்டது—இதிலே இருந்து குழந்தைக்கு மதிவாணன் மேலேயும் அவன் பாட்டின் மேலேயும் நினைவு—வேறு நினைவு எதுவும் கிடையாது.

வெற்றி: சதியா செய்கிறீர்கள்? மதிவாணன் பாட்டு மருந்தாம். மிரட்டுகிறீரே என்னை என் சுபாவம் தெரியுமே உனக்கு. என்னிடமா இந்த வேலை எல்லாம்?

மரக: (கண் திறக்காமல் குளறுமொழியில்) மாமா···பாடு ··ஒரே ஒரு பாட்டு பாடு மாமா!

(வெற்றிவேலன் முகம் சுளித்துக்கொள்கிறான்)

வெற்றி: என்ன செய்வது நான்? அந்தத் துரோகியிடம் மண்டியிட வேண்டும். என் மகளின் உயிர் அவன் பாட்டிலா? மருத்துவரே, என்னைச் சித்திரவதை செய்யவேண்டாம். எங்கு இருக்கும் மூலிகையாக இருப்பினும் சொல்லுங்கள் கொண்டு வருகிறேன்!

மருத்துவர்: வீண்வேலை! மதிவாணன் சீக்கிரம் வந்தாக வேண்டும். உள்ளம் வெந்து கிடக்கிறது குழந்தைக்கு······

வெற்றி: பாவி, என்னைக் கேலி செய்கிறாய். எவனை இந்த நாட்டிலே இருக்கக் கூடாது என்று கட்டளையிட்டேனோ அவனை வரவழைக்க வேண்டும் என்கிறாய்! எவ்வளவு துணிவு?

மரு: நிலைமை புரியவில்லையா வேந்தரே. மரணத்தின் பிடியில் இருக்கிறாள் மரகதம். மதிவாணன் அவளைக் காப்பாற்ற முடியும். வீண் கௌரவம் குறுக்கிடக்கூடாது, வேந்தே. குழந்தையைக் கொல்லாதீர். என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. பல கொடுமைகளைச் செய்தீர் இதுவரையில்—ஆனால் இது எவ்வளவு கொடியவனும் செய்யக் கூசும் பாதகம்—மகளைச் சாகடிக்கிறீர், உமது மமதையால். வேண்டாம் உலகம் உம்மைச் சும்மாவிடாது.

மர: பாடு மாமா—பாடு. ஒரே ஒரு பாட்டு.

வெற்றி: மதிவாணனை அழைத்து வாருங்கள்.

★

(நாடு கடத்தப்பட்ட மதிவாணனிடம் வைத்தியர் பேசுகிறார்)

மரு: மதிவாணா. மறுக்காதே. மரகதமணியின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. வேந்தன் துடிக்கிறான்.

மதி: கடிக்க வரும் பாம்புக்கூடத்தான் மருத்துவரே அடிபட்டால் துடிக்கிறது······இங்கே எவ்வளவு வேதனை குழம்பிக் கொண்டிருக்கிறது தெரியுமா!

மரு: தெரியுமப்பா! அங்கே அன்புக்கு இடம் உண்டு என்பது தெரியும்.

மதி: என் தாய் சிறையில்! திலகா இருக்குமிடம் தெரியாது!! நான் காட்டில்!!! அரண்மனையில் உள்ள புலிக்கு பரிந்துபேச வருகிறீர்!!!!

மரு: மரகதமணிக்காக அப்பா. மமதைகொண்ட மன்னனுக்காக அல்ல. அவனுடைய அக்ரமத்துக்காக அந்தக் குழந்தை சாக வேண்டுமா? வா, மதிவாணா!

மதி: மருத்துவரே, என்னை மீண்டும் அந்தக் கொடியவன் இருப்பிடம் வரச்சொல்கிறீர். சரி, மரகதமணிக்காக வருகிறேன். ஆனால் என் தோழர்களை விடுதலை செய்தாக வேண்டும் முதலில். என் பாடலுக்கு விதித்துள்ள தடை நீக்கப்பட வேண்டும். என் தாயை விடுதலை செய்ய வேண்டும்.

மரு: இதைக்கூடச் செய்ய முடியாதா? வா……

மதி: செய்துவிட்டு சேதி அனுப்பும்.

(ஆகும் நெறியெது ஆகா நெறியெது பாட்டுப்பாடி கூட்டம் வருகை. பூங்காவனமும் மதிவாணனும் உரையாடுகிறார்கள்.)

மதி: விடுதலை……பூங்காவனம் விடுதலை. அறப்போர் வீரர்கள் எல்லாம் விடுதலை! வெற்றி வீரர்கள் வருகிறார்கள். தடையை மன்னன் நீக்கிவிட்டான்!

பூங்: மக்களின் சக்திக்கு முன் மன்னன் என்ன செய்ய முடியும்?

மதி: ஆனால், பூங்காவனம் 'மரகதமணியை' காப்பாற்றத்தானே மன்னன் இவ்வாறு செய்தான்?

பூங்: காரணம் அதுமட்டுமல்ல மதிவாணரே. மன்னன் நமக்கு மகிழ்ச்சி தந்தான். நாமும் அவனுக்கு மகிழ்ச்சி தருவோம்! மரகத மணியைக் காப்பாற்ற அரண்மனை சென்றுவாரும்.

மதி: நான் சென்று என்ன செய்கிறது?

பூங்: இதோ மூலிகை! கடும் காய்ச்சலையும் மனக் குழப்பத்தையும் இது போக்கும்.

(அரண்மனை. மதிவாணன் போகிறான், மரகதம் படுக்கையின் சமீபம்)

மருத்துவர்: பாடு, மதிவாணா மெதுவாக.

மதிவாணன்: இந்த நிலைமையிலா!

மரு: இந்த நிலைமைபோக·····

மதி: நிலவே நிலவே ஆடவா
நீயன்புடனே ஓடிவா

(முழுப் பாட்டையும் பாடுகிறான்)

★

(அரண்மனையில் ஓர்புறம்)

பணியாள்: (ஓடிவந்து வெற்றிவேலரிடம் குமாரதேவியார்···

குமாரி: (வந்து) குழந்தை எப்படி இருக்கிறாள்?

வெற்றி: பிழைத்துக்கொண்டாள்···அதோ···

(வேகமாக உள்ளே நுழைந்த குமாரதேவி அங்கு மதிவாணனைக் கண்டு திகைக்கிறாள். மதிவாணன் வெறுப்பு நிறைந்த முகத்தோடு வெளியேறுகிறான்)

(வெற்றிவேலரின் தனியறை)

மருத்துவர் : வீணான விசாரம்—குழந்தை பிழைத்ததை எண்ணி களிப்படைய வேண்டிய நேரத்தில் ஏன் வீண் விசாரம்?

வெற்றி : சரி, சரி. அவனை இங்கே சில நாட்கள் இருக்க ஏற்பாடு செய்தீரா?

மரு : சிரமப்பட்டுச் சம்மதிக்கச் செய்தேன்.

வெற்றி : குமாரதேவியாருக்கு விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன். தவனக்காட்டு கோட்டைக்குச் செல்கிறேன்—குழந்தையைக் கவனித்துக் கொள்ளும்...

(தவனக்காட்டு கோட்டை வெளிப்புறம்)

சிப்-1 : ராணி வருகிறாங்களாமே, குமாரதேவி!

சிப்-2 : இங்கேயா? ஐயோ பாவமே. வேங்கையும் வருதா?

சிப்-1 : மான் இங்கே இருந்தா வேங்கை வேறு இடமா போகும்?

(அரண்மனை)

மந்திரி : வேந்தே, அலங்கார விளக்குகள் வேண்டாமா?

வெற்றிவேலர் : விளக்கா...ஆமாம் ஒரே இருளாகத்தான் இருக்கிறது...என் மனம்போலே... (உட்சென்று, அங்கு திலகாவின் கற்பைப் பாழாக்கியதை நினைத்துக் குழப்பத்துடன் திரும்புகிறான்) கொடுமை செய்துவிட்டேன், அமைச்சரே. மனம் நிம்மதியாக இல்லை. உலவிவிட்டு வருகிறேன்...இல்லை...தனியாக.

(காடு. தனியாக உலாவ வந்த வெற்றிவேலனை—கற்பழித்தவனை—திலகா முள் முனைகளுள்ள கேடயத்தால் தாக்குகிறாள்)

வெற்றி : யாரது?

திலகா : விராதி விரனே, அபலைகளை அணைத்து அழிப்பதிலேயே அனுபவம் அதிகமல்லவா உனக்கு? ஏன் இந்தக் காட்டு ராணியைக் கண்டு ஓட்டமெடுக்கிறாய்? (வெறிபிடித்தவள் போல முள்கேடயத்தை வெற்றிவேலனின் நெஞ்சில் அழுத்துகிறாள்) அன்பின் அறிகுறி...காதல் வெள்ளம்...

('ஆகாகா ராணி' என்று பாடியவாறு செல்கிறாள் ;பைத்திய வெறியுடன்)

★

(குமாரதேவி அரண்மனை மாடிப்படியிலிருந்து கீழேயிறங்கி வருகிறாள். மதிவாணனைச் சந்திக்கிறாள்)

மதிவாணன் : மகாராணி! வணக்கம்—நம்பி மோசம்போன இந்த நாடோடியின் வணக்கத்தை ஏற்றுக் கொள்வீரோ என்னவோ?

குமாரி : மதிவாணரே, கோபம் வரத்தானே செய்யும். ஆனால்...

மதி : ஆனால் அரண்மனைவாசிகளான எமக்கு இதுதானே பொழுது போக்கு என்று கூறுகிறீரா தேவியாரே?

குமாரி : உங்கள் கேலிப் பேச்சிலேயும் கவிதாநடை இருக்கிறது!

மதி : காதல்மொழி பேசி என் கருத்தைக் கெடுத்த காதகி! ஏன் என்னைப் பித்தனாக்கினாய். 'ஆருயிரே' அரசா பெரிது இதோ முடிதுறக்கிறேன் என்று பசப்பிவிட்டு என்னை மோசம் செய்தாய், ஒரு முடிக்காக. என்னை நடைப்பிணமாக்கினாய், அரசபோகத்துக்காக!

குமாரி: பதவி மோகம் எனக்கு—அதனால் உமக்கு மோசம் செய்தேன். அதுதானே இன்னுயிரே உம் குற்றச்சாட்டு?

மதி: இன்னுயிர்! எவ்வளவு துணிவு இன்னமும் சொல்ல?

குமாரி: ஏன் அச்சமா? உம் காதல் தணியவில்லை. அந்த ஒளி கோபமாக வெளிவருகிறது!

மதி: தர்பார் தளுக்கன் எவனாவது கிடைத்தால் அவனிடம் காட்டு உன் சாகசத்தை!

குமாரி: எல்லைக்கு வந்தாகிவிட்டது கண்ணாளா. என் மனமும் ஒரு அளவுக்குத்தான் தாங்கிக்கொள்ள முடியும்!

மதி: (கேலியாக) ஆஹா•• ஹா•••என்ன உருக்கம், எவ்வளவு நேர்மை! முடிதுறக்க ஏற்பாடாகி கடைசி நேரத்திலே•••

குமாரி: ரத்துசெய்துவிட்டேன், உம்மை ஏமாற்ற அல்ல!

மதி: ஏது அதிகாரத்தோடு பேசுகிறாய்.

குமாரி: குறுக்கே பேசவேண்டாம்! நான் பட்டத்தைவிடத் தீர்மானித்தேன். பிரகடனம் இதோ. நடுநாட்டரசன் போர்தொடுத்து விட்டான். காதலா? அரசா?—என்ற கேள்வியில்—கவிவாணரே, நாட்டுக்குப் பேராபத்து. நான் அது சமயம் கொட்டு முரசு என்று பேசுவதா, கட்டிக் கரும்பே என்று உம்மிடம் வந்து கொஞ்சுவதா? இது என் பிரச்னை. சிக்கல்களிடம் சென்றேன்—கவிபாட அல்ல. கடும் போரிட.

மதி: குமாரி குமாரி•••

குமா: நாடு காப்பாற்றப்பட்டது-இங்கே வருகிறேன், உம்மிடம் காட்டுக்குணம் இருப்பது காண்.

மதி: குமாரி•••குமாரி

குமாரி: பிரகடனத்தை சோலை நாட்டுக்கு அனுப்பிவிடும். நான் புத்தமார்க்கப் பிரசாரத்திற்காக செல்லுகிறேன் வெளிநாட்டுக்கு.

மதி: குமாரி என் உயிரே. வீணான சந்தேகம். கோபம் எனக்கு. கொஞ்சு மொழி

குமாரி: ஆடவர் அனைவருக்கும் உள்ளதுதான் இந்த சுபாவம்? கவிவாணராயிற்றே அந்த சுபாவம் தங்களுக்கு இராது என்று எண்ணினேன். ஆனால் இந்த காதல் விஷயத்திலே மட்டும் மாவீரரானாலும், மகாகவியானாலும் ஒரே அசடுகள்தான் ஆடவர்கள்.

மதி: கேலிபோதும், குமாரி! வா. வா. உன்னிடம் எவ்வளவோ பேசவேண்டும்•••வாயேன்.

குமாரி: ஊஹூம்!

★

(காடு. மரத்தில் முத்துமாணிக்கம் திலகாவின் பெயரைப் பொறித்துக் கொண்டிருக்கிறான்.)

முத்து: திலகா•••திலகா•••என் கண்ணே, காட்டிலா? இந்தக் கோலத்திலா?

திலகா: யார், என் மாணிக்கமா. என் இன்பமா?

முத்து: திலகா•••திலகா•••திலகா•••

திலகா: என் முத்துவா, என் மாணிக்கமா, கடைசியில் காதல் பாதையிலே வெற்றிபெற்றேன்! இதோ என் ஆருயிர்!

முத்து: திலகா...திலகா...திலகா

(திலகா உயிர் துறக்கிருள்)

★

அரண்மனை: (மதிவாணனும் குழந்தை மரகதமணியும்.

சேவகன்: (ஓடிவந்து) உன் தங்கை திலகாவை...

சிப்: திலகம்மை காட்டில் பிணமாக!

மதி: பிணமாகவா, காட்டிலா? என் தங்கையா? திலகா திலகா திலகா திலகா......

(காட்டிற்கு ஓடுகிருன்)

திலகா, திலகா, திலகா, அரசசபை, கவிதாமண்டலம், காதல் மேடை எங்கெங்கோ அலேந்தேன். என் அருமைத் திலகமே என் செய்வேன்? எப்படி சகிப்பேன்.

முத்து: (காதலியை இழந்த கோபத்துடன்) ஒரு பாட்டுப் பாடு. அதுதானே உன் வேலே!

மதிவாணன்: ஆ...ஐயோ...காதல் காதல் காதல் என்று கவிமொழி பேசி என் தங்கையின் கருத்தைக் கெடுத்தாய்? பாதகா. ஏனடா என் தங்கையை கைவிட்டாய்.

முத்து: நான் அவளேக் கைவிட்டேனு?

மதி: ஏண்டா பசப்புகிருய். என் காதில் நாராசம்போல் வீழ்ந்ததே அன்று உன் பேச்சு.

முத்து: ஏமாளி, என்ன சொன்னேன் நான்? திலகாவை நான் இழக்கத்தான் வேண்டுமென்றேன். என் தூயகாதலேயா சந்தேகிக்கிருய்! நான் திலகாவை இழக்கத் தீர்மானித்தது, மதியிலி, எனக்குக் காதல் இல்லாததால் அல்ல! இந்த இதயத்திலே அவள் தானடா எப்போதும்! ஆனல் சதிகாரரின் செயலால் நான் திலகாவுக்கு துளியும் ஏற்றவன் அல்ல என்ற நிலே பெற்றேன், விளங்காது உனக்கு.

மதி: என்னடா முத்து. எனக்கு ஒன்றும் விளங்கவில்லேயே... ஆ...ஐயோ இதென்ன முத்து.

முத்து: பார். பாரப்பா புலவனே. பார் முத்துமாணிக்கத்தை. ஆயிரம் தடவை புகழ்ந்தாள் அழகான முகம் என்று திலகா - பார்த்தாயா எப்படி ஆக்கப்பட்டது என்று...

மதி: முத்து உனக்கா இந்தக்கதி?

முத்து: வில்வக்காட்டுச் சீமான் வேலே! அவன் மகளே மணக்க மறுத்தேன். பழி தீர்த்துக்கொண்டான். இப்படி ஆனபிறகு நான் எப்படி திலகாவை திருமணம் செய்துகொள்ள முடியும்? மனம் இடம் தருமா? தூயகாதல் ததும்பும் மனமடா இது! இடம் தருமா? ஹூம், அதனுல்தான் நான் திலகாவை இழக்கத் துணிந்தேன்!

மதி: தியாகியடா முத்து நீ. வீரனடா நீ. உன் உத்தம உள்ளம் உணராமல் போனேன். என்னே மன்னித்துவிடு; திலகா எப்பொழுதும் உன்னுடன்தானிருப்பாள்.

அடுகாடு : (மதிவாணன் மரத்தருகில் துயரந்தோய்ந்த முகத்துடன் நின்று கொண்டிருக்கிறான்)

மதி : ஐயோ, திலகா! என் அருமைத் தங்கையே! உன்னை இழந்து நான் உயிர் வாழ வேண்டுமா? பூங்கொடியே! உன் எடைக்கு எடை தங்கம் தேடிக்கொடுத்து முத்துமாணிக்கத்துக்கு திருமணம் செய்து வைக்கும் ஒரே நோக்கம்கொண்டுதானே, இந்த வேழநாடு வந்தேன்? இந்தக்கோலம் காணவா? சாலையிலும் சோலையிலும் காதற்கனி மொழி பேசி நீங்கள் மகிழ்ந்தாடுவதைக்கண்டு களிக்க வேண்டிய இந்தக் கண்கள் இந்தத் தீயையா காண வேண்டும். (தீ வைக்கப்படுகிறது) 'என் அண்ணு இருக்கிறார் எனக்கு என்ன குறை' என்று அன்பு ததும்பப் பேசி என்னை ஆனந்தத்தில் ஆழ்த்துவாயே. உன் அண்ணன் உனக்குத் தந்தது என்ன! இந்த பெருநெருப்பா? என் உடன் பிறப்பே...நெஞ்சிலே புகுந்து விட்ட பெரு நெருப்பு. திலகா, திலகா. இனி நான் என்று காண்பேன் உன் மலர் முகத்தை? தாயை இழந்தேன். தங்கையை இழந்தேன். வாழ்வின் ஒளி இழந்தேன்? பாலைவனமாகிவிட்டதிந்த என் வாழ்வு. அந்தோ திலகா!

★

(மடம்: அருமறையானந்தரும் மாசிலாமணியும், திலகாவால் காயம் பட்டுக் கிடக்கும் வேந்தன் வெற்றி வேலனைவ பற்றி பேசுகிறார்கள்.)

அருமறை: காலதாமதம்கூடாது. காரியம் கெட்டுவிடும். மதிவாண'ன் அரண்மனையில் மீண்டும் ஆதிக்கம் பெற்றால் நமக்குப் பேராபத்தாகும்.

மாசி: மன்னனை தொலையப்போகிறான், மதிவாணன் என்ன செய்யமுடியும்? இந்த பூஜை எதற்காகத்தான்! இதோ...மன்னனை அரனடிகொண்டு சேர்க்கும் அற்புதமான ஜெபமாலை. ஒருமண்டலம் ஜெபித்தால்போதுமே-கடும் விஷம் கக்கும் ஜெபமாலை.

அருமறை: ஏற்பாடு பிரமாதம்? அமைச்சனாக வேண்டியவன் நீ. சந்தேகமில்லை.

(இவற்றை குழந்தை மரகத மணி மறைவில் நின்று கவனிக்கிறாள்)

மாசி: வாரும், மடாலயம் சென்று நமது போர்வீரர்களையும் அழைத்துவருவோம்.

(அரண்மனை. 'மரகதமணியும் வெற்றிவேலனும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.)

வெற்றி: என்ன? என்ன?

மரகதம்: அப்பா. என் காதால் கேட்டேன்!

வெற்றி: கெடுமதியாளர்கள். பாடம் கற்பிக்கிறேன்....இப்போதே யாரங்கே.(பணியாள் வந்ததும்) குருதேவரைக் காணவேண்டும்.

★

(வீதி: இரண்டு சிப்பாய்கள் பேசிக்கொண்டிருப்பதை மதிவாணன் ஒட்டுக்கேட்கிறான்.)

சிப்பாய்: கதறுகிறான் மதிவாணன், எப்படித் தாங்கிகொள்வான் பாபம். புள்ளிமான் 'போலத்துள்ளி விளையாடிக்கொண்டிருந்த திலகா, வேங்கையால் கொல்லப்பட்ட விஷயம் தெரியாது மதிவாணனுக்கு.

மற்ற: தெரிந்தால் நெஞ்சு வெடித்துவிடும்.

சிப்: அன்று நான்தான் தவனக்காட்டுக் கோட்டையில் காவல்... மன்னன் திலகாவை...

மதி: யாரது? திலகாவை, மன்னன் என்று பேசினது?

சிப்: (பயத்துடன்) ஒன்றுமில்லை மதிவாணரே.

மதி: எதையோ மறைக்கிறாய் திலகாவையும் மன்னனையும் சேர்த்துப் பேசிய மர்மம் என்ன...என்ன...என்ன?

சிப்: மதிவாணரே. மன்னன் மாசற்ற உன் தங்கையை...

மதி: என் தங்கையை...ஐய்யோ...சொல்லு.. என் தங்கையை......

சிப்: அந்தத்தீயன் கற்பழித்துவிட்டான் ஹூம் மனம் குமுறிஅந்த மலர்க்கொடி கருகிவிட்டாள் . . . .

மதி: ஹா...என்ன. . .என்ன...என் தங்கையை, ஐய்யோ திலகா உனக்கா அந்தக் கதி? மன்னனா இவன்? நாடா இது? திலகாவின் அண்ணன்தானா நான்? பாடித்திரியும் பராரி என்று எண்ணி இப் பாதகம் புரியத்துணிந்தானா அந்தப் படுமோசக்காரன்? இதோ தீய வனைத் தீர்த்துக்கட்டாமல் திரும்பமாட்டேன்!

★

(வெற்றிவேலன் அரண்மனை-படுக்கையில் வெற்றிவேலன்-மதிவாணன் (கட்டாரியுடன் வருகிறான்)

ஆள்: (பதட்டமாக) மதிவாணன் கட்டாரி தூக்கிக்கொண்டு கடுங்கோபமாக. . .

வெற்றி: வருகிறானா? என் உத்திரவின்றி அவனை ஏதும் செய்ய வேண்டாம். . .

மதி: (உள்ளே வந்து தந்திரமாக) கவிஞன் என்ன,கனல்கக்கும் கண்களுடன் கரத்தில் கட்டாரியுடன் வந்திருக்கிறானே, என்று எண்ணுகிறாயா? காவலனே! திலகாவின் அண்ணன் வந்திருக்கிறேன், தீயவனே திலகாவின் அண்ணன், திலகாவுக்கு நேரிட்டகதியைத் தெரிந்து கொண்டு. . .உன்னை அதோ கதியாக்க வந்திருக்கிறேன்...வேங்கையிடம் பிடிபட்ட புள்ளிமான்போல், புயலில் சிக்கிய பூங்கொடிபோல் ஆனாளே, என் திலகம்? களங்கமற்ற அந்த முகத்தைக் கண்டாயே காதகா, எப்படி உன்மனம் இடம் தந்ததுஇழிசெயல்புரிய, எப்படி எப்படிக் கதறினாளோ என் தங்கை-எவ்வளவு கெஞ்சினாளோ-காலடிவீழ்ந்திருப்பாள்.- கடவுளைத் துணைக்கு அழைத்திருப்பாள்-கண்ணீரைப் பொழிந்திருப்பாள்-கல் மனம் படைத்தவனே. உன் மனம் இளகவில்லையா ஒரு துளி. . .எப்படி இளகும் மக்களைக் கசக்கிப் பிழிந்து மதோன்மத்தனாக வாழ்ந்து வந்தவனல்லவா. வறண்டதலை, இருண்டவிழி உலர்ந்த உதடு. சுருங்கிய முகம், காய்ந்த வயறு, சோர்ந்த உடல் ஒட்டைக்குடிசை, ஒடிந்த பாண்டம். மாரடித்து அழும் மனைவி, மண்ணில் புரளும் மக்கள், தேம்பித்தவிக்கும் தாய், சாந்திழந்த தங்கை-உன் ஆட்சியிலே காணக் கிடக்கும் காட்சிகள் இவை. இந்தக் கொடுமைகளைச் செய்து பழக்கப்

பட்டுப் போய்விட்ட பேயனல்லவா நீ... கணக்குத் தீர்க்கும் காலம் வந்துவிட்டது காவலனே! கணக்குத் தீர்க்கும் காலம் வந்துவிட்டது காவலனே! திலகாவின் கண்ணீரடா இது…கன்னியின் கண்ணீர். காதகனே, உன்னால் கற்பழிக்கப்பட்ட என் தங்கையின் கண்ணீர். கண்கள் கூசுகிறதா–இறுக மூடிக்கொள். இகயத்தில் இதைப் பாய்ச்சாது விடேன். என்னைத் தடுத்துவிட்டால் தப்பித்துக்கொள்ளலாம் என்று எண்ணாதே இந்த ஆணவ அரசை அழித்தொழிக்கும் ஆற்றல் மிக்க வீரர்கள் வருகிறார்கள்! (அருமறையானந்தரும் மாசிலாமணியும் விஷமிடப்பட்ட ஜெபமாலையுடன் உள்ளே நுழைகிறார்கள்.

மாசி: என்ன அக்ரமம். நீசா மன்னனையா, கொல்லத் துணிந்தாய்? எங்கள் மார்க்க ரட்சகனையா தாக்கத் துணிந்தாய்? மன்னா, இந்த மாபாவி...

வெற்றி: கட்டாரியால் குத்த வந்தான்......

மாசி: மகா பாதகன், மகாபாதகன், இவனுக்கு மரணதண்டனைதான் தரவேண்டும்.

அருமறை: நாத்திகன் - பழி பாவத்திற்கு அஞ்சுவானா? இவனைக் கொல்லாவிட்டால், மன்னா தர்மம் தழைக்காது.

வெற்றி: கிடக்கிறான். அனுபவமற்றவன், காதகனின் கத்தியும் கட்டாரியும் என்னை என்ன செய்யும், குரு தேவரின் ஆசி இருக்கும்போது......இவன் அறியான், எனக்குச் சாகா வரம் அருள தாங்கள் தயாரித்த ஜெபமாலை இருப்பதை. எனக்காக விசேஷ பூஜை செய்து தயாரித்த ஜெபமாலை அல்லவா இது! ...ஜெபம் நடக்கட்டும்....கொடியவர்களே, மத வேடமிட்டுத் திரிந்து என் மதியை மாய்த்த மாபாவிகளே! ஆதிக்க வெறிக்கு ஆண்டிக் கோலமிட்ட அக்ரமக்காரர்களே, உங்கள் படுமோசம் அறியாமல் உத்தமன் மதிவாணருக்கு கேடு பல செய்தேன். நானோர் கடையேன், நில்லாதீர் என்முன்......இழுத்துச் செல்லுங்கள் ...சிறைக்கு...

மதி: வேந்தே...வேந்தே.

வெற்றி: உத்தமனே, உன்னிடம் மன்னிப்புக் கேட்கிறேன்! மக்களிடம் மன்னிப்புக் கோருகிறேன். இதோ மன்னிப்பு மடல். மக்களாட்சி மடல்! மதிவாணா, நான் திருந்திவிட்டேன்! மனிதனானேன்!

(அருளாளர் பிரவேசித்து, அருமறையானந்தரை நோக்கி)

அருளாளர்: சன்மார்க்கம் பரப்பச் சொல்லி உன்னை அனுப்பினேன். நீ சுயநலப் பேய் பிடித்து ஆடி அழிந்தாய். மக்களுக்கு உழைக்கச் சொல்லி உள்ளே மடாலயத் தலைவனாக்கினேன். நீயோ மக்களைக் கசக்கிப் பிழிந்து கொழுத்தாய், மாபாவியானாய், போ, போ, உன்னைக் காண்பதும் மகாபாவம் - மக்கள் மன்றம் கூடு

கிறதாம் அங்கு சென்று மன்னிப்புக் கேட்டுக்கொள்! மார்க் கத்தையே நாசமாக்கிவிட்டாய். மகாபாதகன் நீ! மகா பாதகன் நீ!

★

(குமாரி, மதிவாணன், பூங்காவனம் மூவரும் ஒன்றுகூடி மகிழ்கிறார்கள்.)

மதிவாணன்: மக்களாட்சி மலர்கிறது: வேழநாட்டவரே! வீரரே! மக்களாட்சி மலர்கிறது.

குமாரி: இங்குமட்டுமல்ல. என் நாட்டிலும் மக்களாட்சி தான் - ஓலை அனுப்பிட்டேன்.

மதி: மட்டற்ற மகிழ்ச்சி. மக்களாட்சி, உழைப்பவரே உயர்ந்தோர். உலுத்தருக்கு இடமில்லை. உடைமை எனக்கே என்று கொக்கரிக்கும் மகாலுப் பொம்மைகளுக்கு இடமில்லை. மக்களுக்கே நாடு சொந்தம், சக்திக்கேற்ற உழைப்பு; தேவைக்கேற்ற வசதி! அறிவு பரப்புவோம் அறநெறியை மறவோம்!

(இந்த சமயத்தில் அருமறைபானந்தரையும் மாசிலாமணியையும் கொண்டு வருகிறார்கள்.)

மதிவாணன்: மகானுபாவர்கள் வந்திருக்கிறார்கள்.

பொது மக்கள்: அடித்து விரட்டுங்கள் இவர்களை!

மதி: வேண்டாம், இவர்கள் தாராளமாக உலவ அனுமதியுங்கள், இவர்கள் மக்கள் மதிபெற்றவர் என்பதை எடுத்துக் காட்டும் திருத்தூதர்களாக இருக்கட்டும். பாடுபட்டு பிழைக் கட்டும். பசி பட்டினி இன்னது என்று தெரியட்டும்.

இனிஒரு விதி செய்வோம். அதை எந்த நாளும் காப்போம். அன்பே கடவுள். அறநெறியே அபிஷேகம்! தூய உள்ளமே கோயில்! மக்கள் பணியே பூஜை! அதற்காக வாழ்வோம்!

(பிறகு கொடி வணக்கம்.)

வாழிய மாநிலம் வாழியவே - தமிழ்
மாண்பெழில் நூன்முறை வாழியவே
வளமது நின் மக்களாட்சியுமே
மதிவாணர்கள் மாட்சியுமே
நிலவா நிதிபோல் உயர்வான் சுடர்போல்
நீடூழி காலம் வாழியவே
வாழிய மாநிலம் வாழியவே!

[மங்களம்]

திரை இசை

பாடல்கள்: உடுமலை நாராயண கவி

பாட்டு—1 [செஞ்சுருட்டி

வெற்றி வீரஞ் செறிந்த முகம் சுடர்போலே
அருள் மேவும் இரண்டு விழிமலர் போலே
குண ஈரம் படிந்த மனம் இயல்பாலே
எதும் ஈயும் கரங்கள் மொழிநிறை கோலே
மும்மா வேந்தர் காத்த தமிழ் மரபாளன்
முத்து மாணிக்கமென்ற எழில் பெயராளன்
கற்ற பாவேந்தர் சாற்றும் அவன் புகழ் வாழி
வளர்பார் மீது வாழி மிக நீடுழி!

(மதிவாணன் - சிந்துபைரவி)

வீரஞ் செறிந்த இளஞ்சூரியனைக் காணாமல்
சீருலவும் தாமரைப்பூ மலர்ந்தது பார் இங்கே(சீருலவும்)
நேரினில் நான் கண்ட அதிசயமே எந்தன்
நெஞ்சறியும் இந்த ரகசியமே!

பாட்டு—2

மதிவாணன் பாடுவது - (வண்டிபபாட்டு)

கன்னித் தமிழ் சாலை யோரம் சோலையிலே
கவிதைக் கனிகள் உண்ணும் பறவைகளே
தென்னவர் மூவேந்தராம் தமிழ்வளர்த்த
சேர சோழ பாண்டியனைப்பாடுங்களே!

மேருமலை மீதினிலே கொடி நாட்டினான்—சேரன்
வீரங்காட்டி கனகவிசயன்தனை வாட்டினான்
பாறங்கல்லை உடைத்தெடுத்தான்—
பகைவனைச் சுமக்கவைத்தான்

பத்தினிப் பெண்சிலை சமைத்தான் கேளுங்களே—அந்த
பாடல் பெற்ற தேவி தன்னைடபாடுங்களே!
சீறிவந்த புலியதனை முறததினாலே அடித்து
சிங்கார மறத்தி ஒருததி துரத்தினாளே—இதை
ஊரறிய உலகறிய உங்களாலே
உண்மையான பெண்மை வாழ—பாடுங்களே!

பாட்டு—3 ஆதி

பல்லவி

சமரச நிலையருள் சந்நிதானம்
சந்ததமும் எம்மதமும் சம்மதமாகக் காணும் (சம)

அநுபல்லவி

தாமரைமேல் தண்ணீர்த் துளிபோல்
தாரணி வாழ்வினில் நேர்மை கொண்டார்
யாமெனும் அகங்காரம் காமியம் வென்றார்
அருமறையானந்தப் பெயர் குலாவும்
தெருள் மெய்ஞ்ஞான குருபரன் (சம)

பாட்டு—4 அருமறை

பரமன் உனக்கு அரிய ஞானத்தைத் தந்திருக்கிறன்
—அவன் புகழ்பாடு

திரு அருளை நாடு உன் இசையால்
அஞ்ஞான இருள் நிச்சயம் நீங்கும்

மாண்டு

எங்கும் நிறைவான ஜோதியே—இணையில்லா
இன்பரசமான சேதியே இகபர இரண்டிலும் (எங்)
செம்பொன்னணி நவமணியே செல்வமெனுந்
—திருவுருவே

க்ஷேம நலம் யாவுமுந்தன் செயலாலே
அன்பர்சூழ் அருளகமாம் ஆதீனத்தரசே
ஆண்டகை நீயே நானேயாகும் துணைபுரிவாய் (எங்)

பாட்டு—5 தேசு

நிலவே நிலவே ஆடவா
நீயன்புடனே ஓடிவா
மலராம அரும்பின் எழில் மேவும்
மரகத மணியுடன் ஆடவா
நீலவானக் கடல் நதியே
நித்திய மணியே வெண் மதியே
சீலம் அருளறம் சேரும் குணவதி
சிங்கார நீதியுடன் ஆடவா (நிலவே)

நீ மண்ணில் அமுதம் சிந்திடுவாய் இவள்
மழலைக் கமுதம் தந்திடுவாள்
உன்னில் இவளே உயர்ந்தவள் அதனல்
உல்லாசமாக ஆடவா! (நிலவே(

பாட்டு—6 **இன்ப நிலையப் பாடல்**

மதிவாணன் பாடுவது

(பல்லவி)

எங்கும் இன்பமே உல
கெல்லாம் இன்பமே யாகுமினி (எங்)

அநுபல்லவி]

மங்களமே பெறும் மாண்பு கொண்டாடும்
மானிட வாழ்வினில் மனது நாடும்
புனிதமான நினைவு போல (எங்)

சரணம்

நிலவினிலே மாலை நேரத்திலே அலை
நீந்தவரும் ஆழி யோரத்திலே வெண் (நி)
கலைதரும் அமுதமான கானத்திலே இரு
காதலர் பாடும் சிங்காரத்திலே
மலர் நறுமணம் வீசும் வனந்தனிலே யவ்
வனந் தனிலே மக்கள் நலந்தனிலே புய
வலிமை சேர மறவர் திறனிலே தனது
மழலை பேசும் மொழி விழியிலே பெண்கள்
எழிலிலே உழவர் செயலிலே அறிஞர்
சபையிலே புலவர் கவியிலே ஐம்
புலனிலே நன்றே காணும்
அறிவானந்தம் இன்பம்
அன்பால் மேவும் இன்பம்
பொங்கும் என்றும் சொந்தம் இயல்வன (எங்)

பாட்டு—7

(மதிவாணன் - குமாரி பாடுவது)

குமாரி: மாவொடு தழுவும் மலர்க்கொடி போலே
மாது நான் மருவ முடியாதோ ?

மதி மாதுன்னால் முடியும் ஆனாலும் மாண்பெனும்
மணிமுடி தடையுண்டு தெரியாதோ ?

குமாரி மேவும் காதலில் உயர்வு தாழ்வெனும்
வித்யாசம் நினைப்பதும் இயல்பாமோ ?

மதி. விழியால் மொழியால் வித்யாசமில்லாது
வினவுகிறாய் பதில் சொல்லப்போமோ ?

குமாரி : கலப்பை தூக்கி முன்னாலே கஞ்சிக் கலயம்
—தாங்கிப் பின்னாலே
கழனி செல்லும் அழகைப் பாரும் கண்ணாலே
—புருஷன் மனைவி

மதி : உழைப்பினிலே பழக்கத்திலே ஒன்றுபட்ட
— இனபச்காதல் தன்னாலே அவர்
உடல நிழலாய் வாழவந்தார் மண்மேலே

குமாரி : பாத்தியிலே நீர் பாயச்சும்
பாவையைப் பாரீர்

மதி · அதைப் பார்த்துக் கணவன் ஏத்தம் இறைக்கும்
நேர்த்தியைப் பாராய்

குமாரி ஆத்துக்குள்ளே ஆடை துவைக்கும்
அழகியைப் பாரீர்

மதி : அவள் அருகில் நிற்கும் உரிமை கொண்டான்
ஆனந்தம பாராய்

இருவரும் : காணும் காட்சியே காதல் ஆட்சிதான் !

பாட்டு—8

மதிவாணன் பாடுவது

ராஜா மகள் ராணி புது
ரோஜா மலர் மேனி மிக
பேஷான ஒரு மாமி
வரப்போறாள் பாரு நீ (ராஜா மகன்)
சீனி ச்க்கரைக் கட்டி வாய்
சிவந்த பவளப் பெட்டி அவள்
சிரிச்ச முகத்துச் சிங்காரக் குட்டி
உன் போல படு சுட்டி (ராஜா மகன்)
வீணை மீட்டி அவள் பாடுவாள் உடன்
வித விதமாக நீயும் ஆடலாம்
வேடிக்கை பல செய்வாள் உன்னை
விருப்பமாக வைவாள் வேண்டுவாள் உன்னை
மின்னே பொன்னே கண்ணே யென்பாள்
(ராஜா மகன்)

பாட்டு—9 நாடகப் பாடல் (மாசிலாமணி)

பாட்டு—10 சொர்க்கவாசல் பாட்டு

பாட்டு···11

ஆகும் நெறியெது? ஆகா நெறியெது?
ம்... அறிந்து சொல்வீரே—நன்றாய்ப்
புரிந்துகொள்வீரே

ஆகும் நெறியெது? ஆகா நெறியெது?
ஆஸ்தியைச் சேர்க்கும் சுயநல மார்க்கம் சாஸ்வதமா
இன்பம் ஏற்படுமா?
பூமி ஆஸ்தியைச் சேர்க்கும் சுயநலமார்க்கம்
சாஸ்வதமா? இன்பம் ஏற்படுமா?
மக்கள் சமத்துவம் காட்டும் பொதுநல மார்க்கம்
தான் சுகமா துன்பந்தான் தருமா? (மக்கள்) (ஆகும்)

சம்சாரம் விடுத்து சந்யாசம் அடுத்து
தனிமையிலிருப்பது சாத்தியமா அது
எளிதில்லை யென்பதில் மனப்பயமா?
சரிசமமாக இருவரும் வாழ்வதில்
தகுமெனச் சொல்வதில் தரங்கெடுமா அதில்
பகைமை கொண்டாடுவது பயன்படுமா?
காணிக்கை வாங்கி கடமையை மறந்து
காலங் கடப்பது அவசியமா?
கடவுளின் பேரால்...
அது கதிதரும் என்பதும் வாஸ்தவமா?
கானரும் அனபால் நாணயமாகக் கடமையைப் புரியெனல்
அவசியமா?
அதற்குடன்பட மறுப்பது அறிவினமா? இதில் (ஆகும்)

போட்டி போட்டு சீமானகள் வீசிடும்
பொன்னும் பரகதிக்கவசியமா? அதிர்
வேட்டு வானங்கள்
சிங்காரங்கள் காட்டும்
வேடிக்கையெல்லாம் அவசியமா?
நாட்டுக்காக அது தேவையில்லையெனில்
ஆத்திரங் கொள்வது அறிவினமா? அது
பாட்டன் பூட்டன் வைத்த பவுசைக் காட்டும் செல்வம்
பேட்டியின்றது அவசியமா?
அரசர் தம்மை உருப்போட்டு
அருமறையாளன் அருள் சீட்டு
அறிவும வலிவும எபாங்கொடுக்க
ஆமோ அதுவும் அவசியமா?
உலகு கண்டதோர் நாதன்
அது உண்மை என்பதே மேவும்—இதைப்
பெருமையான சிலர்
விளங்க வைப்பதும் முறையிது
வென்பது அவசியமா? இதில் (ஆகும்)

பாட்டு 12

ஜெயிலில் பெண்கள் கோரஸ்

ராஜாதி ராஜன் நம்மராஜா அவர் நம்ம ராஜா—இந்த
ராஜ்யத்தை யாளவந்த பொம்மை ராஜா
—ஆமா பொம்மை ராஜா
நவராத்திரியிலே அவர் கொலுவிருப்பார்—அர்த்த
ராத்திரியில் நேர்த்தியாய் குடைபிடிப்பார்
—ராஜா குடைபிடிப்பார் மக (ராஜா)

கோமாளித் தன்மையால் எட்டாத பழத்துக்கு
கொட்டாவி விட்டு மதிகெட்ட ராஜா—மானங்கெட்டராஜா
இப்போ ஏப நேந்த மாப்பிள்ளை ஆகியே பெண்ணாலே
இளிச்சவாப்பட்டம் பெற்ற மோச ராஜா மோச ராஜா
—மக - (ராஜா)

பாவலனை நாட்டைவிட்டு ஓட்டிய ராஜா—அவன்
பாட்டைக்கேட்டு பலபேரை வாட்டிய ராஜா
கோல ராஜா கொடும்பாவி ராஜா இனிக்
கோட்டை விடப்போகும் விளையாட்டு ராஜா—மக (ராஜா)

மிக ரோஷக்காரர்போலெ மீசைக்காரர் சுக
வாசக்காரர் படுமோசக்காரர் வெளி
வேஷக்காரர் பெண்கள் ஆசைக்காரர் எந்த
வேலையுஞ் செய்யாதுண்ணும் காசுக்காரர் ஆமா காசுக்காரர்
—மக (ராஜா)

(திலகா - பைத்தியப் பாட்டு)

ஓகி - ஓகி - ஓகி
ஆஹா ஆஹா
ராஜாதி ராஜன் நம்ம ராஜா இந்த
ராஜ்யத்தை ஆளவந்த பொம்மை ராஜா
ஆஹா - ஆஹா

பாட்டு

நானே இந்த நாட்டில் மகராசா இன்று
நல்லோர்முதல் எல்லோரையும் மதிப்பேன் லேசா—நானே
காணேன் இங்கே மதி மந்திரிமார் தம்மை
காரணமே யானறியேன் காவலர்கள் யாரங்கே—நானே
கூ கூ
கூக் கூக்கு என்றே கூவாதே (ஸ்)

குயிலே குருட்டாந்தை தூங்கும்போது குறும்பு தனம்
பண்ணுதே [குக்கு]
என் கோபம் வந்தால் பொல்லாதே சிறைக்
கூண்டுக்குள்ளே செல்லாதே
கொம்பில் நின்றே தாவித்துள்ளாதே மரக் ! காம்பில்
பகல் குருட்டாந்தை தூங்கவேணும்
(குறும்புத்தனம் பண்ணுதே ! கூக்கூ!)

பாட்டு 13

ராசா என் தோட்டத்திலே வந்து
ரோசாப்பூக் கொய்வதாரடி பெண்ணே
அலுக்கி குலுக்கி
அஞ்சாத நெஞ்சோடு ஆ - ளும் - நீ
பேசாமே போகாவிட்டா இப்போ
லேசா விடமாட்டேனுன்னே
ஆ. ஆ. ஆ. ஆ. ஆ. ஆ. ஆ. ஆ. நவ
ராத்திரியிலே இவர் கொலுவிருப்பார்
அர்த்த ராத்திரியிலே நேர்த்தியாய் குடைபிடிப்பார்
—மக (ராஜா)

கடுந்தண்டனே—கடுந்தண்டனே
காலைமாலை கன்றுக்குட்டிக்கு
பாலை ஊட்டாதே - பசுவே
பாலை ஊட்டாதே - உயர்
காவலன் யிட்ட கட்டளை மீறி
வாலை யாட்டாதே பசுவே
வாலையாட்டாதே ஆட்டினால்
தென்றல் காற்றால் அசைந்தசைந்து
செடியே ஆடாதே - வளரும்
கொடியே ஆடாதே - இந்த
தேசந்தன்னில் ராசன் போடும்
தடையை மீருதே - போடுந்
தடையை மீருதே - மீறினால் (கடுந்)

பாட்டு 14 *கொடி வணக்கம்*

வாழிய மாநிலம் வாழியவே—தமிழ்
மாண்பெழில் நான்முறை வாழியவே (வாழி)
வளமது நீள்மக்க ளாட்சியுமே
மதிவாணர்கள் மாட்சியுமே அலை
வாரிதிபோல் உயர்வொன் சுடர்போல்
நீடூழி காலம் வாழியவே!

திரை நாடகம்

சேடியர்கள் :

மாசிலாத மாமணி மனோன்மணி வந்தனம்
மாண்பொடு உமதொடு பாங்கிமார்கள் வந்தனம்
மானிலம் ஆண்டிடும் ராணியார்
வாழ்க, வாழ்கவே ?

கோணங்கி :

வாழ்க வாழ்கவே !

ராணி : உல்லாசமிகும் பாங்கிமார்களே
உயிரினும் அருமையாம் தருணிகாள்
எல்லோரும் இன்று வருக வருக ! **(உல்)**
கலாப மயில் கூட்டம் போல
காட்டில் நாம் உலாவலாம்
கலைமான் புலி யானை சிங்கம்
கரடி வேட்டையாடலாம்
கத்தியீட்டியும் வில் வேலும்
கரத்தி லெடுங்கள் புறப்படலாம் !
மதனமோகனன் எந்தன் மணவாளன்
எந்தன் மணவாளன் இன்பந்தருந் தோழன்
கந்த மலர்மாலை சூடும் காதல் கண்ணாளன் **(மதன)**

ராணி : வெட்கம் வேண்டாம் சாமி பக்கத்தில் வா—இனி
வீண் ஜாலம் கூடாது, விளையாடவா (வெட்கம்).

கோணங்கி :

வேண்டாமம்மா வீணே விபரீத மேன்

ராணி : விசனம் இனிமேல் வேண்டாம் நான் சொல்கிறேன்

(வசன நடை)

கோணங்கி :

தாயே தஞ்சம் தமியேன்
என்ன செய்யணும் ?

ராணி : இந்தா, தாலிக்குப் பதிலாக
இதை யென் கழுத்தில் கட்டணும்

கோணங்கி : எப்படி ?

ராணி : இப்படி.

லாலி லாலி, சுப லாலி, லாலி
மூளைகெட்ட ராணிக்கும் கோணங்கி ராஜாக்கும்
—லாலி...

வாங்க வாங்களய்யா வைத்தியரே இங்கே
வந்து கொஞ்சம் பாருமையா பெரியவரே
மன்னியெங்கள் ராணி மயங்குவதைப் பார் நீ
மனங்கொண்ட நோய் தீரவே ஏதேனும்
மருந்துண்டோ சீக்கிரமாகவே

(வசன நடை)

எங்கே கையை நீட்டு ஆ—அடிக்குது
கண்ணை காட்டு ஓ அதேதான்
வாயைத் தொற, நாக்கை நீட்டு
முழுங்கு முழுங்கு சரியாய்ப்போகும்!

ராணி :

ராணியுடம் சமனமாக
ராசாவை போல் நிற்கும்
ஆசாமி யார் சொல்லு
யாரடா நீ இங்கே வந்தவன் (யாரடா)

கோணங்கி :

காதல் கண்ணாளனம்மா கட்டிக் கொண்ட தோழனம்மா
சட்டப்படி சொல்லும்மா, ஆதரிக்கத் தடையேனம்மா—

ராணி :

மூடனை இழுத்துச் செல்லுங்கள் மூன்றாய்த்தலை
முடியைச் சிரைக்கச் சொல்லுங்கள்
காதகனைக்கழுதை முதுகினிலேற்றுங்கள்
கரும்புள்ளி செம்புள்ளிகள் கன்னத்திலே குத்துங்கள்
வீதியெலாம் சுற்றி சுற்றி
வெட்கங் கெட செய்யுங்கள்
வெட்டுங்கள் வெட்டுங்கள் கட்டி
குத்துங்கள் குத்துங்கள் எட்டி (மூடனை)

(மங்களம்)

K. G. Press, 119, Broadway, Madras